Registered as a Newspaper

# தினச்செய்தி

வாரமலர்

Registered at the Department of Posts of Sri Lanka Under No QD/29/News/2016

அதிக பக்கங்களுடன் ...

- பிரிகேடியர் கமல் குணரத்தினாவின் நேரடி மேற்பார்வையில் - பக். 05
- மீண்டும் யாழ்ப்பாணம் எரிகிறது. - பக். 08
- வியாழ மாற்றம்... - பக். 21

விலை : ரூபா 20.00

செய்தி - 51 | செப். 17-23, 2016 | பக்கம் - 24

# வெருட்டுகிறார் சம்பந்தன்



(திருகோணமலை)

நாம் எதிர்பார்க்கும் அரசியல் தீர்வு ஒன்று முன்வைக்கப்படாவிட்டால், அரசியல் அமைப்பு சட்டவரைவு முறையில் அரசாங்கம் தவறு விடுமாக இருந்தால் இதில் எமது எதிர்பார்ப்புகள் நிறைவேறாமல் இருக்குமாக இருந்தால் நாம் மீண்டும் ஆயுதம் ஏற்க மாட்டோம். ஆனால் எம்மை ஆள முடியாத நிலையை ஏற்படுத்துவோம் என, சம்பந்தன் வெருட்டியுள்ளார்.

புதிய அரசியல் சாசனத்தை உருவாக்குவதில் நாம் முக்கிய பங்கை வகிக்கின்றோம். எமது எதிர்பார்ப்பு இம்முறை உருவாக்கப்படும் புதிய அரசியல் அமைப்பின் ஊடாக தமிழர்களின் நீண்டகாலப்பிரச்சனைகளுக்கு அரசியல் தீர்வு காணப்படவேண்டும் என்பதாகும். ஆனால் இதுவரை உருவாக்கப்பட்ட எந்தவொரு அரசியல் அமைப்பும் தமிழர்களின் ஆதரவுடனோ சம்மதத்துடனோ உருவாக்கப்படவில்லையென சம்பந்தன் கூறினார்.

02 இல்

## கிளிநொச்சி பொதுச் சந்தையில் பாரிய தீ

### பல கோடி ரூபா பெறுமதியான சொத்துக்கள் நாசம்



(கிளிநொச்சி)

கிளிநொச்சி பொதுச்சந்தையில் நேற்று இரவு 8 மணியளவில் ஏற்பட்ட தீ இன்று அதிகாலையே கட்டுக்குள் கொண்டு வரப்பட்டது. தீ ஏற்பட்டதை சிறிது நேரத்தில் அவதானித்த போதிலும் தீ அணைப்புச்சேவை இன்மையால் உடன் கட்டுப்படுத்த முடியவில்லை. பிரதேச சபையினரின் நீர்த்தாங்கியும் இரணைமடு இராணுவத்தினரின் தீ அணைப்பு இயந்திரம் சுமார் 10 மணியளவில் சம்பவ இடத்திற்கு வந்தபோதும் தீயை கட்டுப்படுத்த முடியாமலே போனது. இந்த நிலையில் யாழ். மாநகரசபையின் உதவி கோரப்பட்டது.

02 இல்

# பிரபாகரனை கோவணத்துடன் படம் பிடிக்கவைத்த சரத் பென்சேகா



(கொழும்பு)

இறுதி யுத்தத்தில் பிரபாகரன் இறந்து விட்டார் என்று அறிவிக்கப்பட்டது. இந்த அறிவிப்பை 53 வது படைப்பிரின் அன்றைய தளபபதி பிரிகேடியர் கமல் குணரட்ண வெளியிட்டார்.

அன்றைய இராணுவத் தளபதி சரத் பொன்சேகாவிற்கு பிரபாகரனின் இறப்பு சம்பந்தமாக கைப்பேசி மூலம் பிரிகேடியர் கமல் குணரட்ண அறிவித்தார்.

அப்போது பிரபாகரன் அணிந்திருந்த இராணு சீருடையை உடனடியாக அகற்றுமாறு இராணுவ தளபதி சரத் பொன்சேகா கட்டளையிட்டதாக பிரிகேடியர் கமல் குணரட்ண அண்மையில் தான் எழுதி வெளியிட்ட நந்திக்கடலுக்கான பாதை என்ற நூலில் குறிப்பிட்டுள்ளார்.

யுத்த காலத்தில் இராணுவத்தின் 53வது படைப்பிரிவின் தலைமைத் தளபதியாக பிரிகேடியர் கமல் குணரட்ண தான் செயற்பட்டிருந்தார்.


கடந்த செப்ரெம்பர் 5 ஆம் திகதி அவர் இராணுவ சேவையில் இருந்து ஓய்வு பெற்றார். அப்போது அவர் இராணுவ மேஜர் ஜெனரலாக பதவி வகித்தார். இராணுவ சேவையில்





இருந்து அவர் ஓய்வு பெற்ற போது அவர் எழுதிய "நந்திக் கடலுக்கான பாதை" செப்ரெம்பர் ஆறாம் திகதி கொழும்பு நாலாந்தா கல்லூரி மண்டபத்தில் வெளியிடப்பட்டது.

02 இல்



தினச்செய்தி
வாரமலர்

Registered at the Department of Posts of Sri Lanka Under No QD/29/News/2016

தொலைபேசி : 021 2242636
தொலைநகல் : 021 2242139
இணையதளம் : www.thinacheithi.com/lk

## வெளிநாட்டில் வாழும் இலங்கையர்களுக்கான வாக்களிக்கும் உரிமை

வெளிநாட்டில் வாழும் இலட்சக்கணக்கான இலங்கையர்களுக்கு வாக்குரிமை வழங்கி வாக்களிக்கும் முறையை முழுமைப்படுத்த வேண்டுமென்பதில் தேர்தல் ஆணையம் அக்கறை காட்டுகின்றது.

கிட்டத்தட்ட 20 லட்சம் இலங்கையர்கள் வெளிநாடுகளில் தங்கி வேலை செய்து வருகின்றார்கள். அவர்களுக்கு வாக்களிக்கும் உரிமையை வழங்குவதற்கு நாடாளுமன்றம் சட்டம் இயற்ற வேண்டும் என தேர்தல் ஆணையாளர் மஹிந்த தேசப்பிரிய எதிர்பார்க்கின்றார்.

அண்மையில் இலங்கையிலுள்ள வெளிநாட்டுப் பத்திரிகையாளர்களை தேர்தல்கள் ஆணையாளர் மஹிந்த தேசப்பிரிய சந்தித்த போது இந்த நாட்டில் தேர்தல் முறையை முழுமைப்படுத்துவதற்கு, வெளிநாட்டில் வாழும் இலங்கையர்களுக்கு நாட்டில் நடைபெறும் தேர்தல்களில் வாக்களிக்க சந்தர்ப்பம் வழங்க வேண்டும் என தேர்தல் ஆணையகம் கருதுவதாக கூறினார்.

இந்த நாட்டின் பிரஜைகள் வாக்களிப்பு நிலையங்களுக்கு காலை ஏழு மணி முதல் மாலை நான்கு மணிக்கு இடையில் சென்று வாக்களிப்பதற்கு அனுமதிக்கப்படுகிறார்கள். அதே சமயம்,சில அரச அதிகாரிகள் தேர்தல் வேலைகளில் நேரடியாக ஈடுபடுவதனாலும், பாதுகாப்புக் கடமைகளில் ஈடுபடுவதனாலும், அவர்களுக்கு தபால் மூலம் வாக்களிக்க அனுமதிக்கப்படுகின்றது.

அதே போல , தேர்தல் நாட்களில் ஏதாவது முக்கிய வேலைகளில் ஈடுபடும் இலங்கைப் பிரஜைகளுக்கும் தபால் மூலம் வாக்களிக்கும் சந்தர்ப்பம் இல்லையெனில் வேறு எந்த முறையிலாவது வாக்களிக்கும் சந்தர்ப்பம் வழங்கப்பட வேண்டும் என தேர்தல்கள் ஆணையாளர் மஹிந்த தேசப்பிரிய வலியுறுத்தியுள்ளார்.

வீடு வாசல்கள் அற்றவர்களுக்கும் இவ்வாறு வாக்களிக்கும் வசதிகள் செய்து தரப்பட வேண்டும் என்றும் , இவ்வாறு இருப்பவர்கள் எத்தனை பேர் என்ற விபரங்கள் அதிகாரிகளினால் தற்சமயம்,திரட்டப்பட்டு வருவதாகவும் குறிப்பிட்ட அவர்,மேலும் இதுவரை குடியிருப்பதற்கான எந்த வசதிகளும் இல்லாமல் கொழும்பு நகரில் மட்டும், கிட்டத்தட்ட 1500 பேர் வீதியோரங்களில் வாழ்ந்து வருவதாகவும் குறிப்பிட்டார். இவர்களுக்கும் வாக்களிக்கும் உரிமையை வழங்குவதற்கு தேர்தல்கள் ஆணையகம் நடவடிக்கை எடுத்துள்ளதாக அவர் மேலும் குறிப்பிட்டார்.

தற்சமயம் இலங்கை, இந்தியாவின் தேர்தல் முறையை பின்பற்றி வருகின்றது எனவும், அண்மையில் இந்திய நாட்டின் உச்ச நீதிமன்றம் வெளிநாடுகளில் வாழும் இந்தியர்கள் வாக்களிக்கும் முறையொன்றை உருவாக்குமாறு தேர்தல் ஆணையகத்தை கேட்டுக்கொண்டுள்ளதையும் சுட்டிக்காட்டினார். இதனையடுத்து, இந்தியா என்ன செய்யப் போகின்றது என்பதை தேர்தல் ஆணையம் கூர்ந்து அவதானித்து வருவதாகவும் தேர்தல்கள் ஆணையாளர் தெரிவித்தார்.

அதே போலவே வேறு நாடுகளின் தேர்தல் முறைகளையும் அவதானித்து வருவதாக தெரிவித்தார்.ஆகையினால் வெளிநாடுகளில் வாழும் இலங்கையர்களை தேர்தலில் வாக்களிக்க வைப்பதற்காக சில நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளதாக குறிப்பிட்ட அவர், வெளிநாடுகளில் உள்ள இலங்கை ஸ்தானிகராலயங்களிற்கு சென்று வாக்களிப்பது குறித்து ஆராய்ந்து வருவதாக தெரிவித்தார்.

மேலும் , மத்திய கிழக்கு நாடுகளில் இவ்வாறான ஏற்பாடுகளை எவ்வாறு செய்யலாம்? அவற்றில் உள்ள பிரச்சினைகள் என்ன? என்பது பற்றி ஆராய்வதோடு, அரபு நாடுகளிலும் தென்கொரியாவிலும் வேலை செய்யும் இலங்கையர்கள் வாக்களிக்கச் செல்வதற்கு அவர்களை வேலைக்கு வைத்திருப்பவர்கள் அனுமதிப்பார்களா என்பது குறித்தும் ஆராய்வதாக அவர் தெரிவித்தார்.

இன்றைய கால கட்டத்தில் நாட்டிலுள்ள 15 மில்லியன் வாக்காளர்களில் 12 சதவீதமானவர்கள் வெளிநாடுகளில் வாழ்கின்றனர். இது பற்றியெல்லாம் தேர்தல் ஆணையகம் கவனத்தில் எடுத்து அதற்கான நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளது என்றும் மஹிந்த தேசப்பிரிய குறிப்பிட்டார்.

வெளிநாடுகளில் வாழும் இலங்கையர்களுக்கு இலங்கையில் நடைபெறும் தேர்தல்களில் போட்டியிடவும் வாக்களிக்கும் சந்தர்ப்பமும் நிட்சயம் வழங்கப்பட வேண்டும் என்பதே தினச் செய்தியின் விருப்பம் ஆகும்.

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி...)

## பிரபாகரனை கோவணத்துடன்...

அந்தப் புத்தகத்தில் 730-734 வரையான பக்கங்களில் பிரபாகரனின் உடலில் இருந்த இராணுவ சீருடை நிர்ப்பந்தத்துடன் கழற்றப்பட்டு கோவணத்துடன் இருந்த படம் சர்வதேச ஊடகங்களால் வெளியிடப்பட்டது.

பிரபாரனின் இறப்பு பற்றிய விபரங்களை பிரிகேடியர் கமல் குணரட்ண முதன் முதலாக இராணுவத் தளபதிக்கு அறிவித்திருந்தார்.

'பிரபாகரனின் இறப்பு பற்றி முதலில் இராணுவத்தளபதிக்கு அறிவிக்க வேண்டியது மிகவும் அவசியம் ஆகும். இராணுவத் தளபதிக்கு அறிவிக்க வேண்டியது தான் முறையாகும். அதனையடுத்து இராணுவத்தளபதி பாதுகாப்புச்செயலருக்கு அறிவிப்பார்' என்றுல் கமல் குணரட்ண எழுதிய புத்தகத்தில் விரிவாக் விரிவாக குறிப்பிட்டுள்ளார்.

அதனை இப்போது கீழே தருகின்றோம்:-

" நான் இராணுவத்தளபதியை கைப்பேசி மூலம் தொடர்பு கொள்ள பலறை முறை முயற் சித்தேன். அப்போது அவர் பாராளுமன்றத்தில் நடைபெறும் முக்கியமான கூட்டத்தொடருக்கு சென்றிருந்தார். அப்போது அவரின் கைப்பேசி அவரது செயலாளரிடம் இருந்த தாக தெரியவருகின்றது.

தொடர்ந்தும் 10 நிமிடங்கள் தொடர்ச்சியாக கைப்பேசியில் அழைத்துக் கொண்டிருந்தேன். இறுதியில் இராணுவத் தளபதியிடம் தொடர்பு கொண்டு 'வாழ்க்கையில் மறக்க முடியாத மிகவும் சந்தோஷமான, ஆச்சரியமான செய்தியை' நான் அவருடன் பகிர்ந்து கொண்டேன்.

நான் அவருக்கு அந்த மகிழ்ச்சிகரமான செய்தியைக் கூறினேன்.

அதற்கு அவர் 'என்ன அது'? என்று மிகவும் குழப்பத்துடன் கேட்டார்.

அதற்கு நான் கூறினேன்

" சேர் பெரிய மனிதனை நாங்கள் முடித்து விட்டோம்"

அதற்கு அவர் மிகவும் குழப்பத்துடன்

'என்ன'?

நான்: " சேர் நாங்கள் பிரபாகரனைக் கொன்று விட்டோம்". என நான் விளக்கமாக கூறினேன்.

தளபதி: ஆச்சரியத்துடன் - என்ன"??

நான் சொல்வதை புரிந்து கொள்ளாத விதத்தில் கேட்டார்.

நடந்த சம்பாஷனையை இங்கே வார்த்தைக்கு வார்த்தை தருகின்றேன். அது உங்களுக்கு மிகவும் விருப்பமான விடயமாக இருக்கும் என நினைக்கின்றேன்.

நான்: " சேர் நாங்கள் பிரபாகரனைக் கொன்று விட்டோம்"

30 செக்கன்கள் அமைதி

தளபதி : "உண்மையா" ?

நான்: ஆம் சேர்!

மீண்டும் 30 செக்கன்கள் அமைதி.

தளபதி : எப்படி தெரிய வந்தது பிரபாகரனின் உடல் தான் என்று?

நான் : சேர்! இறந்த பிரபாகரனின் சடலத்தை நான் தான் வைத்திருக்கிறேன்.

தளபதி: சரி தான்" உன்னிடம் இறந்த அந்த உடல் இருக்கின்றது. ஆனால் எப்படித் தெரியும் இது பிரபாகரனின் உடல் தான் என்று"

சேர் என்னை நம்புங்கள் இது பிரபாகரன் தான்.ஒரு நான்காம் வகுப்பு படிக்கும் பிள்ளை கூட அவனை அடையாளம் காட்டுவான். தயவு செய்து இந்த நல்ல செய்தியை பாதுகாப்புச்செயலாளருக்கும், ஜனாதிபதிக்கும் அறிவியுங்கள்.

தளபதி: ம்ம்ம்ம்..நான் சொல்லும் வரைக்கும் இதை யாரிடமும் சொல்ல வேண்டாம்.

சில வேளை தளபதி நினைத்திருக்கலாம், அவர் சொல்வதற்கு முன்னர் இதை நான் பாதுகாப்புச் செயலருக்கு சொல்லி விடுவேன் என்று அப்படி நினைத்தாரோ என்னவோ.

ஆனால் இராணுவச்சட்டத்தை ஒழுங்காக கடைப்பிடிக்கும் எனக்கு அவ்வாறான சிந்தனைகள் மனதில் தோன்றவில்லை.

பாதுகாப்புச்செயலர் எனது முன்னாள் அதிகாரியாக இருந்தவர். எனக்கும் அவருக்கும் இடையில் ஓர் மதிப்பு மிக்க உறவு நிலவியது. ஆனால் ஒழுங்கு முறைப்படி இந்தச் செய்தியை இராணுவத் தளபதிக்கு தெரிவிக்க வேண்டியது தான் எனது கடமை.

அவர் தான் இந்த மகிழ்ச்சிகரமான செய்தியை பாதுகாப்புச் செயலருக்கு தெரிவிக்க வேண்டும்.

சுமார் ஐந்து, பத்து நிமிடங்களின் பின்னர் இராணுவத்தளபதி

தொடர்ச்சி....06 இல்)

## இலங்கையில் தற்கொலைச்சாவுகள் அதிகரிக்கின்றன



(கொழும்பு)

இலங்கையில் நிறையப்பேர் தற்கொலைகள் மூலம் தான் இறக்கிறார்கள். சென்ற 2015 ஆம் ஆண்டு 3000பேர் தற்கொலை செய்து கொண்டுள்ளதாக சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் பாலித மஹிபால தெரிவிக்கின்றார்.

இவர்களில் பெரும்பாலானவர்கள் 15 முதல் 24 வயதுக்கு உட்பட்டவர்கள் எனவும் அவர் மேலும் தெரிவிக் கின்றார் .இவர்களில் பெரும்பாலானோர் தற்கொலை செய்து கொள்வதற்கு கிருமிநாசினிகளையே உபயோகித்துள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

சாவுக்கான முக்கிய காரணங்களில் தற்கொலை 13வது இடத்தை வகிப்பதாக உலக சுகாதார ஸ்தாபனத்தின் ஆய்வொன்று தெரிவிக்கின்றது.

இலங்கையைப்பொறுத்தளவில் ஒவ்வொரு ஒரு லட்சம் பேரில் 14.7 வீதமானோர் தற்கொலை செய்து கொள்கிறார்கள். 2014 ஆம் ஆண்டு இலங்கையில் 3,144 பேர் தற்கொலை செய்து கொண்டுள்ளதாக புள்ளி விபரங்கள் தெரிவிக்கின்றன.

உலகம் முழுவதிலும் ஒவ்வொரு 40 செக்கன்களுக்கு ஒருவர் வீதம் தற்கொலை செய்து கொள்வதாக தெரிவிக்கப்படுகின்றது. உலகம் முழுவதிலுமுள்ள 182 நாடுகளில் உள்ள 28.2 வீதமான மக்கள் தற்கொலை செய்து கொள்வதாக உலக சுகாதார ஸ்தாபனத்தின் புள்ளிவிபரங்கள் தெரிவிக்கின்றன.

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி...)

## கீவ்வநாச்சி...

யாழ். மாநகரசபையின் தீ அணைப்பு வண்டிகள் தாமதமாகவே குறித்த இடத்தை அடைந்தன. இதனையடுத்து தீயை அணைக்க சகலரும் முயன்ற வேளையில் கடைத்தொகுதியில் தீ வேகமாக பரவிக்கொண்டிருந்தமையினால் தீ பரவும் திசையில் உள்ள கடைத்தொகுதியில் இடையில் மூன்று கடைகள் உடைக்கப்பட்டு இடைவெளி ஏற்படுத்தப்பட்டே தீ கட்டுப்படுத்தப்பட்டது.

இதனால் 389 கடைகளையுடைய சந்தையில் 120 கடைகள் முற்றாக நாசமாகின. இதனால் சுமார் 50 கோடிரூபா சொத்துக்கள் எரிந்து நாசமாகின. தீ ஏற்பட்டதற்கான காரணம் உடனடியாக கண்டறியப்படாத போதிலும் சந்தையின் சில இடங்களில் கமரா பொருத்தப்பட்டுள்ளமையினால் தீ ஏற்பட்டமைக்கான காரணங்களை கண்டறிய முடியுமென எதிர்பார்க்கப்படுகின்றது. குறித்த சம்பவம் தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி...)

## வெருட்டுகிறார்...

மட்டக்களப்பு மற்றும் அம்பாறை மாவட்டங்களைச் சேர்ந்த நல்லாட்சிகான பெண்கள் அமைப்புகளின் பிரதிநிதிகள் எதிர்க்கட்சித் தலைவர் இரா சம்பந்தனை திருகோணமலையில் உள்ள அவரது இல்லத்தில் சந்தித்து கலந்துரையாடினார்கள். இதன் போது கருத்து தெரிவித்த சம்பந்தன் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இங்கு மேலும் கருத்து தெரிவித்த சம்பந்தன் புதிய அரசியல் சாசனம் ஒன்றை உருவாக்கும் பணிகளில் நாம் முக்கிய பங்கு வகித்து வருகிறோம். இம்முறை உருவாக்கப்படும் புதிய அரசியல் சாசனத்தின் மூலம் தமிழ் மக்களின் நீண்ட காலப் பிரச்சினைகளுக்கு தீர்வு காணப்படவேண்டும் என்பதே எமது நிலைப்பாடாகும்.

மேலும் அவர் பேசும் போது, ஐ.நா சபையின் சர்வதேச மனித உரிமை பிரகடனத்தின் அடிப்படையில் மக்களின் சம்மதம் இல்லாமல் எந்தவொரு அரசும் ஆட்சி செய்ய முடியாது.

அந்த வகையில் தமிழ் மக்களின் கோரிக்கைகளை நிறைவேற்றும் விதமாக புதிதாக உருவாக்கப்படும் புதிய அரசியலமைப்பு தமிழ் மக்களின் அரசியல் அபிலாஷைகளை பூர்த்தி செய்ய வேண்டும் என்பதே எமது எதிர்பார்ப்பாகும் எனவும் இரா சம்பந்தன் மேலும் கூறியுள்ளார்.

# அடுத்த துணை ஜனாதிபதிப்பதவி அ.தி.மு.க.வுக்கு?



(டெல்லி)

துணை ஜனாதிபதி ஹமீது அன்சாரியின் பதவிக்காலம், ஓராண்டுக்குள் முடிவடைய உள்ளதால், அப்பதவியில் அமர, லோக்சபா விலும், ராஜ்யசபாவிலும்,50 எம்.பி.க்கள் கொண்ட, அ.தி.மு.க.வுக்கு அதிக வாய்ப்பு உள்ளதாகக் கூறப்படுகிறது் அதற்கான முய ற்சியில், கட்சி மேலிடம் இறங்கி உள்ளது.

டில்லி அரசியல் மற்றும் அதிகாரிகள் வட்டாரங்களில், இப்போது அதிகமாக விவாதி க்கப்படும் விஷயம், அடுத்த துணை ஜனாதி பதி யார் என்பது தான்.

ஆளும் கட்சியான பா.ஜ.விலிருந்து எந்த தலைவர் இந்த பதவிக்கு வருவார் என்ற பேச்சும், கூட்டணி கட்சிகளிலிருந்து யாரா வது நியமிக்கப்படுவார்களா என்ற எதிர்பார்ப் பும் நிலவுகிறது.


தற்போது துணை ஜனாதிபதியாக உள்ள, ஹமீது அன்சாரியின் பதவிக்காலம், அடுத்த ஆகஸ்டில் முடிவடைகிறது. அதற்கு முன்பாக, இந்த பதவிக்கான தேர்தலை, தேர்தல் ஆணையம் நடத்தும். ராஜ்யசபா மற்றும் லோக்சபா எம்பிக்கள் வாக்களிப்பர்.

இத்தேர்தல் நடக்க இன்னும் ஓராண்டு காலம் இருந்தாலும், அதற்கான பூர்வாங்க வேலை இப்போதே தொடங்கி விட்டது. தன் கட்சிக்கு துணை ஜனாதிபதி பதவி வழங் கப்பட வேண்டும் என, அ.தி.மு.க., தூது விடுவதாக, டில்லி வட்டாரத்தில் பேச்சு அடிபடுகிறது.

லோக்சபா ராஜ்யசபா என இரண்டு சபைக ளிலும் அ.தி.மு.க.வுக்கு 50 எம்.பி.இக்கள் உள்ளனர். இதனால் துணை ஜனாதிபதி பதவி அ.தி.மு.க. விற்கு ஒதுக்கப்பட வேண் டும் என, கட்சித் தலைமை விரும்புவதாக சொல்லப்படுகிறது. அப்படி எனில். அப்பதவி க்கு பொருத்தமானவர் யார் என்ற பேச்சும் எழுகின்றது அல்லவா! ஐந்தாவது முறை எம் பியாக உள்ள தம்பிதுரை தான் துணை ஜனாதிபதிப் பதவிக்கு பொருத்தமானவர் என்று சொல்லப்படுகிறது. இரண்டாவது முறையாக லோக்சபா துணை சபாநாயகராக உள்ள தம்பிதுரை சபையின் சட்ட திட்டங் களை நன்கு அறிந்தவர் சபையை நடத்து வதில் தேர்ந்தவர். அடுத்தமுறை பிரதமர் மோடி-முதல்வர் ஜெயலலிதா சந்திப்பின் போது துணை ஜனாதிபதி பதவி வழங்குவது குறித்த கோரிக்கையை முதல்வர் முன் வைப்பார் என்றும் சொல்லப்படுகிறது.

## ஜெட்லியை விட சிறந்த நிதி அமைச்சராக என்னால் செயற்பட முடியும்

## சுப்பிரமணியன் சுவாமி



(டெல்லி)

மத்திய நிதி அமைச்சர் அருண் ஜெட்லியை விட தன்னால் சிறப்பாக செயல்பட முடியும் என பாஜக மூத்த தலைவர்களில் ஒருவரான சுப்பிரமணியன் சுவாமி வெளிப்படையாக அறிவித்துள்ளமை பரபரப்பை ஏற்படுத்தி உள் ளது.

பாஜக அரசின் கேடயமாக இருப்பவர் என்று சொல்லும் அளவுக்கு மோடியின் நம்பி க்கையை பெற்றவர்களில் ஒருவர் அருண் ஜெட்லி. மத்திய அரசின் நிதி அமைச்சராக பதவி வகித்து வரும் அவர்,நாடாளுமன்றத் துக்கு உள்ளேயும், வெளியேயும் மோடி அர சின் மீதான எல்லா விதமான விமர்சனங்க ளுக்கும் பதில் அளித்து வருகிறார்.

இவருக்கும், கட்சியின் மற்றொரு மூத்த தலைவரான சுப்பிரமணியன் சுவாமிக்கும் இடையே அடிக்கடி மோதல் ஏற்பட்டு வரு கிறது. ரிசர்வ் வங்கியின் முன்னாள் ஆளுநர் ரகுராம் ராஜனை, சுப்பிரமணியன் சுவாமி இடைவிடாமல் விமர்சித்ததற்கு ஜெட்லி மீதான பகையே காரணம் எனவும் கூறப்பட் டது.

இந்த பகை நேற்று வெளிப்படையாக வெடித்தது. நிதி அமைச்சர் பதவியில் ஜெட் லியை விட தன்னால் சிறப்பாக செயல்பட முடியும் என சுப்பிரமணியன் சுவாமி வெளிப் படையாக அறிவித்து பரபரப்பை ஏற்படுத்தி உள்ளார்.

டெல்லியில் "இந்தியா டுடே" சார்பில் நடந்த நிகழ்ச்சி ஒன்றில் கலந்து கொண்ட அவர் பின்னர் செய்தியாளர்களின் கேள்விக்கு பதிலளிக்கும் போது "நான் ஒரு பொருளாதார நிபுணர். அவர் (ஜெட்லி) ஒரு வழக்கறிஞர் அப்படியிருக்கும் போது அவரால் எப்படி என்னை விட சிறப்பாக செயற்பட முடியும்? "என்று கேள்வி எழுப்பினார்.

இச்சம்பவம் டெல்லி அரசியல் வட்டார ங்களில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியு ள்ளது.



## திமுகவை யாரும் அசைக்க முடியாத இயக்கமாக மாற்றுவேன்

## கருணாநிதி சபதம்

(சென்னை)

திமுகவை யாரும் அசைக்க முடியாத இய க்கமாக மாற்றுவேன் என திமுக நடத்திய முப்பெரும் விழாவில் அக்கட்சித் தலைவர் கருணாநிதி தெரிவித்துள்ளார்.

திமுகவின் முப்பெரும் விழா மற்றும் விருதுகள் வழங்கும் விழா சென்னை அண்ணா அறிவாலயத்தில் உள்ள கலைஞர் அரங்கில் நேற்று நடந்தது. இந்த நிகழ்ச்சி யில் விருதுகளை வழங்கி கருணாநிதி பேசும் போது

திமுகவின் முப்பெரும் விழா எழுச்சியுடன் நடக்கிறது. திமுகவை வலுவான இயக்கமாக ஆக்கும் பணியில் நாம் ஈடுபட்டுள்ளோம். பேராசிரியர் அன்பழகனும் நானும் 10 வயது முதலே நண்பர்களாக உள்ளோம். எங்கள் இருவருக்கும் இடையே உள்ள நட்பை யாராலும் பிரிக்க முடியாது. அதே போல் கட்சியின் தொண்டர்களையும் தமிழக மக்க ளையும் திமுகவிடமிருந்து யாரும் பிரிக்க முடியாது.

இந்த இயக்கத்தின் வளர்ச்சிக்காக பலர் பல்வேறு தியாகங்களை செய்துள்ளனர். அவர்களை நினைத்துப் பார்த்து பணியாற்ற வேண்டும். ஏற்கெனவே நாம் கண்ட தோல் விகள் எல்லாம் மறந்துவிட்டது என்கிற ரீதியில் அடுத்தகட்ட வெற்றிகளை நோக்கி பயணிக்கிற மனநிலையில் தொண்டர்கள் உள்ளதை உணர முடிகிறது.

சிறு பிரச்சினைகளை விடுத்து,நான் நீ என்ற முனைப்புகளை விடுத்து,கட்சிப் பணி யாற்ற சபதமேற்போம். திருக்குவளை யில் சிறுவனாக எப்படி உத்வேகத்துடன் செயல் பட்டேனா, அதேபோல் கடந்த 50 ஆண்டு களுக்கு மேல் திமுகவை கட்டிகாத்து வருகி றேன். திமுகவுக்காகவும், தமிழக மக்களுக் காகவும், நான் தொடர்ந்து பணியாற்று வேன். ஓய்வு என்பதை ஒரு போதும் நினை க்காமல் உழைப்பேன். எனக்கு பிறகு திமுக என்ன ஆகும் என்று இங்கு பேசினார்கள். யாரும் அஞ்ச வேண்டாம். நான் இல்லாத போதும் திமுகவை யாரும் அசைக்க முடி யாது என்ற நிலையை உருவாக்கிவிட்டே நான் கண்களை மூடுவேன். இவ்வாறு கரு ணாநிதி முப்பெரும் விழாவில் பேசினார்.

இந்நிகழ்ச்சியில் திமுக பொதுச்செயலாளர் பேராசிரியர் கே.அன்பழகன் பொருளாளர் மு.க.ஸ்டாலின் முதன்மை செயலாளர் துரைமுருகன் உள்ளி ட்டோர் பங்கேற்றனர்.

## கர்நாடக கலவரங்களை தடுத்து தமிழர்களை காக்க

## கர்நாடக அரசு தவறிவிட்டது– ராமதாஸ் குற்றச்சாட்டு



(தமிழ்நாடு)

கலவரங்களில் பாதிக்கப்பட்ட தமிழர்களின் உடைமைகள் கொள்ளையடிக்கப்பட்டுள்ள நிலையில்,தனது கடமையை செய்ய கர்நா டக அரசு தவறிவிட்டதாக பாமக நிறுவனர் ராமதாஸ் குற்றம் சாட்டியுள்ளார்.

இது குறித்து அவர் நேற்று வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளதாவது-

"காவிரி பிரச்சினையைத் தொடர்ந்து பெங் களூரு வீதிகளில் ஆயுதங்களுடன் வலம் வந்த சமூக விரோதிகள் தமிழர்களின் கடைகள், வணிக நிறுவனங்களில் பொருள் களை அடித்துச்சேதப்படுத்தியதாகவும் பின் னர் கடைகளைத் தீயிட்டு எரிக்காமல் இருக்க பணம் கேட்டு மிரட்டியதாகவும் செய்திகள் வெளியாகியுள்ளன.

இதனால் கர்நாடகத்தில் தமிழர்களுக்கு எதிராக நடத்தப்பட்ட வன்முறையும் கலவர ங்களும் திட்டமிட்டு நடத்தப்பட்ட கொள்ளை யின் அங்கங்கள்தான்.

ஒரு மாநிலத்திலுள்ள மக்களின் உயிரை யும், உடைமைகளையும் பாதுகாக்க வேண் டியது அந்த மாநில அரசின்,அரசியலமைப்புச் சட்டப்படியான கடமையாகும்.

தமிழர்கள் தாக்கப்பட்டு அவர்களின் உடைமைகள் கொள்ளையடிக்கப்பட்டதை தடுக்காததால் தனது கடமையை செய்ய கர்நாடக அரசு தவறிவிட்டது. எனவே தமிழர் உடைமைகளின் மதிப்பை ஆய்வு செய்து நிர் ணயிக்க உச்ச நீதிமன்ற நீதிபதி தலைமை யில் ஆணையம் அமைத்து தாக்கப்பட்டோரி டம் விசாரணை நடத்தி இழப்பீடு வழங்கு வது தொடர்பாக கர்நாடக அரசுக்குப் பரிந் துரை செய்ய வேண்டும்.

இதன்படி நிவாரணம்-இழப்பீட்டை கர்நா டக அரசு வழங்க வேண்டும். இதற்குத் தேவையான அரசியல் அழுத்தம்,நெருக்க டியை கர்நாடக அரசுக்கு மத்திய அரசும் தமி ழக அரசும் இணைந்து தர வேண்டுமென அவர் வலியுறுத்தியுள்ளார்.



இந்திய பிரதமர் நரேந்திரமோடி தனது 66 வது பிறந்த தினத்தன்று குஜராத் மாநிலம் ரெய்சான் பகுதியில் சகோதரர் பங்கஜ் மோடியின் வீட்டில் தங்கியுள்ள தனது தாயா ரிடம் சென்று ஆசி பெற்றார்.

# அழிந்து போகும் அபாய நிலையில் மஸ்கெலியா நகரம்



(மஸ்கெலியா நிருபர் செ.தி.பெருமாள்)

மவுசாகலை நீர்தேக்கம் 1968ல் அமைக்கப்பட்டதால் மஸ்கெலியா நகரமும் கங்கேவத்த நகரும் ஒன்றாக இணைக்கப்பட்டு, "புதிய மஸ்கெலியா நகரம்" என்ற பெயரில் காட்டு மஸ்கெலியா பெரிய நடுத்தோட்டப்பகுதியில் ஒரு சிகரத்தில் அமைக்கப்பட்டது.

அவ்வாறு சிகரத்தின் உச்சியில் இருந்து கீழ் பகுதிவரை நகரம் அமைந்ததாலும் நகரத்தின் கீழ் பகுதியில் தான் மவுசாகலை நீர்த்தேக்கம் அமைந்திருக்கின்றது. இங்கே தான் நீர் தேக்கி வைக்கப்பட்டு வருகின்றது. கடந்த 48 வருடகாலமாக அன்றைய அரசு காலத்துக்கு காலம் மாறிய அரசாங்கங்களும் சிகரத்தில் ஒரு மாடியை தவிர அதிகளவு மாடிகள் கொண்ட கட்டிடங்கள் அமைக்கக்கூடாது என உத்தரவிட்ட போதும் , நகரத்தின் உச்சியில் அதிகளவு மாடிகளைக் கொண்ட கட்டிடங்கள் அமைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இதற்கெல்லாம் அனுமதி வழங்கியது யார் என்பது ஒரு புறமிருக்க,பிரதேசசபையின் கீழ் இயங்கும் இந்த நகரின் மத்தியில் இருந்த தீ பரவாத வண்ணம் பாதுகாக்கும் (Fair Gab) எல்லாம் தற்போது கட்டிடங்களாக மாறியுள்ளது.

சிகரத்தில் உள்ளதால் கீழ் பகுதியில் உள்ள திட்டுக்களை வெட்டி மேலும் கட்டிடங்களை அமைக்கும் போது இந்த நகரம் என்றோ ஒரு நாள் பாரிய அழிவிற்கு உள்ளாகப் போகின்றமை உறுதி.


இதற்குக் காரணம் நீர்தேக்கத்தின் நீரானது எந்நேரமும் நீரை உறிஞ்சிய வண்ணம் உள்ளது. மழைக்காலங்களில் அதிகளவு மழை பெய்யும் போது மழைநீர் காரணமாக நகர் வடிகான்களில் முன்னரை விட அதிகளவு நீர்வரத்து அதிகரித்துள்ளது. ஆகையால் அவ்வாறு நீர் அதிகளவு வரும் பட்சத்தில் பூமியில் பல பகுதிகள் ஏற்கனவே அழிந்து, அபாய எச்சரிக்கை வழங்கப்பட்டுள்ளது.

ஒருபுறம் அரசாங்க அதிபர், கட்டிடம் அமைக்க கூடாது என கூறிய பகுதியில் பாரிய கட்டிடங்கள் அமைக்கப்பட்டுள்ளன. இவ்வாறு திட்டுக்களின் மேல் அதிகளவு சுமையை ஏற்றும் போது மழை பெய்யும் போது திட்டுக்கள் அழிந்து விழும் வாய்ப்பு அதிகளவு உள்ளது. அதோடு பாரிய மண்சரிவு அபாயம் ஏற்படும் வாய்ப்பு அதிகமாகின்றது.

இதை உணர்ந்து ,திட்டுக்கள் வெட்டப்படுவது, பிரதேச சபைக்கு உரித்தான காணியை தனிநபர்கள் விற்பனை செய்வது, போன்றவற்றையும் மேலதிகமான கட்டிடங்கள் சட்டவிரோதமான முறையில் அமைக்கப்பட்டுள்ளதை மாகாண சபையின் பொறியியலாளர்கள் மத்திய அரசின் பொறியியலாளர்கள் வந்து பார்வையிட்டு சட்டவிரோத கட்டிடங்களை அகற்றல் வேண்டும். மேலும் Fair Gab இனை உடைத்தெறிய வேண்டும்.

நகரின் அமைப்பு 1965ல் எவ்வாறு நிர்மாணிக்க உத்தரவிடப்பட்டதோ, நகரை மீண்டும் அதேபோல் கொண்டு வருவதுடன் இதனை, சட்ட நடைமுறைப்படுத்த ஆவணம் செய்யவேண்டும் என்பது இப்பிரதேச மக்களின் கோரிக்கையாகும்.

# ஸ்ரீ சிவசுப்பிரமணிய தேவஸ்தானத்தின் இராஜகோபுரத்திற்கான அடிக்கல் நாட்டல்



(பண்டாரவளை)

பண்டாரவளை நகர ஸ்ரீ சிவசுப்பிரமணிய தேவஸ்தானத்தின் இராஜகோபுரத்திற்கான அடிக்கல் நாட்டும் வைபவம் அன்மையில் தொழில் தொழிற்சங்க உறவுகள் இராஜாங்க அமைச்சர் ரவீந்திர சமரவீர தலைமையில் இடம் பெற்றது.

இதன்போது ஊவா மாகாண முதலமைச்சர் சி.எஸ்.தஸநாயக்க, பதுளை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்களான அ.அரவிந்த குமார், வடிவேல் சுரேஷ், சமிந்த விஜயசிறி ஊவா மாகாண சபை உறுப்பினர் சச்சிதானந்தன் என பலரும் கலந்து கொண்டனர்.

அத்தோடு பக்த அடியார்கள் நன்கொடைகள் வழங்கியதோடு, இராஜகோபுரத்திற்கான அடிக்கல்லையும் நாட்டி வைத்தனர். இதன்போது எடுக்கப்பட்ட படங்களை இங்கு காணலாம்.





# குடாகமவில் சிறுத்தைக்குட்டிகள்

## பொதுமக்கள் பீதி



(க.கிஷாந்தன் ஹற்றன் நிருபர்)

அட்டன் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மக்கள் செறிந்து வாழும் பிரதேசமான அட்டன் நுவரெலியா பிரதான வீதிக்கு அருகாமையில் குடாகம பகுதியில் அமைந்துள்ள குடாகம ஓயாவில் நீர் அருந்திக் கொண்டிருந்த சிறுத்தையும் அதன் குட்டிகள் இரண்டினையும் அன்மையில் பொதுமக்கள் கண்டுள்ளதால் அப்பிரதேசத்தில் வாழும் மக்கள் மத்தியில் பீதி ஏற்பட்டுள்ளது.

அதனைத் தொடர்ந்து அட்டன் பொலிஸ் நிலையத்துக்கு தெரிவித்ததையடுத்து பொலிஸார் அவ்விடத்திற்கு வருகை தந்து அங்கு கூடியிருந்த மக்களை அவ்விடத்தை விட்டு விலகிச்செல்லுமாறு பணிப்புரை விடுத்ததுடன் வனவிலங்கு அதிகாரிகளுக்கும் அறிவித்தனர்.

இச்சிறுத்தைகள் அருகிலுள்ள குப்பைக்குழியில் கொட்டப்படும் மாமிசக்கழிவுகளை உண்பதற்காக இப்பிரதேசத்துக்கு வருகை தருவதாகவும் இதனால் பாதையைப் பயன்படுத்தும் பொதுமக்கள் அச்சத்தில் இருப்பதாகவும் தெரிவிக்கப்படும் அதேவேளை தேயிலை மலைகள் காடுகளாக மாறிவருவதை அடுத்தே சிறுத்தைகள் மக்கள் வாழும் பிரதேசத்தை நோக்கி வருகை தருவதாகவும் பொதுமக்கள் மேலும் தெரிவிக்கின்றனர்.

# மலையகத்தில் கொழுந்து பறிக்கும் ஜப்பானியப்பெண்கள்



(க.கிஷாந்தன் ஹற்றன் நிருபர்)

ஜப்பான் நாட்டின் உல்லாச பிரயாணிகள் இலங்கைக்கு அதிகமாக வருகை தருவதாக சுற்றுலா அமைச்சு அண்மையில் தெரிவித்திருந்தது. இந்த நிலையில் ஜப்பானிய நாட்டின் Fukuoka பல்கலைக்கழக மகளிர் பிரிவில் 5 பேர் இலங்கைக்கு வருகை தந்துள்ளனர்.

இவர்கள் பல்கலைக்கழகத்தின் பாட நெறிகளின் ஒன்றான தேயிலை கொழுந்து பறித்தல் தொடர்பாக மலையகத்தில் பத்தனை கெலிவத்தை தோட்டத்தில் குறித்த பாடத்தைக் கற்றுக்கொண்டனர். இலங்கைக்கான சர்வோதய அமைப்பின் ஊடாக இவர்கள் இப்பாடநெறிகளை ஆராய்ச்சியின் மூலம் மேற்கொண்டு வருகின்றனர்.

அதேவேளை இலங்கைக்கு வருகை தந்துள்ள ஜப்பானிய பல்கலைகழக பெண்கள் அமைப்பு அன்மையில் இந்த கொழுந்து பறிக்கும் பாடநெறிகளில் ஈடுப்பட்டமை கெலிவத்தை தோட்ட தொழிலாளர்கள் மத்தியில் மிகவும் வரவேற்கத்தக்க ஒன்றாக அமைந்திருந்தது.

மலையக தோட்ட தொழிலாளர்கள் கொழுந்து பறிக்கும் தொழிலில் எவ்வாறு ஈடுபடுகின்றனர் என்பது மட்டுமன்றி அவர்களின் வாழ்க்கை நிலையையும் இவர்கள் ஆராய்ந்தமையும் இங்கு குறிப்பிடத்தக்கது.





# பிரிகேடியர் கமால் குணரட்ணவின் நேரடி மேற்பார்வையில் பாலச்சந்திரன் கொல்லப்பட்டார்

பிரிகேடியர் கமால் குணரட்ணவின் நேரடி மேற்பார்வையில் பிரபாகரனின் 12 வயது மகன் பாலச்சந்திரன் இராணுவத்தினரிடம் சரணடைந்த பின்னர் முன்னாள் பாதுகாப்புச் செயலர் கோத்தபாய ராஜபக்ஷவின் உத்தரவிற்கு அமைய கொலை செய்யப்பட்டதாக இப்பொழுது நம்பகரமாக தெரியவருகின்றது.

பிரபாகரனின் மகன் பாலச்சந்திரன் 2009 ஆம் ஆண்டு மே மாதம் 19 ஆம்திகதி காலை 7:30 மணியளவில் நந்திக்கடல் வாவி அருகில் இராணுவத்தினரிடம் சரணடைந்தான். பாலச்சந்திரன் இராணுவத்தின் 4வது விஜயபாகு காலால் பிரிவைச் சேர்ந்த சார்ஜன்ட் முத்து பண்டா தலைமையிலான 8 இராணுவ வீரர்கள் அடங்கிய குழுவினரிடமே சரணடைந்திருந்தான்.

இவ்வாறு சரணடைந்த பாலச்சந்திரன் தனது தந்தையான பிரபாகரன் முதல் நாள் இரவு சுட்டுக் கொல்லப்பட்டார் என்றும், அவரது உடல் நந்திக் கடல் அருகே உள்ள கண்டல் காட்டில் மறைத்து வைக்கப்பட்டிருப்பதாகவும் கூறினான்.

அதனையடுத்து சார்ஜன்ட் முத்து பண்டா (4வது விஜயபாகு காலால் பிரிவைச் சேர்ந்த லெப்டினட் நலாக்கா 4வது விஜயபாகு கலாற்படையின் சி வகுப்பைச் சேர்ந்தவர்) விபரங்களை தெரிவித்தார். அந்த நேரம் நலாக்கவும் இன்னுமொரு உத்தியோகஸ்தரான கிரிந்தவும் சார்ஜன்ட் விஜயசிங்கவும் நந்திக் கடல் வாவியில் தேடுதல் வேட்டையில் ஈடுபட்டார்கள். இதனயடுத்து நலாக்கா 4வது விஜயபாகு படைப்பரிவின் தலைமைத் தளபதியாகிய லெப் கேணல் றொஹித்த அளுத் விகாரவிடம் "ஓர் பையன் தான் பிரபாகரனின் மகன் எனவும் 2 பாதுகாவலர்களுடன் சரணடைந்துள்ளார் எனவும் இது சம்பந்தமாக மேற்கொண்டு என்ன நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் எனவும் கேட்டார்.



அதனையடுத்து 53 ஆவது படைப்பிரிவின் பிரிவு தலைவரான பிரிகேடியர் கமல் குணரட்ணவிற்கு 651 வது படைப்பிரிவின் தளபதி லால்ந்தா ஊடாக அறிவித்தார். அதனையடுத்து பிரிகேடியர் கமல் குணரட்ணவின் கட்டளையின் படி லெப்ரினன்ட் நலாக்கா பிரபாகரனின் மகன் பாலச்சந்திரனை நந்திக் கடல் பகுதிக்கு அழைத்துச் சென்றார்.

அங்கே பாலச்சந்திரன், நந்திக் கடல் கண்டல் காட்டுப் பகுதியில் மறைத்து வைக்கப்பட்டிருந்த பிரபாகரனின் உடலைக் காட்டினான். அதனையடுத்து லெப் கேணல் லால்ந்தாகமகே பாலச்சந்திரனைப் பொறுப்பேற்று பிரிகேடியர் கமல் குணரட்ணவிடம் அழைத் துச் சென்றார்.

அவ்வாறு அழைத்து வரப்பட்ட பிரபாகரனின் மகன் பாலச்சந்திரனிடம் பிரிகேடியர் கமல் குணரட்ண நேரடியாக விசாரணைகளை நடத்தினார். அந்த விசாரணைகளின் போது தனது தந்தையார் நேற்று இரவு இராணுவத்திற்கும் புலிகளுக்கும் இடையில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டில் கொல்லப்பட்டு விட்டதாக தெரிவித்தான்.



மேலும் அவனது தந்தையரது பாதுகாவலர்கள் இருவரைத் தவிர ஏனைய அனைவரும் கொல்லப்பட்டு விட்டார்கள் என்றும் எஞ்சிய இருவரும் தான் பிரபாகரனின் உடலை கண்டல் காட்டில் மறைத்து விட்டு வந்ததாகவும் அதன் பின்னரே தானும் அவர்கள் இருவரும் இராணுவத்திடம் சரணடைந்ததாகவும் அவன் கூறியிருக்கிறான்.

மேலும் கமல் குணரட்ணவின் கேள்விகளுக்கு பதிலளிக்கும் போது "தானும் பிரபாகரனும் தப்பியோடும் நோக்கில் ஒரு வள்ளத்திலும் , சகோதரியும் தனது தாயாரும் ஒரு வள்ளத்திலும் சென்றதாகவும் அப்போது இடம்பெற்ற துப்பாக்கிச்சூட்டில் தான், தந்தை கொல்லப்பட்டதாகவும் தனது தாயார் மற்றும் சகோதரிக்கு என்ன நடந்தது என்பது தனக்கு தெரியாது" என்றும் தெரிவித்திருக்கிறான்.

தனது தந்தையும் பாதுகாவலர்களும் இராணுவத்துடன் கடுமையாக போர் புரிந்ததாகவும், இறுதியில் தன்னையும் தந்தையின் இரண்டு பாதுகாவலர்களையும் தவிர ஏனையவர்கள் இறந்து விட்டதாகவும் கூறினான்.

கிடைத்தகவலின்படி பிரபாகரனின் 12 வயது மகன் பாலச்சந்திரன் கூறிய அனைத்து விடயங்களையும் பிரிகேடியர் கமல் குணரட்ண பாதுகாப்புச் செயலர் கோத்தபாய ராஜபக்ஷவிற்கு கைப்பேசி மூலமாக தெரிவித்திருக்கிறார்.

அதனையடுத்து கோத்தபாய ராஜபக்ஷ புலிகளின் முன்னாள் கிழக்கு மாகாண கட்டளைத் தளபதியும் ராஜபக்ஷ அரசின் துணை அமைச்சருமான கருணா அம்மான் என அழைக்கப்படும் விநாயகமூர்த்தி முரளீதரனுக்கு குறித்த விடயங்களை தெரிவித்திருக்கிறார்.


அதனையடுத்து கருணா அம்மான் கோத்தபாய ராஜபக்ஷவிடம் கருத்து தெரிவித்த போது 'பிரபாகரனின் மகன் பாலச்சந்திரன் கொல்லப்படவேண்டும். இல்லாவிட்டால் புலிகளின் அடுத்த தலைவனாக அவன் வந்து விடுவான். ஏனென்றால் அவன் சின்னப் பையன். அவனை நீதிமன்றம் விடுதலை செய்து விடும்' என்றும் கூறியிருக்கிறார்.



அதனையடுத்து பாலச்சந்திரன் பிரிகேடியர் கமால் குணரட்ணவின் நேரடிக் கண்காணிப்பின் கீழ் கொல்லப்பட வேண்டும் என்றும் அவ்வாறு கொலை செய்யப்பட்ட பாலச்சந்திரனின் உடலை அழித்து விட வேண்டும் என்றும் கோத்தபாய ராஜபக்ஷ உத்தரவிட்டதாக அன்று போர் முனையில் இருந்து தப்பித்த இராணுவ உத்தியோகஸ்தர் ஒருவர் தெரிவித்ததாக லண்டனில் இருந்து இயங்கும் சனல் 04 தொலைக்காட்சி தகவல் வெளியிட்டது.

இதனையடுத்து அண்மையில் இராணுவத்தில் இருந்து ஓய்வு பெற்ற பிரிகேடியர் கமல் குணரட்ண 'நந்திக் கடலுக்கான பாதை' எனும் நூலை எழுதி வெளியிட்டார். இந்த நூலில் பிரபாகரனின் புதல்வர் பாலச்சந்திரன் குறித்து எதுவுமே குறிப்பிட்டிருக்கவில்லை.

இது குறித்து பத்திரிகையாளர்கள் அவரிடம் கேட்டதற்கு தமக்கு பாலச்சந்திரன் குறித்து எதுவுமே தெரியாது எனவும் பாலச்சந்திரன் இராணுவத்தினரால் கொல்லப்பட்டதாக தெரிவிக்கப்படும் குற்றச்சாட்டுகள் ஆதாரமற்றவையெனவும் இராணுவத்தின் மீது அபாண்டமாக பழிபோடும் நோக்கிலானவை என்றும் அவர் மேலும் குறிப்பிட்டார்.



(02 ஆம் பக்க தொடரர்ச்சி)

# பிரபாகரனை கோவணத்துடன்..

பேசினார்.

நான் அந்த சம்பாஷணையை கீழே தருகின்றேன்.

**தளபதி:** இப்போது நீ எங்கே இருக்கின்றாய்?

நான் : சேர் நான் அந்த கண்டல் காட்டுப் பகுதியில் தான்.

**தளபதி:** சென்ற மாலை நீ என்னைத் தொடர்பு கொண்டு கண்டல் காட்டுப் பகுதியில் தேடுதல் எல்லாம் முடிந்துவிட்டது, ஒவ்வாரு அங்குலம் அங்குலமாக தேடிதல் வேட்டை செய்தோம் என்று கூறினாய் அல்லவா?

நான்: ஆமாம் சேர்

**தளபதி:** அப்ப அவன் எங்கே?

நான் : கண்டல் காட்டுப் பகுதியில் தான் சேர். நாங்கள் நேற்று அவனைத்தவறவிட்டு விட்டோம்.

**தளபதி:** எவ்வாறு நீங்கள் அப்படி அவனை தவற விட முடியும்? அப்படி என்றால் நீ உனது கடமையை ஒழுங்காகச் செய்யவில்லை என்று தானே அர்த்தம்.?

நான் : சேர் இருட்டி விட்டது! ஆகையால் தான் அவனைக்கண்டு கொள்ள முடியவில்லை.

**தளபதி:** நீ உனது வேலையை ஒழுங்காகச் செய்யவில்லை. நீ ஒழுங்காகச் செய்திருந்தால் அவ்வாறு நடந்திருக்க முடியாது. அவன் தப்பிப் போயிருந்தால் என்ன நடந்திருக்கும்?

நான்: அப்படியென்றால் யுத்தம் முடிவுக்கு வந்திருக்காது. ஆனால் அவன் தப்பிப் போய் விடவில்லை. எப்படியென்றாலும் நாங்கள் அவனைக்கொன்று விட்டோம் சேர்.

**தளபதி :** இவ்வாறு நீ கூறினாலும், அவன் தப்பி போயிருந்தால் என்ன நடந்திருக்கும்? நான் இந்த வேலையை உன்னை நம்பித் தான் தந்தேன். ஆனால் நீ அந்த வேலையை சரியாகச்செய்யவில்லை.

நான்: அவ்வாறு அவ்வாறு அவன் தப்பித்தால் அது நல்லதற்கல்ல. ஆனால் அவன் தப்பிப் போகவில்லை சேர்.

**தளபதி:** ஆம், கொன்று விட்டீர்கள் தான். ஆனால் அவன் தப்பிப்போயிருந்தால் என்னவாகியிருக்கும்?

நான்: அவன் தப்பிப் போகவில்லை. நாங் கள் அவனைக்கொன்று விட்டோம். அவனுடைய சடலத்தை நான் தான் வைத்திரு



க்கிறேன் சேர்.

கோபக்கனல் தெறிக்க, தளபதி என்னைக் குறை கூறிக்கொண்டிருந்தார். எனது இராணுவ வாழ்க்கையில் முதன் முதலாக இவ்வாறு குறை கேட்க நேர்ந்தது. பிரபாகரனைக் கொன்ற மிகப்பெரிய சாதனைக்குப் பின்னரும், இவ்வாறு குறை கேட்க நேர்ந்தமை மிகவும் அதிர்ச்சியளிக்கும் விடயமாக இருந் தது.

தளபதி கூறுவதையெல்லாம் நாம் மிகவும் அமைதியாக கேட்டுக் கொண்டிருந்தேன்.

**தளபதி:** அவன் தனியாக இருந்திருக்க மாட்டான். அவனுடன் இரண்டு மூன்று பேர் இருந்திருப்பார்கள்.

நான்: நிறையப்பேர் இருந்தார்கள் சேர்.

**தளபதி:** எத்தனை? 10.. 15.. பேர்?

நான்: இல்லை..52 பேர் இருந்தார்கள். நாங்கள் இந்த 52 பேரின் சடலங்களையும் சேகரித்து வைத்துள்ளோம் சேர்.

**தளபதி:** என்ன ? 52 சடலங்களா? 52 புலிகள் நேற்று தப்பித்தார்களா?

நான்: ஆம் சேர்! நாங்கள் அனைவரையும் நேற்று கொன்று விட்டோம். அவர்கள் அனைவரும் இறந்து விட்டார்கள்.

**தளபதி:** இப்படித்தான் உனது பொறுப்பை நிறைவேற்றுவாயா? உன்னை நாங்கள் நம்பித்தானே இவ்வளவு பெரிய பொறுப்பை ஒப்படைத்தோம்.


தளபதி என்னை தொடர்ந்து ஏசிக்கொண்டே இருந்தார். அவர் என்னை பதில் கூறுவதற்கு அனுமதிக்கவில்லை. நான் இதற்கு பதில் கூறி எந்தவித பிரயோசனமும் இல்லையென்பது எனக்கு ஏற்கனவே தெரியும். மனதில் துக்கத்துடனும், துயரத்துடனும் தளபதியின் ஏச்சுக்களை அமைதியாக கேட்டுக்கொண்டிருந்தேன்.

ஆனால்முக்கிய விஷயம். அவர் வழமையாக தாராளமாக ஏசும் தூஷண வார்த்தைகளை அன்று பிரயோகிக்கவில்லை என்பது தான் மனதிற்கு அமைதிதந்த விடயம். ஏச்சுப் படலம் முடிந்த பின்னர் 'அவன் இராணுவச் சீருடை அணிந்திருந்தானா? என்று கேட்டார்.? நான் ஆம் சேர் என கூறினேன். அவனது உடலில் இருந்த இராணுவ சீருடையை உடனடியாக அகற்றும் படி உத்தர விட்டார். சீருடையை இராணுவம் மட்டும் தான் அணிந்திருக்க முடியும் என்றும் கூறினார்.

அங்கே அவனது (பிரபாகரனது) உடலைச் சுற்றி இராணுவ வீரர்களும் பத்திரிகைக்காரர்களும் நிறையவே இருக்கிறார்கள் என்று சொல்ல முற்பட்ட போது அவரது கோபம் மேலும் அதிகரித்தது. இதுதான் உங்களின் பிரச்சினை? எல்லா பத்தரிகைக்காரர்களையும் உங்களைச்சுற்றி வைத்துக்கொண்டிருக்கிறீர்களா? என கூறிக் கத்தினார்.

நான் அவர்களை அழைக்கவில்லை சேர். நான் எப்போதும் அவர்களை தொலைவில் வைத்துக் கொள்வதே வழக்கம். ஆனால் அவர்கள் இராணுவ தலைமையகத்தினால் தான் இங்கு அனுப்பப்பட்டார்கள்' எனக் கூறினேன். அதற்கு அவர் ' அங்கே யார் இருக்கிறார்கள் என் பதில் எனக்கு அக்கறை கிடையாது. ஆனால் இராணுவ சீருடையை அவனது உடலில் இருந்து உடனடியாக அகற்று' என உத்தரவிட்டார்.

உலகமே பிரபாகரனைச்சுற்றி இருந்த போது அவனது சீருடையை களைந்து இன்னுமொருவரின் உடையை அணிய எனக்கு துளியளவு விருப்பமும் கிடையாது.15 நிமிடங்களின் பின்னர் மீண்டும் கைப்பேசி மணி ஒலித்தது. மறுமுனையில் மீண்டும் தளபதி. அவர் கோபத்தில் கத்தினார். "சுவர்ணவாஹினியில் அவனின் உடலை சீருடையுடன் காட்டுகிறார்கள்.



'இராணுவ சீருடையை களையுமாறு நான் சொல்லவில்லையா? இராணுவத்தளபதியின் உத்தரவைக்கூட உன்னால் நிறைவேற்ற முடியாதா'? என்று கத்தினார்.

தளபதியின் வார்த்தை என்னை மிகவும் பாதித்தது. அவர் 5 நிமிடங்களாக பேசிக் கொண்டிருந்தார். அவர் கைப்பேசியை வை த்த பின் எனக்குப் பக்கத்தில் நின்ற மேஜர் ஜெனரல் ஜெகத் டயஸை துயரத்துடன் கைகளால் சைகை காட்டி அழைத்து , நடந்தவற் றைக் கூறினேன்.

இராணுவ வீரர் ஒருவர் தனது வாழ்க்கையில் செய்யக்கூடிய உயர்ந்த வேலை என்ன? தனது எதிரியை தோற்கடிப்பது தானே? இதனை நாங்கள் வெற்றிகரமாக செய்து முடித்து விட்டோம்.

ஆனால்,அவ்வாறு செய்த பின் நாங்கள் மிகப் பெரிய ஏச்சுக்கள் பேச்சுக்களை எல்லாம் கேட்க வேண்டியிருந்தது என்று கூறினேன்.

இவற்றையெல்லாம் கேட்ட மேஜர் ஜெனரல் ஜெகத் டயஸ் " சகோதரா கவலைப்படாதே, அவர் அப்படித்தான். ஒரு முறை ஏசுவார், பின்னர் மீண்டும் கூப்பிடுவார். இதனையெல்லாம் தாங்கிக் கொள்ளத்தான் வேண்டும் எனக்கூறி என்னை ஆசுவாசப்படுத்தினார்.

சிறிது நேரம் அமைதி நிலவியது...

அவ்வாறு அமைதி நிலவிய பின்னர் சில நிமிடங்களில் மீண்டும் கைப்பேபேசி அழைப்பு.

மறுமுனையில் தளபதி..

'கமல், கருணா அம்மான், தயா மாஸ்ரர் ஆகிய இருவருக்கும் நடந்த விடயங்கள் பற்றி தெரிவித்து விட்டேன். அவர்களை பிரிகேடியர் அமால் கருணசேகராவைக் கூட்டிக் கொண்டு வருவார் . அவர்கள் சடலத்தை அடையாளம் காட்டுவார்கள் என்றும் கூறினார்.

இறந்தது பிரபாகரன்தான். இதற்கு அடையாளம் காட்டுவதற்கு ஒருவரும் தேவையில்லை என்றும் கூறினேன். அவ்வாறு நான் கூறு முற்பட்ட போது அவர் உரத்த குரலில்:

" நான் சொன்னதைச் செய்" என்று கூறி கைப்பேசியை வைத்துவிட்டார்.

அதே நேரம் இறந்த பிரபாகரன் உள்ளிட்ட புலிகளின் சடலங்களை சேகரித்த போது திடகாத்திரமான, சற்று உயரமான ஒருவரின் சடலத்தைக் கண்டேன்.

நான் இது சம்பந்தமாக விசாரணை நடத்தியபோது, மீண்டும் ஒரு நல்ல செய்தி எனக்கு கிடைத்தது. அது தான் கடற்புலிகளின் தளபதி சூசையின் உடல் என்று. இந்தக்கள்ளன் தான் எங்கள் நேவிக்கு பல தொல்லைகளை கொடுத்தவன். கடைசியில் அவனையும் எங்கள் வீரர்கள் சுட்டுக் கொன்று விட்டனர்.

இந்த நேரத்தில் புலிகளின் தலைவர் பிரபாகரன் உட்பட எல்லா தலைவர்களையும் சுட்டுக் கொன்றுவிட்டோம். ஒரே ஒருவரைத் தான் நாங்கள் கண்டுபிடிக்க வேண்டும். அவன் தான் புலிகளின் புலனாய்வுப் பிரிவிற்கு பொறுப்பான பொட்டம்மான். ஆனால் எனக்கு கிடைத்த தகவலின் படி, பொட்டம்மானும் அவனது மனைவியும், இரண்டு பிள்ளைகளும் எமது தாக்குதல்களில் இறந்து விட்டனர் என்பது தான். நாங்கள் நடத்திய தேடுதல் வேட்டையில் பொட்டம்மானின் மனைவி மற்றும் இரண்டு பிள்ளைகளின் உடல்களை மீட்டோம்.

ஆனால் நந்திக் கடலில் பொட்டம்மானின் சடலத்தை மீட்க முடியவில்லை.

இராணுவ வீரர்கள் தற்போது வரைபிரபாகரனின் சடலத்தை பார்வையிட்டவண்ணம் இருந்தார்கள். அப்போது அங்கு வந்த இராணுவ வீரன் ஒருவன் ஏதோ ஒரு வித்தியாசமான முறையில் நடந்து கொண்ட போது அதனைக்கண்ட இராணுவ அதிகாரி ஒருவர் அவனைப் பார்த்து "என்ன காரியம் பண்ணித்தொலைக்கிறாய்? உனக்கென்ன மண்டை கழன்று விட்டதா? எல்லோரும் பார்த்துக்கொண்டிருக்கிறார்கள். என ஏசினார்.


பிரபாகரனின் உடல் இருந்த இடத்திலுள்ள உறைந்து போன இரத்தத்தை சிறிதளவு எடுத்து சிறிய பையினுள் போட்டுக் கொண்டு அந்த இராணுவ வீரன் இருந்தான்.

அப்போது அவர் தன்னை ஏசிய அதிகாரியைப் பார்த்து " சேர் உங்களுக்கு ஒன்று தெரியுமா?

'என்னுடைய குடும்பத்தில் 3 சகோதரர்கள். அவர்கள் அனைவரும் இராணுவ வீரர்கள். இந்தப் பிரபாரகரனால் தான் இறந்தார்கள். ஆனால் எனது பெற்றோர்கள் இன்றும் உயிருடன் இருக்கிறார்கள். அவர்களுக்கு அவனது உறைந்த இரத்தம் படிந்த மணலை எடுத்துச் சென்று, எனது சகோதரர்களை கொன்ற கயவனைக்கொன்று விட்டோம் எனக் கூறி நான் வஞ்சம் தீர்க்கப் போகின்றேன்' என அந்த வீரர் கூறியதாக பிரிகேடியர் கமல் குணரட்ண எழுதிய தனது 800 பக்கங்களைக்கொண்ட ' நந்திக் கடலுக்கான பாதை" எனும் நூலில் குறிப்பிட்டுள்ளார்.



# ஒழுங்காக ஆடை அணியாத பெண்கள் பாடசாலை வளாகத்திற்குள் பிரவேசிக்கத் தடை



(கொழும்பு)

கொழும்பு சென் ஜோசவ் மற்றும் சென் பீற்றர்ஸ் ஆகிய கல்லூரிகளுக்கு தாய்மார்கள் மற்றும் சகோதரிகள் செல்வதற்கு தடை விதிக்கப்பட்டிருக்கின்றது. அங்கே ஆண்கள் படிக்கும் பாடசாலைக்கு பெண்கள் வருவதாயின் சீரான உடைகளை உடுத்திக் கொண் வர வேண்டுமென பாடசாலை நிர்வாகங்கள் அறிவித்துள்ளன.

இது குறித்த அறிவிப்புக்களை பாடசாலைகளின் முன்பாகவுள்ள அறிவித்தல் பலகையில் வெளியிட்டிருக்கிறார்கள். பாடசாலைக்கு வரும் தாய்மார்கள் மற்றும் சகோதரிகள் என்ன மாதிரியான உடைகளை உடுத்திக் கொண்டு வரவேண்டும் என்ற அறிவித்தல் பலகையை வைத்திருக்கிறார்கள்.

ஒழுங்காக சேலை அணிந்து கொண்டு வரவேண்டும். நீண்ட கவுண்கள் ஆனால் முழங்காலுக்கு கீழே இருத்தல் வேண்டும். ஜீன்ஸ் எனின் கால்கள் முழுமையாக மூடப்பட்டு இருப்பதுடன் மேற் சட்டையும் முழுமையாக அணிதல் வேண்டும் என்று அறிவிக்கப்பட்டிருக்கின்றது.

பெண்கள் குறிப்பாக தாய்மார் சேலை அணியும் போது இடை வெளியே தெரியும் படி இருக்கக் கூடாது. இதனை மீறும் தாய்மார் பாடசாலை வளாகத்திற்குள் அனுமதிக்கப்படமாட்டார்கள்.

தொப்பிளில் பம்பரம் விடுவது போல சேலை கட்டிக்கொண்டு செல்லக் கூடாது என்பது இப்பாடசாலை நிர்வாகத்தின் முக்கியமான அறிவிப்பாகும். ஆண்கள் படிக்கும் பாடசாலைக்கு வருகை தரும் தாய்மார்கள், சகோதரிகள் ஒழுங்கான ஆடைகளை அணிவதன் மூலம் மாணவர்களின் மனங்களை சஞ்சலத்திற்கு உட்படுத்தாமல் இருக்க வேண்டும் என்பதே இப்பாடசாலை நிர்வாகங்களின் எதிர்பார்ப்பாகும்.

# பிரபாகரனுக்கு இந்தியாவின் போக்கில் அதிருப்தி



## பிரபாகரனின் வாழ்க்கை வரலாறும் சமகால நிகழ்வுகளும்

'தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனையும் அவரது ஆலோசகர் அன்ரன் பாலசிங்கத்தையும் பெங்களுரிற்கு கூட்டி வருமாறு டெல்லி உள வுத் துறையினரால் எனக்கு கிடைத்த தகவலை தமிழக முதலமைச்சர் எம்.ஜி ராமச்சந்திரனிடம் கூறி அதனை உறுதி செய்து கொண்டேன்.

பெங்களுரில் நடைபெறும் தெற்காசியப் பிராந்திய நாடுகளின் உச்சி மாநாட்டில் பற்கேற்பதற்காக மத்திய உள்துறை அமைச்சர் பி.சிதம்பரமும் செல்கிறார் என தெரிய வந்தது. அதனையடுத்து எனக்கு தரப்பட்ட வேலைகளை நான் மிகவும் எச்சரிக்கையுடன் செய்து முடித்தேன்.'

'பிரபாகரனையும் அவரது அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கத்தையும் அழைத்து வந்து தாம்பரம் விமான நிலையத்தில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த விசேட விமானத்தில் ஏற்றி அவர்களை அனுப்பினேன். அவர்கள் இருவரின் பாதுகாப்பிற்காக நன்கு பயிற்றப்பட்ட இரு பாதுகாப்பு அதிகாரிகளையும் அவர்களுடன் அனுப்பி வைத்தேன்.'

**அரசகேசரி**

'பெங்களுரிற்கு அவர்களை அனுப்பி வைத்த பின்னர் பிரபாகரன் தனது கடும் போக்கை விட்டுக் கொடுப்பாரென எதிர்பார்த்தேன்' என முன்னாள் பொலிஸ் டி.ஐ.ஜி ஜே. மோகன் ராஜ் தான் எழுதிய புத்தகத்தில் குறிப்பிட்டுள்ளார்.

ஆனால் பெங்களுர் மாநாட்டிற்கு சென்ற பிரபாகரன் தனது ஈழக் கோரிக்கையை விட்டுக் கொடுக்க மறுத்து விட்டார். இந்தியாவின் உத்தியோகஸ்தர்களுடன் பிரபாகரனும் அவரது ஆலோசகர் அன்ரன் பாலசிங்கமும் இரண்டு சுற்றுப் பேச்சுக்களை நடத்திய நிலையில் ஈழக்கோரிக்கையிலிருந்து வெளியேறுமாறும் பெங்களுர் தெற்காசிய பிராந்திய மாநாட்டிற்கு வருகை தரும் இலங்கை ஜனாதிபதி ஜே.ஆர் ஜேயவர்த்தனாவை சந்திக்குமாறும் கேட்டுக் கொண்டார்கள்.

ஆனால் பிரபாகரன் தனது ஈழக் கோரிக்கையை விட்டுக் கொடுக்காததை அடுத்து ஜே ஆருடனான சந்திப்பு இடம்பெறவில்லை. பெங்களுரில் வைத்து பிரபாரகரனும் அவரது ஆலோசகரையும் அவர்களது கடும் போக்கான நிலைப்பாட்டில் இருந்து மாற்ற முடியும் என்ற நம்பிக்கையை எம்.ஜி ஆர் ராஜீவ் காந்திக்கு கொடுத்திருந்தார். ஆனல் பிரபாகரனின் கடும் போக்கை மறுத்த நிலைப்பாடு விட்டுக்கொடுக்கறுத்த இணக்கமறுத்த நிலைப்பாடும் எம்.ஜி ஆரை சினமடையச் செய்தது.

அதனையடுத்து சட்டவிரோதமாக தமிழ்ப் போராளிக் குழுக்கள் தமிழ்நாட்டில் இருந்து அவர்களுடைய இலங்கைச்சகாக்களை தொடர்பு கொண்டுவந்த வானொலி தொடர்பு சாதனங்களை உடனடியாக கைப்பற்றி பறிமுதல் செய்யுமாறு தமிழக முதல்வர் எம்.ஜி.ஆர் உத்தரவிட்டார்.

அந்த வானொலி தொடர்பு சாதனங்களை கைப்பற்றி செயலிழக்க வைத்தால் போராளிக் குழுக்களின் நடவடிக்கைகளை அறியக்கூடிய பெரிய தொலைத் தொடர்பு சாதனத்தை இழக்க வேண்டி வரும் எனக் கருதப்பட்டது. இருந்த போதும் எம்.ஜி ஆர் இன் கட்டளைக்குப் பணிந்து ஈழப் போராளிக் குழுக்களின் தொலைத்தொடப்பு சாதனங்களை பொலிஸார் கைப்பற்றினார்கள்.

இந்த வானாலி சாதனங்கள் கைப்பற்றப்பட்டதையடுத்து சினமடைந்த பிரபாகரன் தனது எதிர்ப்பை வெளியிடும் முகமாக உண்ணா நோன்பை ஆரம்பித்தார். அதே நேரம் இந்த தொலைத் தொடர்பு சாதனங்கள் விடுதலைப் புலி போராளிகளிடமிருந்து கைப்பப்பற்றப்பட்டது குறித்து மத்திய அரசிடம் ஆலோசிக்கப் படவில்லையென மத்திய உள்துறை அமைச்சர் பி.சிதம்பரம் அறிக்கையொன்றை வெளியிட்டார்.

இவ்வாறான ஓர் அறிக்கை வெளியிடப்பட்டதை தொடர்ந்து, ஈழப் போராளிக் குழுக்களிடம் இருந்து கைப்பற்றப்பட்ட தொடர்பு சாதனங்களையும் மற்றும் ஆயுதங்களையும் திரும்பவும் அவர்களிடம் ஒப்படைக்குமாறு தமிழக முதல்வர் எம்.ஜி.ஆர் உத்தரவிட்டார்.

இதற்கிடையில் ஜனவரி 1986ல் இலங்கையில் சகோதரப் படுகொலைகள் ஆரம்பமாகின. ஆரம்பத்தில் இந்தப் படுகொலைகளை பொதுமக்கள் ஓரளவு ஏற்றுக் கொண்ட போதிலும் அவ்வாறு செய்யப்பட்ட படுகொலைகள் மனித நேயத்திற்கு எதிரான செயல்களாகவே இருந்தன. இவை தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டே இருந்தன. இவ்வாறான நிலையில் யாழ்ப்பாணத்தில் இலங்கை அரசாங்கம் தனது நிர்வாக கட்டுப்பாட்டை இழந்து கொண்டே இருந்தது. அதனையடுத்து போராளிக் குழுக்கள் புதுப்புது வரிகளையும் சட்டங்களையும் அறிமுகப்படுத்த தொடங்கினர்.

விடுதலைப் புலிகள், Telo, Plote,Eprlf ,Eros போன்ற அமைப்புகள் பொருட்களுக்கு வரி விதிக்கத் தொடங்கினர். அவர்கள் புகையிலை, சிகெரெட், குளிர்பான வகைகள், நகைகள் அஸ்பெஸ்ரொஸ்சீற் வகைகள், சீமெந்து வகைகள், இலத்திரனியல் சாதனங்கள், எல்லாவற்றிற்கும் வரி விதித்தார்கள். Eprlf, வானொலிக்குவரியும், தபால் முத்திரைகளுக்கு வரியும் விதித்தார்கள்.

அது போல புலிகள் தாம் தயாரித்த சவர்க்காரம், ஜாம், ஊறுகாய் ஆகிய பொருட்களை விற்பனை செய்தார்கள். அயுதம் ஏந்திய போராளிகளே பொதுமக்களிடம் வரியை வசூலித்தார்கள். வர்த்தகர்கள், முதலாளிமார்கள், மொத்த வியாபாரம் செய்கின்றவர்கள் கடத்தப்பட்டு கப்பம் கோரப்பட்டார்கள். யாழ் குடாநாடு முழுவதுமே பல விதமான கொள்ளைகளினால் அதிர்ந்து கொண்டிருந்தது. கடைகள் வீடுகள் கோயில்கள் எல்லாமே கொள்ளையடிக்கப்பட்டன.

ஆனால் எந்தப் போராளிக்குழுவும் இவற்றை தாமே செய்ததாக பகிரங்கமாக ஒத்துக் கொள்ள முன்வரவில்லை. ஆனால் பயங்கர ஆயுதங்களை வைத்திருந்த இத்தகைய போராளிக் குழுக்களே இந்தக் கொள்ளைச் சம்பவங்களை செய்கின்றார்கள் என்பது பொதுமக்களுக்கு நன்கு தெரிந்தே இருந்தது.

1986 ஆம் ஆண்டு ஏப்பிரல் 25 ஆம் திகதி புலிகள் சென்ற வள்ளத்தை இலங்கைக் கடற்படை மூழ்கடித்தது. அந்த வள்ளத்தில் மேஜர் அருணாவும் மேலும் 10 போராளிகளும் இருந்ததாக புலிகள் அறிவித்தார்கள். அதனையடுத்து மேஜர் அருணா உள்ளிட்ட பத்து புலிகளின் படங்கள் அடங்கிய சுவரோட்டிகள் யாழ் குடாநாடு முழுவதிலும் ஒட்டப்பட்டன. இந்த சுவரொட்டிகளை ரெலோ அமைப்பினர் ஆங்காங்கே கிழித்து எறிந்ததையடுத்து இரு தரப்பினருக்கும் இடையில் முறுகல் நிலை ஏற்பட்டது. இந்த முறுகல் நிலை கைகலப்பில் ஆரம்பமாகி துப்பாக்கிச் சூட்டில் முடிவடைந்தது.

இதனையடுத்து ரெலோ அமைப்பின் தலைவர் ஸ்ரீ சபாரட்ணம் ஒளிந்து மறைந்து இருந்த இடத்தில் வைத்து துப்பாக்கியினால் சுட்டுக் கொல்லப்பட்டார். இந்தக் கொலையை அடுத்து பல விதமான பொருட்களை யாழ் பஸ் நிலையத்தின் முன்பாக கொண்டு வந்து விடுதலைப் புலிகள் போட்டார்கள்.

இந்தப் பொருட்களை ரெலோ அமைப்பினர் தான் கொள்ளையடித்ததாகவும் இந்தப் பொருட்களை இவற்றின் உரிமையாளர்கள் அடையாளம் காட்டி மீளவும் பெற்றுக் கொள்ள முடியுமெனவும் விடுதலைப் புலிகள் அறிவித்தார்கள்.

வடக்கில் இவ்வாறு சகோதரப் படுகொலைகள் நடைபெற்றுக் கொண்டிருந்த நேரம் கிழக்கிலங்கையில் புலிகளுக்கும் ஏனைய இயக்க உறுப்பினர்களுக்கும் இடையில் முறுகல் நிலை ஏற்பட்டது. ஆனால் புலிகளின் கிழக்கு தளபதிகளுள் ஒருவராக இருந்த கடவுள் என்பவர் ஏனைய இயக்க உறுப்பினர்களை அழைத்து பேச்சு நடத்தினார். தாம் தளபதியாக இருக்கும் வரையில் தங்களுக்கு இடையில் எவ்வித மோதல்களும் ஏற்படாது என அவர்களிடம் உறுதியளித்தார்.

புலிகளின் இந்த உத்தரவு செயற்படுத்தப்படாததையடுத்து கிழக்கு மாகாணம் முழுவதற்குமான புலிகளின் தளபதியாக குமரப்பாவை நியமித்து புலித் தலைமை உத்தரவிட்டது. இந்த நிலையில் கிழக்கு மாகாணத்திற்கு வந்த புலிகளின் புதிய தளபதியான குமரப்பா, கண்ட கண்ட இடங்களில் எல்லாம் ரெலோ உறுப்பினர்களையம் ஏனைய உறுப்பினர்களையும் குருவிகளை சுடுவது போல சுட்டுத் தள்ளினார்.

வட மாகாணத்தில் புளொட் தளபதியான மெண்டிஸை புலிகளின் தளபதியான கிட்டு கைது செய்து சித்திரவதைக்கு உட்படுத்தி துப்பாக்கியால் சுட்டுக் கொன்றார். சுட்டுக் கொல்லப்பட்ட தளபதி மெண்டிஸின் உடலை அவரது குடும்பத்தாரிடம் கொடுக்கவில்லை. ஆனால் மெண்டிஸ் அணிந்திருந்த உடையையும் அவரது தங்கச்சங்கிலியையும் அவரது உறவினர்களிடம் திருப்பிக் கொடுத்தார்.

அதே நேரம் Eprlf தங்களின் யாழ் தலைமைத் தளபதியாக இருந்த டக்ளஸ் தேவானந்தாவை நீக்கி விட்டு கே. பிரேமச்சந்திரனை ( இப்போதைய சுரேஷ் பிரேமச்சந்திரன்) தலைமைத் தளபதியாக நியமித்தது.

புதிய தளபதியாக நியமிக்கப்பட்ட சுரேஷ் பிரேமச்சந்திரன் தனது சக போராளிகளை ஒன்றிணைத்து Eprlf ல் தனது அதிகாரத்தை நிலைநாட்டும் முயற்சியில் ஈடுபட்டார். 1986 ஆம் ஆண்டு டிசம்பர் 13 ஆம் திகதி தமிழீழத்தில் பாவிப்பதற்கென தபால் அட்டைகளை வெளியிட்டார். அதே நேரம் புலிகள் Eprlf உறுப்பினர்கள் மீது துப்பாக்கிப் பிரயோக தாக்குதலை மேற்கொண்டார்கள்.

புலிகள் eprlf இயக்கத்திற்கு எதிராக தாக்குதல்களை நிறுத்தியபோது கிட்டத்தட்ட 100 Eprlf உறுப்பினர்கள் இறந்திருந்தனர். 1986 ஆம் ஆண்டு இறுதியில் போராளிக் குழுக்கள் மத்தியில் இவர்களில் புலிகளே மிகவும் சக்திவாய்ந்த போராளிக் குழுவாக மாறியிருந்ததுடன் அந்தக் காலத்தில் ரெலோ புளொட் மற்றும் Eprlf இயக்கங்கள் புலிகள் தடை செய்திருந்தார்கள். ஆனால் எப்போதும் புலிகளை அனுசரித்துச் சென்ற ஈரோஸ் இயக்கத்தை தொடர்ந்து இயங்குவதற்கு புலிகள் அனுமதித்திருந்தார்கள்.

அந்தக் காலத்தில் யாழ் அரசியல் முனையில் புதிய திருப்பம் உருவாகியிருந்தது. புலிகளின் கட்டளைத்தளபதியான கிட்டு என அழைக்கப்படும் சதாசிவம் கிருஷ்ணகுமார் இலங்கை இராணுவத்தின் உயர் அதிகாரியான கப்டன் ஜெயந்த கொத்தலாவலயின் அழைப்பை ஏற்று யாழ் கோட்டைக்கு வெளியே ஓர் சந்திப்பை நடத்துவதற்கு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டன. அவர்கள் முதலில் யாழ் கோட்டைக்கு வெளியே ஓர் மோட்டார் வாகனத்திற்குள் இருந்து கொண்டு சந்தித்து பேச்சு நடத்தினார்கள். இந்த சந்திப்பையடுத்து புலிகளின் தளபதியான கிட்டுவும் இராணுவ உயர் அதிகாரியும் யாழிலுள்ள புலிகளின் தலைமைக் காரியாலயத்தில் பேச்சுவார்த்தை நடத்தினார்கள்.

அந்தக் காலத்தில் புலிகளின் தளபதியான கிட்டு மேடைகளில் பேசும் போது அடிக்கடி சொல்லிக் கொள்வது "எந்தச் சந்தர்ப்பத்திலும் தமிழர்கள் இந்தியாவை நம்பி பெறும் எந்தவொரு சமாதானமும் கௌரவமான தீர்வாக அமையாது" எனக் கூறி வந்தார்.' இந்த நிலையில் இலங்கை அரசு திடீரென நத்தார் பண்டிகையை முன்னிட்டு ஒரு யுத்த நிறுத்தத்தை அறிவித்தது. அதனையடுத்து புலிகளின் தளபதி கிட்டுவும் இலங்கை அரசின் உத்தியோகஸ்தர்களும் காங்கேசன் துறையிலுள்ள பழைய நகரசபைக் கட்டிடத்தில் 3 மணி நேரம் சந்தித்துப் பேச்சு நடத்தினார்கள். இந்தச் சந்தர்ப்பத்தில் டெல்லியின் மனோநிலையை அறிந்து கொண்ட பிரபாகரன் "எந்தச் சந்தர்ப்பத்திலும் இந்தியாவின் ஈடுபாடு இல்லாமல் அரசுடன் எவ்விதமான தீர்மானத்திற்கும் வரமாட்டேன்" என அறிவித்தார். இதே நேரத்தில் பிரபாகரன் "தனது ஒரே கொள்கை தமிழீழத் தாயகம் தான் என்றும் அந்தக் கொள்கையை தான் எச்சந்தர்ப்பத்திலும் கைவிட மாட்டேன்" என்றும் அறிவித்தார். அது மாத்திரமல்லாமல் தமிழ்நாடு பொலிஸார் தங்களிடம் இருந்த வானொலி சாதனங்களை கைப்பற்றியது மற்றும் ஆயுதங்களை கைப்பற்றியதை அடுத்தும் தம்மைக் கொல்வதற்கான முயற்சிகள் நடப்பதனாலும் விரைவில் தாம் நாட்டைவிட்டு இலங்கைக்கு திரும்புவதாக அறிவித்தார். அது மாத்திரம் இல்லாமல் தாம் யாழ் சென்ற பின்னர் தமிழீழப் போராட்டம் தீவிரப்படுத்தப்படும் என்றும் அறிவித்தார். அது மட்டுமின்றி ஜனவரி 1ல் யாழில் தமிழீழப் பிரகடனம் செய்ய பிரபாகரன் திட்டமிட்டிருப்பதாக வதந்திகள் வேகமாகப் பரவின.

(தொடரும்...)

# மீண்டும் யாழ்ப்பாணம் எரிகின்றது




அன்று யாழ்ப்பாண காங்கேசன் துறை வீதியின் மேற்குப் பக்கத்தில் அமைந்திருந்த நாச்சிமார் அம்மன் கோவிலில் கிழக்கு வீதியில் யாழ் மாவட்டத்திற்குரிய அபிவிருத்திச் சபை தேர்தல் கூட்டம் ஒன்று நடைபெற்றது.

கூட்டத்திற்கு தலைமை வகித்த யாழ் மேயர் ராசாவிசுவநாதன் பேசிக் கொண்டிருந்த போது துப்பாக்கிச் சூடு நடைபெற்றது. அந்தச் துப்பாக்கிச் சூட்டின் போது நாச்சிமார் கோயில் தேர்தல் பிரசாரக் கூட்டத்திற்கு பாதுகாப்பு வழங்குவதற்காக நான்கு பொலிஸார் ஒரு வாங்கில் அமர்ந்திருந்தனர். அங்கே பாதுகாப்பில் ஈடுபட்டிருந்த சார்ஜன் புஞ்சி பண்டா சூட்டிற்கு பலியாகி ஸ்தலத்திலேயே இறந்திருந்தார். சார்ஜன் கனகரத்தினம் ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் செல்லப்பட்டு அங்கே மரணமடைந்தார். அதனையடுத்து யாழில் கலவரம் கட்டவிழ்த்து விடப்பட்டது.

அந்தக் கலவரத்தில் பாதிக்கப்பட்டவர்களில் முக்கியமானவா அன்று தமிழர் ஐக்கிய விடுதலைக் கூட்டணியின் நாடாளுமன்ற உறுப்பினரான திரு யோகேஸ்வரனும் ஒருவராவார். அவரது வீட்டிற்கு தீ வைக்கப்பட்டது. அந்த நெஞ்சம் பதை பதைக்கும் விபரங்களை இன்று மீண்டும் எம்மவர்களுக்கு தெரியப்படுத்தும் நோக்கத்துடன் தருகின்றோம்:

1981 ஆம் ஆண்டு மே மாதம் 31 ஆம் திகதி இரவு யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற பொலிஸாரின் அராஜகம் மறந்து விடக்கூடிய விடயமல்ல. 1977 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 15 ஆம் திகதி இரவு தொடங்கிய இனக் கலவரம் ஈழத்தமிழகத்தில் இரத்தக் கறை படிந்த அந்த 24 மணி நேரத்தை நண்பர் நீல வண்ணன் நூல் வடிவமாக தந்துள்ளார்.

மீண்டும் யாழ்ப்பாணம் எரிகின்றது என்ற அந்த நூலில் அவர் பின் வருமாறு குறிப்பிடுகிறார்.

இதோ மீண்டும் ஒரு 24 மணி நேரம்.

எந்த நிகழ்ச்சி மறுபடியும் இந்த மண்ணில் நிகழக்கூடாதென்று நினைத்தோமோ அது மீண்டும் அசுரத்தனமாக தோன்றி விட்டது.

1981 ஆம் ஆண்டு மே மாதம் 31 ஆம் திகதி ஞாயிறு இரவு யாழ்ப்பாணத்தில் நிகழ்ந்த அட்டுழியங்களில் உச்சமானது தான் யாழ்ப்பாண நாடாளுமன்ற உறுப்பினர் திரு வெ.யோகேஸ்வரனின் வீட்டில் நிகழ்ந்ததாகும்.

யாழ் எம்.பி திரு யோகேஸ்வரன் வீட்டிற்கு சிங்கள பொலிஸ் சென்றனர். அவர்களில் சிலர் பொலிஸ் உடையிலும் சிலர் சிவில் உடையிலும் வந்திருந்தனர். துப்பாக்கியால் சுட்டு கதவுப் பூட்டையும் உடைத்தனர். வீட்டிற்குள் இருந்த அனைத்திற்கும் தீ வைத்தனர். வீடு முற்றிலும் எரிந்து சாம்பலானது.

யாழ் எம்.பியும் அவரது மனைவியும் மதிலால் தாவி ஓட நேர்ந்தது. திரு யோகேஸ்வரனின் வீட்டைப் பொலிஸார் கொளுத்திய போது வெளியில் சில பொலிஸ்காரர்கள் துப்பாக்கியுடன் நின்றிருந்தனர். யாழ் எம்.பியின் ஜீப் தீயிட்டு எரிக்கப்பட்டது. அவரது வீட்டில் நின்றிருந்த நண்பர் ஒருவரின் காரும் எரிக்கப்பட்டது. யாழ்ப்பாண எம்.பி வெளியே வந்திருந்தால் சுடப்பட்டிருப்பார். யாழ் எம்.பி கட்டியிருந்த சாரமும் அவரது மனைவி உடுத்திருந்த உடையும் தவிர அனைத்து உடமைகளும் நகைகளும் தீக்கிரையாகின.

யாழ்ப்பாண எம்.பி யோகேஸ்வரன் தனக்கு அன்றிரவு நேர்ந்த பயங்கர அநுபவங்களையும் சேதாரங்களையும் நாடாளுமன்றத்தில் வெகு உருக்கமாக எடுத்துக் கூறினார்.

' யாழ்ப்பாணத்தில் நிகழ்ந்து போன துயரச் சம்பவங்களில் இருந்து தமிழர் சமுதாயமும் சிங்கள சமுதாயமும் ஒரு பாடத்தைப் படித்துக் கொள்ள வேண்டும். யாழ்ப்பாபாணத்தில் நடந்த சம்பவங்களால் தமிழ் மக்கள் நல்லதொரு பாடத்தைப்படித்து விட்டார்கள். அத்துடன் நல்லதொரு முடிவுக்கும் வந்து விட்டார்கள். 31 ஆம் திகதி நள்ளிரவு ஆண்டவன் தான் என்னை மரணத்திலிருந்து காப்பாற்றினான். எனது மனதில் அமைதியில்லை. எனக்கு நடந்த சம்பவங்கள் இந்த நாட்டிள் எந்தவொரு எம்பிக்கும் நடந்திராத கசப்பான சம்பவங்கள் ஆகும். தன் மக்களுடன் பாராளுமன்ற உறுப்பினர் சட்டத்தைப் பாதுகாப்பவர்களிடம் இருந்து வீட்டிற்கு வீடு ஒளித்து ஓட நேர்ந்துள்ளது. நாகரீகமான எமது நாட்டில் இப்படியான தொரு சம்பவம் நடக்குமோ எனக் கனவுகாண முடியாது. ஆனால் இது நடந்து விட்டது.

31 ஆம் திகதி இரவு தெல்லிப்பளையில் நிகழ்ந்த தமிழர் விடுதலைக் கூட்டணியின் தேர்தல் பிரச்சாரக் கூட்டத்தில் கலந்து விட்டு, வீடு திரும்பும் போது யாழ் பெரிய கடைப்பக்கமிருந்து தீ நாக்குகள் வானளாவி எழுவதைக்கண்டேன். வீட்டிற்கு வந்ததும், எனது மனைவி நகரில் கலவரங்கள் தலை தூக்கியிருப்பதாக அறிவித்தார். 'கலவரம் புரிவோர் எமது வீட்டை நோக்கியும் வரலாம்' என என் மனைவி கூறினார். எம்.பி யான எனது வீட்டிற்கு எதுவும் செய்ய மாட்டார்கள் சும்மா கத்திவிட்டுப் போவர்கள்' என என் மனைவியிடம் கூறினேன். நான் மாவட்ட அமைச்சரிடம் தொலைபேசியில் தொடர்பு கொள்ள முயன்றேன். அவருடன் தொடர்பு கொள்ள முடியவில்லை. அடுத்து நான் பொலிஸ்மா அதிபருடன் தொடர்பு கொள்ள முயன்றேன். அவ்வேளை அவர் திருகோண மலையில் இருந்தார்.

'எனது வீட்டருகே பருத்தித்துறை வீதிச்சந்திக்கு அருகில் பல சத்தங்கள் கேட்டன. சுமார் 100 பேர் வரையில் எனது வீட்டை நோக்கிச் சத்தமிட்டவாறு வந்தனர். அவர்களில் சிலர் பொலிஸ் சீருடை அணிந்திருந்தனர். அவர்களுடைய கைகளில் வாள்களும் துப்பாக்கிளும் இருந்தன. அவர்கள் பூட்டப்பட்டிருந்த கேற்றை துப்பாக்கியினால் சுட்டு உடைத்தனர். அப்போது அவர்கள் மது போதையில் இருந்தார்கள். நகரிலிருந்த மதுபான விற்பனை நிலையம் ஒன்றை உடைத்து பழக்கமில்லாத குடிவகைகளையும் குடித்திருந்தார்கள்.

பாதுகாப்பைக்கருதி நானும் எனது மனைவியும் பின்னால் ஓடி ஒளிந்து கொண்டோம். சுமார் 45 நிமிடங்களில் திரும்பி வந்தபோது பனியனுடன் நின்று கொண்டிருந்த ஒருவர் எனது கையைப் படித்து 'எம்.பி எங்கே என்று கேட்டார். அவர் வெளியில் சென்று விட்டதாகக் கூறினேன். அவரால் என்னை அடையாளம் காண முடியவில்லை. ஒருவாறு நானும் எனது மனைவியும் பின் வழியால் தப்பி ஓடினோம். ஒவ்வொரு வீடாக ஒளித்து ஒளித்து நாம் தப்பினோம். நான் அப்போது மஞ்சள் சாரம் அணிந்திருந்தேன். எனது மனைவி கவுண் மாத்திரம் அணிந்திருந்தார்.

எனது ஜீப் இரும்புக் கம்பிகளால் நொருக்கப்பட்டு தீ வைத்துக் கொளுத்தப்பட்டது. எனது நண்பர் ஒருவரின் காரும் எனது கராஜ்ஜில் இருந்தது. பேஜோ 404 கார் அந்தக் காரும் தீ வைத்து எரிக்கப்பட்டது.எனது வீட்டிலிருந்த பொருட்களும் நகைகளும் அவர்களினால் கொள்ளையடிக்கப்பட்டன. பின்னர் எனது வீட்டிற்கு தீ வைக்கப்பட்டது.

'நான் ஒரு சட்டத்தரணி. விலை உயர்ந்த சட்டப் புத்தகங்கள் உறுதிப் பிணைகள் வழக்குகள் சம்பந்தப்பட்ட தஸ்தாவேஜகள் தட்டச்சு இயந்திரம் ஆகியவை வீட்டில் இருந்தன. அனைத்தும் எரிந்து சாம்பலாகி விட்டன. வெளிநாடு செல்லவிருந்த 15 இளைஞர்களின் கடவுச் சீட்டுகளும் என்னிடம் இருந்தன. அவையும் எரிந்தன.

'மறு நாள் காலை 300 யார் தொலைவிலுள்ள என் தந்தை வீட்டிற்கு சென்றோம். அவர் ஒரு டாக்டர். நானும் எனது மனைவியும் உடுத்தியுள்ள ஆடைகள் மட்டுமே எமக்கு சொந்தமாகவுள்ளன. இப்போது நான் எனது தந்தையின் சட்டையைத்தான் அணிந்துள்ளேன்.

அன்று மாலையும் படை வீரர்கள் என்னைத் தேடி வந்தார்கள். 'எங்காவது போயிருப்பார் என என் தந்தை கூறி விட்டார். அன்று அதிகாலை 2 மணியளவில் என்னை மதிலால் ஏறிக் குதிக்க வைத்த பொலிஸார் என் தந்தையின் வீட்டைத் தட்டி தந்தையை எழுப்பினர்.மகன் எங்கே? என்று கேட்டு ஒவ்வாரு அறையாக தேடினர். எனக்கு பாதுகாப்பு அளிக்க வந்ததாக கூறினர். அது ஒரு கண் துடைப்பாகும்.

எனது மாமனார் இவற்றைக் கேள்விப்பட்டு மாரடைப்பினால் மரணமானார். அவரது மரணம் சம்பந்தமாக பத்திரிகைகளுக்கும் வானொலிகளுக்கும் அறிவிக்கப்பட்டது. யாழ்ப்பாண எம்.பி யோகேஸ்வரனின் மாமனார் காலமாகி விட்டார் என வானொலிக்கு அறிவித்தோம். ஆனால் அங்குள்ளோர் யாழ்ப்பாணம் என்பதை நீக்கி விட்டு வெறுமனே யோகேஸ்வரன் எம்.பி எனக் கூறும் அளவுக்கு இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத் தாபனமும் நடந்து கொண்டுள்ளது.

மேலே ஒருவர் இருக்கிறார். அவன் பார்த்துக் கொண்டிருக்கிறான். இன்று எமக்கு நேர்ந்த கதி உங்களுக்கும் நிகழலாம். வடபகுதியில் அமைதியான மக்கள் மீது ஆயுதம் ஏந்தாத மக்கள் மீது வன்செயல்கள் கட்டவிழ்த்து விடப்பட்டுள்ளன.

திரு யோகேஸ்வரன் எம்பியின் வீடு முற்றாக எரிந்து அழிந்துள்ளது. ஓடு வேய்ந்த கூரை எரிந்து தகர்ந்து சரிந்து விட்டது. வீடு நிறைய உடைந்த ஓடுகள் சிதறிக் கிடக்கின்றன. கற்சுவர்கள் தீயில் வெடித்துக் கிடக்கின்றன. கதவுகள் யன்னல்கள் யாவுமே தீயில் எரிந்து சாம்பராகியுள்ளன. பாழடைந்து போன வீடாக யாழ்ப்பாண எம்பி யோகேஸ்வரனின் வீடு விளங்குகின்றது.

வீட்டிற்கு தீயிட முன்னர் திரு யோகேஸ்வரனின் வீட்டு முற்றத்தில் மின்சாரசபையினரால் உருட்டி விடப்பட்டிருந்த கேபிள் கொண்ட உருளைகள் வெகு பக்குவமாக தீ பரவாத பகுதிக்கு உருட்டி விடப்பட்ட பின்னரே கொள்ளி வைக்கப்பட்டது.திரு யோகேஸ்வரனின் வீட்டு போர்ச்சில் நின்றிருந்த அவரது நண்பர் ஒருவரின் பேஜோ 404 ஸ்ரீ 6941 இலக்க கார் முற்றாக எரிந்து போயிருக்கின்றது. எம்.பின் ஜீப் வெளியே எடுத்து வரப்பட்டு வீதியிலுள்ள மருத மரத்தின் கீழ் விடப்பட்டு தீ மூட்டப்பட்டிருக்கின்றது.

யாழ்ப்பாண நாடாளுமன்ற உறுப்பினரின் வீட்டிற்கும் உடமைகளுக்கும் தீ வைத்து நாசமாக்கிய கூட்டம் பிரதான வீதியை நோக்கிச் சென்றது. பிரதான வீதியில் தான் தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைமை அலுவலகம் இருக்கின்றது. போகின்ற வழியில் ஆஸ்பத்திரி வீதியும் முதலாம் குறுக்குத் தெருவும் சந்திக்கின்ற சந்தி உள்ளது. அந்தச் சந்தியில் திரு ஆர். ஆர் பூபாலசிங்கத்திற்கு சொந்தமாக புத்தகக் கடை ஒன்று உள்ளது. பஸ் நிலைய முன்றலில் பூபாலசிங்கத்திற்கு சொந்தமான கடை எரிந்து கொண்டிருக்கின்றது. முதலாம் குறுக்குத் தெருவில் உள்ள பூபாலசிங்கம் புத்தகக்கடையும் அவர்களின் கண்களில் பட்டது. பெற்றோலை ஊற்றி அக் கடைக்கும் கயவர்கள் தீ மூட்டினார்கள். நான்கு லட்சம் பெறுமதியான சொத்துக்கள் அக்கடையுடன் நாசமாகின. கட்டிடமே எஞ்சாத அளவிற்கு தீ அக்கடையை தரைமட்டமாக்கியது. பூபாலசிங்கம் புத்தகக் கடைக்கு அருகில் இருந்த லோன்றி ஒன்றும் முற்றாக எரிந்து போனது. இக்கடைக்கு பின்புறத்திலிருந்த வீடும் தீயினால் பாதிக்கப்பட்டது.

**கூட்டணி அலுவலகம் தீக்கிரை**

அன்றிரவு இந்தக்கொடியவர்களால் யாழ்ப்பாணம் பிரதான வீதியில் அமைந்துள்ள தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைமை அலுவலகம் தீக்கிரையானது.

யாழ்ப்பாண எம்.பி திரு வெ .யோகேஸ்வரனின் வீட்டை எரித்து முடித்து விட்டு அதன் பின்னர் அந்தக் கோஷ்டியினர் தமிழர் விடுதலைக் கூட்டணியின் அலுவலகத்திற்கு சென்று தீ வைத்தனர்.

தமிழர் விடுதலைக் கூட்டணி அலுவலகத்தில் காவலுக்கு இருந்த காவலாளியை அவர்கள் அடித்து துரத்தி விட்டனர். அதன் பின்னர் கூட்டணி அலுவலகக் கூரைக்குத் தீயிட்டனர். தீ எரியத் தொடங்கியது. கூட்டணி அலுவலக கதவை உடைத்து உள் நுழைந்தனர். தந்தை செல்வா ஜீ.ஜீ பொன்னம்பலம் முதலானோரின் படங்களைக்கழற்றி எடுத்து வந்து நடு வீதியிலிட்டு உடைத்தனர். அலுவலகத் தளபாடங்கள் சிலவற்றையும் தூக்கி வந்து நடு வீதியில் அப்படங்களுக்கு மேல் போட்டு பெற்றோல் ஊற்றி தீயிட்டனர். கட்டிடக்கூரை முற்றாகத் தகர்ந்து சுவர்கள் பாளம் பாளமாக வெடித்துக் காணப்படுகின்றன.

கூட்டணியின் தலைமைச் செயலகத்திற்கு முன்பாக சுமார் 40 பேர் குழுமி நின்றனர். சிங்களத்தில் தூசண வார்த்தைகளைப் பேசிய வண்ணம் நின்ற அவர்கள் எண்ணை தோய்த்த சேலைப் பந்தங்களை கூட்டணிக் காரியாலயத்தின் மீதும் வீசினர். அவை தீப் பற்றி எரியத் தொடங்கிய போதும் ஒரு மணி நேரம் வரை அவர்கள் அங்கிருந்தனர்.

அவர்கள் பொலிஸ் ஜீப்பிலேயே அங்கு வந்திருந்தனர். அவர்கள் வ்ந்த வாகனம் அணிந்திருந்த உடை ஆகியவற்றைக்கொண்டு பொலிஸாரே என்பதை திடமாகக் கூற முடியும்' என மாநகர சபை அங்கத்தவர் அலோஷியஸ் விஷேட பொலிஸ் விசாரணைக்குழுவிடம் கூறியுள்ளார்.

கூட்டணி அலுவலகத்திற்கு அருகில் இருந்த இன்னொரு கடையும் இந்தக் கயவர்களால் எரிக்கப்பட்டது. கதிரைகளையும், கிளாஸ் போன்ற சாதனங்களையும் வாடகைக்கு விடும் கடை அதுவாகும். அது முற்றாக எரிந்து போனது. குட்டிச் சுவர்கள் மட்டும் இன்று எஞ்சி நிற்கின்றன. இக்கடைக்கு அருகிலுள்ள டாக்டர் செபஸ்தியாம்பிள்ளை என்பவரின் வீட்டின் ஒரு பகுதியும் எரிக்கப்பட்டுள்ளது.

**சுன்னாகத்தில் தீ வைப்பு**

ஞாயிறு இரவு சுன்னாகத்திலுள்ள சில கடைகள் கடையடைப்பிற்கும் சூறையாடல்களுக்கும் தீ வைப்புக்கும் உட்பட்டன.

இவ்வளவிற்கும் அக்கடைகள் யாவும் சுன்னாகம் பொலிஸ் நிலையத்திற்கு அருகிலேயே இருக்கின்றன. சுன்னாகத்தில் காங்கேசன்துறை வீதியும் சந்தையின் தெற்கு வீதியும் இணைகின்ற சந்தியில் உள்ள மூன்று கடைகள் கொள்ளையடிக்கப்பட்டதன் பின்னர் தீக்கிரையாக்கப்பட்டன.

நூல் ஆதாரம் : மீண்டும் யாழ்ப்பாணம் எரிகின்றது
"24 மணி நேரம்" ஆசிரியர்
நீலவண்ணன்
பக்கங்கள் –17–23 வரை.

# பிரபாகரன் 28 ஆண்டுகளுக்கு முன்னர் கருணாநிதிக்கு எழுதிய கடிதம்

281

தமிழீழ விடுதலைப் புலிகள்
Liberation Tigers of Tamil Eelam
TAMIL EELAM

22. 2. 1989
தமிழீழம்

எனது பெருமதிப்பிற்கும் அன்பிற்குமுரிய அண்ணா அவர்களுக்கு,

திரு வை. கோபாலசாமி அண்ணா அவர்கள் [illegible]

282

தமிழீழ விடுதலைப் புலிகள்
Liberation Tigers of Tamil Eelam
TAMIL EELAM


[illegible]

283

தமிழீழ விடுதலைப் புலிகள்
Liberation Tigers of Tamil Eelam
TAMIL EELAM

[illegible]

இப்படிக்கு
தங்கள் நலனை என்றும் விரும்பும்
வே. பிரபாகரன்.



விடுதலைப் புலிகள் அமைப்பின் தலைவர் பிரபாகரன் திமுக தலைவரும் தமிழகத்தின் அப்போதைய முதல்வருமானகருணாநிதிக்கு எழுதிய கடிதத்தை 28 ஆண்டுகளுக்குப் பின்னர் வெளியிட்டிருக்கிறார் மதிமுக பொதுச் செயலாளர் வைகோ.

1989ம் ஆண்டு பிப்ரவரி 22ம் திகதி எழுதப்பட்ட அந்தக் கடிதத்தில் இலங்கையில் அமைதியை நிலைநாட்ட இந்திய ராணுவம் அனுப்பிய ஐ.பி.கே.எப் குழு அங்கு அநீதியை கட்டவிழ்த்துவிட்டதாக பகிரங்கமாக குற்றஞ் சாட்டியிருக்கிறார் பிரபாகரன்.

கடிதத்தை தற்போது வெளியிட்டது குறித்து வைகோ "தி இந்து" ஆங்கில நாளிதழிடம் கூறும் போது "இலங்கைவனப் பகுதியில் பிரபாகரனை நான் சந்தித்தபோது அவர் இந்த கடிதத்தை எனக்குக் கொடுத்தார். அதிலிருந்து ஒரு சிலமாதங்களுக்குப் பின்னர் நான் அக்கடிதத்தை கருணாநிதியிடம் கொடுத்தேன். ஆனால் அக்கடிதத்தை அழித்துவிட்டதாககருணாநிதி பின் நாளில் என்னிடம் கூறினார்.

நான் அதன் பிரதி ஒன்றை இன்றளவும் பாதுகாத்து வைத்துள்ளேன். அந்தக்கடிதத்தின் உள்ளடக்கத்தை அனைவரும் தெரிந்து கொள்ள வேண்டும் என்பதாலேயே அதனை இப்போது வெளியிடுகிறேன" எனத் தெரிவித்தார்.

கருணாநிதியை "எனது பெருமதிப்புக்கும் அன்புக்கும் உரிய அண்ணா" என்று அக்கடிதத்தில் பிரபாகரன் விளித்திருக்கிறார். இலங்கை நாடாளுமன்றத்தில் உள்ள தமிழ் தலைவர்கள் எல்லோரும் தங்களை கைவிட்டுவிட்ட நிலையில் வைகோ தனது உயிரை பணயம் வைத்து என்னையும் எனது சகாக்களையும் வந்து சந்தித்துள்ளார் எனவும் குறிப்பிட்டிருக்கிறார் பிரபாகரன்.

அந்த கடிதத்தில் பிரபாகரன் வைக்கோ பற்றி வருமாறு குறிப்பிட்டு உள்ளார்-

"வைகோ தனது உயிரையும் பொருட்படுத்தாது எவ்வளவோ சிரமங்களுக்கு மத்தியில் அடர்ந்த கானகத்தின் நடுவே என்னையும் எனது சகதோழர்களையும் சந்தித்துப் பேச வைத்துள்ள துணிச்சலையும் தமிழ்ப்பற்றையும் பார்க்கும்போது நான் எனது மொழிக்காகவும் தமிழ் நாட்டுக்காகவும் இன்னும் ஆயிரம் தடவை இறக்கலாம் என்னும் மனத்தெண்பே ஏற்படுகிறது. -

மேலும் அந்த கடிதத்தில் -

"அண்ணா உங்களது ஆட்சி தமிழகத்தில் மீண்டும் வந்துள்ளதையடுத்து நான் பெருமைப்படுகிறேன். எம்மைப் பொறுத்தவரை நாம் எந்த லட்சியத்திற்காக ஆயுதமேந்திப் போராட்டினோமோ அந்த லட்சியத்தில் வென்று வாழ்வோம் அல்லது அந்த லட்சியத்திற்காக சந்தோசத்துடன் மடிவோம். இன்று இந்திய ஆக்கிரமிப்பு ராணுவத்தின் நடவடிக்கையால் எமது நாடு சுடுகாடாகிக்கொண்டிருக்கிறது." என்று இந்தியப் படையின் அட்டூலியங்களை விளக்கியுள்ளார்.

# அரசகேசரியின் பதில்கள்



**கேள்வி : யாழ்ப்பாணத்து அரசியலில் முன்னாள் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவிற்கும் தற்போதைய அமைச்சர் விஜயகலா மகேஸ்வரனுக்கும் இடையில் என்ன வித்தியாசம் ?**

இ.பிரியா, கொக்குவில்.

பதில்: சுட்ட மண்ணும் பச்சை மண்ணும்.

**கேள்வி : உயர் பதவியில் இருக்கும் அரச உத்தியோகத்தருக்கும் அரசியல் வாதிக்கும் இடையில் இருக்கும் வேற்றுமை என்ன?**

எஸ்.விஜயா,உடும்பிராய்.

பதில் : அரச உத்தியோகஸ்தரின் வாழ்க்கை 35 வருடம். அரசியல் வாதியின் வாழ்க்கை ஐந்து வருடம்.

**கேள்வி : பிரபாரகரனின் மனைவி மதிவதனியும் மகள் துவாரகாவும் கனடாவில் தஞ்சம் புகுந்துள்ளனராமே?**

எம். ஆதவன்,பருத்தித்துறை.

பதில் : இது ஓர் வதந்தி.

**கேள்வி: ஜெயலலிதாவின் ஆட்சி இன்னும் சில ஆண்டுகளில் அஸ்தமித்து விடும் என கலைஞர் கூறியிருக்கிறாரே ?**

ஜே.றெஜினோல்ட்,யாழ்ப்பாணம்.

பதில் : அங்கே சட்டமன்றத்தேர்தல் நடந்து ஒரு வருடம் கூட ஆகவில்லை. அடுத்த தேர்தலுக்கு இன்னும் நான்கு வருடங்கள் இருக்கின்றன. எனவே அடுத்த தேர்தல் வரை ஜெயலலிதாவே முதல்வர்.

**கேள்வி : காவிரி நீர் விவகாரத்தில் கன்னடர்களின் ருத்ர தாண்டவம் குறித்து என்ன நினைக்கின்றீர்கள் ?**

எஸ் தீபன்,வட்டுக் கோட்டை.

பதில் :நினைப்பதற்கு ஒன்றுமில்லை. வெற்றி பெறுபவர்கள் எப்போதுமே கன்னடர்கள் தான்.

**கேள்வி: தென் இந்திய சினிமா மோகத்தினால் அழிந்து போகும் எமது இளம் சமுதாயத்தை திருத்த வழி இருக்கின்றதா?**

கலைச்செல்வி,அம்பாறை.

பதில் : மோகம் குறைந்தால் சகலருக்கும் நன்மை உண்டு.

**கேள்வி : நகர் வீரர் தாஜ்டீனின் மரணத்தில் மர்மம் நீடிக்கின்றதே.?**

ஜெயமாலினி,வல்வெட்டித்துறை.

பதில் : மர்மம் படிப்படியாக துலங்கி வருகின்றது.

**கேள்வி : இலங்கைத் தமிழர்களை இந்தியாவின் காங்கிரஸ் அரசாங்கம் போலவே பி.ஜே.பி அரசும் ஏமாற்ற நினைக்கின்றதா?**

எம்.ஆதவன்,கிளிநொச்சி.

பதில் : காங்கிரஸ் அரசு ஏமாற்றியதா இல்லையா என்பது எனக்குத் தெரியாது. இலங்கைக்கு நிறைய கடன் உதவி வழங்கியது. அதைத்தான் மோடி அரசாங்கமும் செய்கின்றது. வெளிநாட்டு அரசாங்கங்கள் எம்மை ஏமாற்றுவதாயின் அதற்கான பொறுப்பை எமது அரசியல் தலைவர்கள் தான் ஏற்க வேண்டும். ஏனெனில் அவர்கள் தான் உண்மை எது, பொய் எது என்று தெரியாமல் ஏமாற்றப்படுகின்றார்கள்.

**கேள்வி : அமெரிக்க ஜனாதிபதித் தேர்தலில் றொனால்ட் ட்ரம்பின் கை ஓங்குகின்றதா?**

நி.யாழினி,கோகாலை.

பதில்: ஓங்குவது போலத்தென்படுகின்றது.


**கேள்வி : இலங்கை முஸ்லீம்களின் அடையாளம் தமிழ் மொழி சார்ந்தது என முதல்வர் விக்கினேஸ்வரன் கூறியிருக்கிறார். இது குறித்து தங்களின் கருத்து என்ன?**

பா.விஜயகுமார்,ஓமந்தை.

பதில் : இது குறித்து முஸ்லீம்கள் தான் கூற வேண்டுமே ஒழிய, வடமாகாண முதலமைச்சர் விக்கினேஸ்வரன் அல்ல.

அரசியல், சினிமா,
விளையாட்டு சம்பந்தமான உங்கள்
கேள்விகளை தபால் அட்டையில்
எழுதி அனுப்பவும்.
கேள்விகளை அனுப்பவேண்டிய முகவரி
அரசகேசரி
தினச்செய்தி
தில்லைகட்டிவீதி,
சுன்னாகம்.

## உலகளவில் கவச வாகனங்களின் பயன்பாடு 100 ஆண்டுகள் பூர்த்தி



முதலாம் உலகப் போரில்தான் கவச வாகனங்கள் போர்க்களங்களில் முதல் முறையாகப் பயன்படுத்தப்பட்டன.

உலகளவில் போர்க்களத்தில் கவச வாகனங்கள் பயன்படுத்த ஆரம்பிக்கப்பட்டு நூறாண்டுகள் எட்டியுள்ளது.

முதலாவது உலகப் போரில் வடக்கு சிரியாவில் 1916 ஆம் ஆண்டு செப்டெம்பர் 15 ஆம் திகதி ஜெர்மனிக்கு எதிராக பிரிட்டன் முதல் முறை டாங்கிகளை பயன்படுத்திது.

இதன்படி கடந்த வியாழக்கிழமையுடன் போர் கவச வாகனங்களுக்கு 100 ஆண்டுகள் பூர்த்தியானது.

வடக்கு பிரான்ஸில் பயன் படுத்தப்பட்ட முதல் யுத்த டாங்கியின் மாதிரி ஒன்று மத்திய லண்டனிலுள்ள ட்ரஃபால்கர் சதுக்கத்தில் காட்சிக்காக வைக்கப்பட்டுள்ளது.

பிரிட்டனில் ரகசியமாகத் தயாரிக்கப்பட்ட யுத்த டாங்கிகள், அகழிகள் வெட்டப்பட்டு முன்னேற முடியாமல் தவித்த பிரிட்டிஷ் படையினருக்கு உதவ சோம் யுத்தத்தில் பயன்படுத்தப்பட்டது.

## இனி ஆண்களாலும் முடியும்



பெண்களால் மட்டுமின்றி தோல் செல்கள் மூலம் ஆண்களுக்கும் குழந்தை பெற்றுக் கொள்ளலாம் என்று அண்மையில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வில் கண்டறியப்பட்டுள்ளது.

பெண்ணின் கருமுட்டையுடன் ஆணின் உயிரணு கலந்து கருத்தரிப்பதன்மூலமே குழந்தை உருவாகிறது. எனினும் இது தொடர்பில் அண்மையில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளின்படி, ஆணின் உயிரணுவுடன் மற்றொரு ஆணின் தோல் செல்கள் அல்லது மற்ற திசுக்கள் கலக்கப்படுகிறது. அதன் மூலம் குழந்தை உருவாகிறது. இந்த முறையில் குழந்தை பெற பெண்கள் தேவையில்லை என்று கண்டறியப்பட்டுள்ளது.

ஆணுக்கு ஆண் மூலமே குழந்தை பெற்றுக்கொள்ள முடியுமாய் உள்ள இந்த புதிய முறை ஓரின சேர்க்கையாளர்களுக்கு மிக வசதியாக அமையும் என்று இது குறித்து ஆய்வு மேற்கொண்ட விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர்.

## தங்க கழிப்பறை



நியுயோர்க் நகரின் Guggenheim அருங்காட்சியகத்தில் திறக்கப்பட்டுள்ள தங்கக் கழிப்பறை பொதுமக்கள் பாவனைக்குத் திறந்துவிடப்பட்டிருக்கிறது. 'அமெரிக்கா' என்று பெயரிடப்பட்டிருக்கும் இந்த 18 காரட் தங்கத்திலான கழிப்பறையை இத்தாலியக்கலைஞரும்சிற்பியுமான Maurizio Catte lan உருவாக்கியிருக்கிறார்.


Guggenheim அருங்காட்சியகத்தில் பொதுமக்கள் குளியலறைகள் ஒன்றினில் வைக்கப்பட்டிருக்கும் இந்த தங்கக்கழிப்பறை முழுமையாக பயன்படுத்தப்படக்கூடியதே என்று நியு யார்க்கர் சஞ்சிகை கூறுகிறது.

இந்தப் படைப்பை "துணிச்சலான,மதிக்காத" படைப்பு என்று இந்த அருங்காட்சியகம் வர்ணிக்கிறது. சாதாரண பீங்கானால் செய்யப்பட்ட, ஒரு நபர் மட்டுமே பயன்பீடுத்தக் கூடிய, கழிப்பறை ஒன்றில், பீங்கான் கழிப்பிடம் இருந்த இடத்தில், இந்த தங்கக் கழிப்பிட இருக்கை வைக்கப்பட்டிருக்கிறது.

அருங்காட்சியகத்துக்குள் வர நுழைவுக் கட்டணம் செலுத்தும் எவரும் இந்தக் கழிப்பறையை அவர்கள் விருப்பப்படி பயன்படுத்திக்கொள்ள முடியும். இந்தப் படைப்பு " மானுடகுலம் பகிர்ந்து கொள்ளும் தவிர்க்க முடியாத உடல் ரீதியான யதார்த்தங்களை நமக்கு ஞாபகப்படுத்துகிறது" என்று Guggenheim அருங்காட்சியகம் கூறியது.

இந்தக் காட்சிப் படைப்பு, உலக மக்கள் தொகையில் "ஒரு சதவீதத்தினருக்கு மட்டுமே கிடைக்கக்கூடிய ஒரு அசாதாரணமான ஆடம்பரப்பொருளை பொதுமக்களுக்கும் கிடைக்கும்படி செய்யும் நோக்கிலானது" , என்று அருங்காட்சியகம் கூறுகிறது. இதை பார்வையாளர்கள் தனிப்பட்ட முறையிலும், அந்தரங்கமான வகையிலும் பயன்படுத்த முடிவது என்பது ஒரு கலைப் படைப்பை முன்னெப்போதும் கண்டிரத வகையில் மிகவும் நெருக்கமாக பார்க்கும் அனுபவத்தைப் பார்வையாளர்களுக்குத் தரும் . என Guggenheim ஹெய்ம் அருங்காட்சியகம் தெரிவித்திருக்கிறது.

## வியாழன் கோளை விதவிதமாக படம்பிடித்த ஜீனோ



வியாழனுக்கு அனுப்பப்பட்ட அமெரிக்காவின் ஜூனோ செயற்கைக் கோள், வியாழன் கோளைப்பல்வேறு கோணங்களில் படம்பிடித்து அனுப்பியிருக்கின்றது.

அமெரிக்காவின் நாசா நிறுவனம் சூரியக் குடும்பத்தின் மிகப்பெரிய கோளான வியாழனுக்கு ஜூனோ என்கிற செயற்கைக்கோளை அனுப்பியுள்ளது. வியாழனுக்கு அருகே வட்டப்பாதையில் சுற்றி வரும் அந்தச் செயற்கைக்கோள் வியாழனை பல்வேறு கோணங்களில் படம்பிடித்து அனுப்பியுள்ளது.


அவற்றை நாசா நிறுவனம் வெளியிட்டுள்ளது. ஒரு படத்தில் வியாழன் கோள் உருகும் தீப்பிழம்பாய்க் காட்சியளிக்கிறது. சூரியனில் இருந்து ஐந்தாவதாக உள்ள கோளான வியாழனில் புவியைவிட வெப்பம் குறைவாகவே இருக்கும். எனினும் ஏதாவவொரு கோணத்தில் சூரிய ஒளியின் எதிரொலிப்பில் வியாழன் கோள் தீப்பிழம்பாய்த் தோன்றுவதாகக் கருதப்படுகிறது.

புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். - தேவரின் நட்பை தமிழ்த் திரையுலகமே அறிந்து போற்றிக் கொண்டிருக்கிறது. 'அரசிளங்குமரி' படத்தில் மல்யுத்தம் கதா பாத்தரத்தில் ஒரு சண்டைக் காட்சியில் நடிப்பதற்காக சாண்டோ சின்னப்பா தேவரை எம்.ஜி.ஆர். சிபாரிசு செய்தார். பின்னர் சண்டை நடிகராக இருந்தவரை 'தாய்க்குப்பின் தாரம்' படத்தின் மூலம் தயாரிப்பாளராக உயர்த்தியது. தொடர்ந்து 16 படங்கள் கதாநாயகனாக நடித்து கொடுத்து தேவர் பிலிம்ஸ் நிறுவனத்தை வெற்றிப்பட நிறுவனமாக பேச வைத்தது எல்லாமே எம்.ஜி.ஆர். தான் என்பதை எல்லோரும் அறிவார்கள்... தேவரும் உணர்வார்.


எம்.ஜி.ஆர். மீது மிகுந்த மதிப்பும் மரியாதையையும் கொண்டவர். தான் வணங்கும் முருகப் பெருமானுக்கு இணையாகத்தான் தன் மனதில் எம்.ஜி.ஆரை உயர்த்தி வைத்திருந்தார் தேவர். அது மிகையான செய்தியும் அல்ல. Buy Tickets அவ்வளவு ஏன்... எம்ஜிஆரை ஆண்டவா என்று தான் தேவர் அழைப்பார்.

லேட்டாயிடுச்சு. நாளைக்கு சீக்கிரம் வந்துடறண்ணே...' என்று தேவரிடம் கெஞ்சுவார். இந்தத் திட்டு நமக்குத்தான் என்று உணர்த்திருந்தாலும் இதைக் கண்டுக் கொள்ளாதவர் போல் வேறுபக்கம் திரும்பி உட்கார்ந்து கொள்வார் எம்.ஜி.ஆர். இப்படி எம்.ஜி.ஆர். மேல் தேவருக்கும் தேவர் மேல் எம்.ஜி.ஆருக்கும் கோபம் இருந்தாலும் அதை வெளியேக் காட்டிக் கொள்ளாமல், வெளிப்படையாக மோதிக் கொள்ளாமல் அண்ணே அண்ணே என்று தன்மையாகப் பேசிக்கொள்வார்கள்.

தேவர் பிலிம்ஸ் 'காதல் வாகனம்' படத்தில் நடித்துக் கொண்டிருக்கும் போதே தனது எம்.ஜி.ஆர். பிக்சர்ஸ் நிறுவனம் சார்பில் 'அடிமைப் பெண்' என்ற படத்தை மிகுந்த பொருட்செலவில் தயாரித்துக் கொண்டிருந்தார் எம்.ஜி.ஆர். 'அடிமைப்பெண்' படத்தின் வெளிப்புறப் படப்பிடிப்பிற்காக ராஜஸ்தான் போக வேண்டியிருந்ததால் தேவரை நேரில் சந்தித்து எம்.ஜி.ஆர். சென்னார். ஷூட்டிங்கில் சண்டை: மாத்தி மாத்தி 'பளார்'



# எம்.ஜி.ஆர். - தேவர் நட்பு



அப்படிப்பட்ட இறுக்கமான நண்பர்களாக இருந்த இவர்களுக்குள், இவர்களே எதிர்பார்க்காத ஒரு பிரச்சினை ஏற்பட்டுவிட்டது. அந்தப் பிரச்சினைதான் பூதாகரமாகி இருவருக்குள்ளும் ஒரு மோதலை உருவாக்கி பிரித்து வைத்தது.

நட்பு வேறு தொழில் வேறு என்று நினைப்பவர் தேவர். என்னதான் நட்பாக இருந்தாலும் தொழில் விஷயத்தில் கரெக்டா இருக்க வேண்டும் என்பதை சம்பந்த பட்டவர்களிடமே நேரிலேயே முகதாட்சணை பார்க்காமல் சொல்லிவிடுவார் தேவர். இப்படிப்பட்ட சூழ்நிலையில் தான் வழக்கம் போல் எம்.ஜி.ஆரை கதாநாயகனாக மறுபடியும் ஒப்பந்தம் செய்து 'காதல் வாகனம்' என்ற படத்திற்கான பூஜையைப் போட்டார் தேவர். பூஜையன்றே தீபாவளி வெளியிடு என்று எல்லா பேப்பர்களிலும் விளம்பரம் கொடுத்தார். படப்பிடிப்பு துவங்கி வேகமாக நடக்கத் தொடங்கியது. இதில் எம்.ஜி.ஆர் - ஜெயலலிதா ஜோடியாக நடித்தார்கள். சின்னப்பா தேவரின் சகோதரர் எம்.ஏ.திருமுகம் படத்தை இயக்கினார்.

ஒருநாள் இந்தப் படத்தின் காலை 9 மணி படப்பிடிப்பிற்கு 8 மணிக்கே நடிகர் அசோகன் வந்துவிட்டார். எம்.ஜி.ஆர். லேட்டாக வந்தார். உள்ளே போய் மேக்கப் போட்டுக் கொண்டு படப்பிடிப்பு நடக்கும் இடத்திற்கு வந்து உட்கார்ந்தார். தேவருக்கு கோபம் கொப்பளித்தது. தேவர் எப்பொழுதும் எம்.ஜி.ஆரை மட்டும் நேராகத் திட்டமாட்டார். யாரையாவது கூப்பிட்டு அவர்களைத் திட்டுவதுபோல் ஆபாசமாக திட்டத் தொடங்கி விடுவார். அப்படித்தான் அன்று அசோகனைத் திட்டுவதுபோல் எம்.ஜி.ஆரைத் திட்டினார். அவன் இவன் என்று ஏக வசனத்தில் பேசினார். பணம் மட்டும் கட்டு கட்டாக வாங்கத் தெரிகிறது. ஆனால் படப்பிடிப்பிற்கு மட்டும் சீக்கிரமா வரத் தெரியாது. உன்னால எவ்வளவு வேலைகள் நின்று போச்சு. அதனால உண்டான நஷ்டத்தை நீயா தருவ... என்று படப்பிடிப்பிற்கு வந்தவர்களெல்லாம் வேடிக்கைப் பார்க்கின்ற அளவிற்கு சத்தம் போட்டார் தேவர். அசோகனுக்குத் தெரியும் இந்தத் திட்டு நமக்கில்லை என்று. இருந்தாலும் அசோகன், 'அண்ணே மன்னிச்சிடுங்கண்ணே... கொஞ்சம்

விட்ட சின்னத்திரை நடிகர், நடிகை சீனியர் நடிகரிடம் 'ஐ லவ் யூ' சொல்லத் துடிக்கும் மலர் டீச்சர் 'கிம்' சும்மா 'கும்'....... என்னா வளைவு நெளிவுடா?...: ராம்கோபால் வர்மாவின் பெருமூச்சு டுவிட் குநயவரசநன ஶளவள "நான் சம்பந்தப்படாத காட்சிகளை எடுத்துக் கொண்டிருங்கள், நான் சீக்கிரமாக வந்து என் சம்பந்தப்பட்ட காட்சிகளை நடித்து முடித்துக் கொடுத்து விடுகிறேன். படத்தை நீங்கள் சொன்னதுபோல் தீபாவளிக்கு ரிலீஸ் செய்துவிடலாம்," என்று எம்.ஜி.ஆர். நம்பிக்கையோடு சொன்னார். தேவரும் ஏற்றுக் கொண்டு எம்.ஜி.ஆர். இல்லாத காட்சிகளை படமாக்கி முடித்துவிட்டு எம்.ஜி.ஆரை எதிர்பார்த்துக் காத்துக் கொண்டிருந்தார். எம்.ஜி.ஆர். சொன்னப்படி வரவில்லை. ராஜஸ்தானில் நடந்த 'அடிபைப்பெண்' படத்தின் படப்பிடிப்பை முடித்துக் கொண்டு நவம்பர் 1 ஆம் திகதி வந்து சேர்ந்தார். நவம்பர் 7ஆந் திகதி தீபாவளி அன்றுதான் 'காதல் வாகனம்' படத்தை வெளியிடுவதாக விளம்பரம் கொடுத்திருந்தார் தேவர். தேவருக்கு எம்.ஜி.ஆர். போன் பண்ணி பேசினார். "அண்ணே மன்னிச்சிடுங்க திரும்பிவர கொஞ்சம் லேட்டாகிவிட்டது. நானும் மிகவும் களைப்படைந்து வந்திருக்கிறேன். படத்தை ஒரு வாரம் தள்ளி ரிலீஸ் பண்ணிடலாம். ஒன்றிரண்டு நாட்கள் பொறுத்து நான் வந்து என் சம்பந்தப்பட்ட காட்சிகளை நடித்துக் கொடுத்து விடுகிறேன்," என்றார். தேவருக்கு கோபம் அதிகமாகியது. "என் படம் தீபாவளியன்று நிச்சயமாக வெளிவரும். முடிந்தால் இப்போதே புறப்பட்டு வந்து

வேலை செய்யுங்கள். இல்லாவிட்டால் ஒரு கழுதையை ஹீரோவாகப் போட்டு நான் படத்தை முடித்துவிடுவேன். தீபாவளிக்கு படம் வருவது மட்டும் தள்ளிப் போகாது". பட்டாசு போல் வெடித்துத் தள்ளினார் தேவர்.

அதைக்கேட்ட எம்.ஜி.ஆருக்கு கோபம் ஒரு பக்கம். வருத்தம் ஒரு பக்கம். இருந்தாலும் வெளிக்காட்டிக் கொள்ளாமல் உடனடியாக படப்பிடிப்புக்கு தயாரானார். எம்.ஜி.ஆர் மூன்று நாட்களாக இரவு பகலாக



நடித்து முடித்துக் கொடுத்தார். தீபாவளியன்று 'காதல் வாகனம்' படம் ரிலீசானது. படம் படு தோல்வியடைந்தது. அத்துடன் 'எம்.ஜி.ஆர். உறவே இனி வேண்டாம்' என்று அறுத்துக் கொண்டார் தேவர்.

அதன்பிறகு ஜெய்சங்கர், ரவிச்சந்திரன், என்று சில சிறிய ஹீரோக்களை வைத்து படங்களை எடுத்தார். கூடவே குதிரை, குரங்கு, ஆடு, மாடு, என்று விலங்குகளையும் நடிக்க வைத்து படங்களை எடுத்து வெளியிட்டார்.

பின்னர் இந்தியில்ராஜேஷ்கண்ணாவை நடிக்க வைத்து 'ஹாத்தி மேரா சாத்தி' படத்தை எடுத்தார். இந்தியா முழுவதும் படம் சூப்பர் ஹிட்டானது. தேவருடன் உறவு அறுந்திருந்த போதிலும் 'ஹாத்திமே ராசாத்தி' படத்தைப் பார்த்த எம்.ஜி.ஆர். அதே கதையில் தமிழில் தான் நடிக்க வேண்டுமென்று விரும்பினார். கௌரவம் பார்க்காமல் தேவரைச் சந்தித்து, "அண்ணே இறுதியாக எனக்கொரு வாய்ப்புக் கொடுங்கள். இந்தஒரேபடத்தில் மட்டும் நான் நடித்து முடித்துக் கொள்கிறேன்," என்றார். தேவரும் ஒத்துக் கொண்டார். எம்.ஜி.ஆரும் நடித்தார். தேவர் பிலிம்ஸ் பேனரில் எம்.ஜி.ஆர். நடித்த கடைசிப் படம் 'நல்ல நேரம்' தமிழிலும் அந்தப் படம் சூப்பர் ஹிட்டானது.

இப்படம் ஏற்கனவே மேஜர் சுந்தராஜன் கதாநாயகனாக நடிக்க தெய்வச் செயல் என்ற பெயரில் குறைந்த பட்ஜெட்டில் எடுத்திருந்தார் தேவர். அதே படம் சில மாற்றங்களுடன் 'ஹாத்தி மேரா சாத்தி' என்ற பெயரில் இந்திக்குப் போனது. மறுபடியும் தமிழில் நல்ல நேரமாக வெளியே வந்து வெற்றி பெற்றது!



# ஆப்பு வைத்த நட்பு

சிம்புவுடன் ஏன் நட்பு வைத்துக்கொண்டோம் என்று கொலவெறியாக சுற்றிக்கொண்டிருக்கிறாராம் இளம் இசையமைப்பாளர். தான் சம்பந்தப்படாத ஒரு பாடல் சர்ச்சையில் தன்னை மாட்டிவிட்டு குளிர்காய்ந்த நடிகரால் தற்போது படவாய்ப்புகள் இன்றி தவிக்கிறாராம் இசையமைப்பாளர். இந்த சர்ச்சையிலிருந்து முழுவதும் விலகிய பிறகும், இன்னமும் அவர் மீதான கெட்ட இமேஜ் சினிமா வட்டாரத்தில் இன்னும் மறையாததால் இவரை படங்களில் ஒப்பந்தம் செய்ய பலரும் தயங்கி வருகிறார்களாம். எவ்வளவு வேகத்தில் பொப்புலரானாரோ, அதே வேகத்தில் சரிவை நோக்கி சென்றுவிட்டதில் இசையமைப்பாளருக்கு மிகவும் வருத்தமாம். இதனால், இனிமேல் தேவையில்லாத நட்புகளை கூட சேர்த்துக் கொள்ளக்கூடாது என்பதில் உறுதியாக இருக்கிறாராம்.

# சோலோவாத்தான் நடிப்பேன்!



நயன்தாராவுடன் 'ராஜா ராணி' படத்தில் நடித்திருந்தார் வெற்றி நாயகன் ஆர்யா. அந்தப் பழக்கத்தை வைத்து தனது படத்துக்கு அவரையே ஹீரோயினாக போடலாம் என்று புக் பண்ண வரும் தயாரிப்பாளர்களிடம் சிபாரிசு செய்கிறார். 'ஹிட் நடிகை, இருந்தால் ஓகேதான்' என்று அவர்கள் சொன்னாலும் நடிகர், ஃபோன் போட்டால் நயன் கடுப்பாகிறாராம். 'நான் ரொம்ப பிசி. வேற யாரையாது பாருங்க' என்று ஓபனாக சொல்லிவிடுகிறாராம். கொடுத்த வாக்கைக் காப்பாற்ற முடியாமல் தவிக்கிறார் நாயகன்



# புலி வ

நிதின் சாம்சன் எழுதி இயக்கி தயாரித்து வ
நோக்கி'. டாமி ஹீரோயின். முதுமலையில் பட
சம்பவம் பற்றி இயக்குனர் கூறியது : காட்டுக்குள்
ஹீரோவும், சுற்றுலா வந்து வழி தவறிய நாயகியு
நாயகிக்கு எதிர்பாராத ஆபத்து வருகிறது. அதை
என்பதே கதை. இதன் படப்பிடிப்பு முடிந்து முதுமன
ஓய்வு எடுத்துக்கொண்டிருந்தார். அப்போது ஒரு பு
அமர்ந்தது. அதைக்கண்டு நாயகி நடுங்கினார்.
தூரத்திலிருந்த பட குழுவினர் புலி மீது டோர்ச்
நேரம் காரின் அருகில் சென்ற ஒரு மான் மீது பாய்
சென்றது. உடனடியாக அனைவரும் அங்கிருந்து
வனப்பகுதியிலிருந்து வெளியில் வந்துவிட்டோம்.
இருந்தது. இப்படத்தில் லிவிங்ஸ்டன், மனோபா
காயத்ரி, லாவண்யா நடிக்கின்றனர். சதீஷ்.ஜி
என்.சி. இதன் படப்பிடிப்பு மசனக்குடி, கூடலூர்



இது நம்ம ஆள
இயக்கத்தில் அ
நடித்து வருகி
முடிந்த நி
பெண்டிங்கி
ரவிச்சந்
அசராதவன்
வருகிறார் சி
ஒரு
நடிக்கிறார்
வேட்டை நட
பரிசீலிக்கப்
முடிவாகி
கூறும்
ஜோடியா

# சிம்புவுக்கு ஜோடிய



ஸ்ரீதிவ்யாவுக்கு வரவர இரண்டு ஹீரோயின் கதையம்சம் உள்ள படங்கள்தான் தேடி வருகிறதாம். இப்பொழுது அவர் நடித்துக் கொண்டிருக்கும் ஒன்றிரண்டு படத்தை தவிர மற்ற படங்களில் எல்லாம் இரண்டு ஹீரோயின்களில் ஒரு ஹீரோயினாகத்தான் நடித்து வருகிறாராம். இரண்டு ஹீரோயின் கதையம்சம் உள்ள படங்களில் தனது கதாபாத்திரம் நன்றாக இருப்பதால்தான் ஒத்துக்கொண்டதாக கூறும் நடிகை, இனிமேலும் இப்படி நடித்துக் கொண்டிருந்தால் தன்னை சோலாவாக நடிக்க வைக்க யாரும் வரமாட்டார்கள் என முடிவு செய்து, இனிமேல் இரண்டு ஹீரோயின்கள் கதையம்சம் கொண்ட படங்களில் நடிப்பதில்லை என்று முடிவு செய்துள்ளாராம்.

# வாய்ப்புக் கேட்கும் தாய்க்குலம்



நீண்ட காலமாக முன்னணி நடிகையாக இருக்கும் த்ரிஷாவுக்க தற்போது பட வாய்ப்புக்கள் குறைந்து வருகிறதாம். அதிக சம்பளம் கேட்பதால் நடிகைக்கு இந்த நிலைமை வந்திருக்கிறதாம். இதனால், நடிகையின் தாயார் சம்பளம் ஒரு பிரச்சினை அல்ல. அதை குறைத்துக் கொள்ளலாம்...” என்று இறங்கி வந்து இருக்கிறாராம். மகளுக்கு பட வாய்ப்புகள் குறைந்து போனதில், அவருக்கு பெரும் கவலை. அதனால், கம்பெனி கம்பெனியாக ஏறி இறங்கி, மகளுக்காக வாய்ப்பு கேட்கிறாராம், தாய்க்குலம்!

# வருது

தயாரித்து ஹீரோவாக நடிக்கும் படம் ‘எதை
மலையில் படப்பிடிப்பின்போது நடந்த அதிர்ச்சி
: காட்டுக்குள் புகைப்படம் எடுக்கச் செல்லும்
றிய நாயகியும் சந்தித்துக் கொள்கிறார்கள். அப்போது
றது. அதை ஹீரோ எதிர்கொண்டு முறியடிக்கிறாரா
டிந்து முதுமலை எஸ்டேட்டில் காரில் அமர்ந்து நாயகி
போது ஒரு புலி திடீரென்று வந்து கார் மீது ஏறி
நடுங்கினார்.
து டோர்ச் லைட் அடித்து விரட்ட முயன்றனர். அந்த
மான் மீது பாய்ந்த புலி அதை விரட்டிக்கொண்டு
அங்கிருந்து புறப்பட்டு
ந்துவிட்டோம். இது திகில் அனுபவமாக
ன், மனோபாலா, நிக்கோலஸ், சாமிநாதன்,
ர். சதீஷ்.ஜி ஒளிப்பதிவு. பாடல்-இசை அனில்
டி, கூடலூர் போன்ற இடங்களிலும் நடந்துள்ளது.

இது நம்ம ஆளு படத்துக்கு பிறகு கவுதம் மேனன் இயக்கத்தில் அச்சம் என்பது மடமையடா படத்தில் நடித்து வருகிறார் சிம்பு. பெரும்பகுதி படப்பிடிப்பு முடிந்த நிலையில் அடுத்த கட்ட படப்பிடிப்பு பெண்டிங்கில் உள்ளது. இதற்கிடையில் அதிக் ரவிச்சந்திரன் இயக்கும் அன்பானவன் அசராதவன் அடங்காதவன் படத்தில் நடித்து வருகிறார் சிம்பு. இதில் 3 வேடம் ஏற்றிருக்கிறார். ஒரு சிம்புக்கு ஜோடியாக ஸ்ரேயா நடிக்கிறார்.மற்றொரு ஜோடிக்கான தேடுதல் வேட்டை நடந்தது. பாலிவுட் ஹீரோயின்கள் 2 பேர் பரிசீலிக்கப்பட்டனர். தற்போது தமன்னா நடிக்க முடிவாகி இருக்கிறார். இதுபற்றி இயக்குனர் கூறும்போது, ‘முதன் முறை யாக சிம்புக்கு ஜோடியாக தமன்னா நடிக் கிறார்’ என்றார்.

# ோடியாகும் தமன்னா

இந்தியாவின் முன்னாள் பிரதமர் ராஜீவ்கா ந்தியின் கொலையுடன் தொடர்புடையவர்க ளாக கருதப்பட்டு நீண்ட காலமாக சிறைவா சம் அனுபவித்துவ வரும் முருகன், பேரறிவா ளன், சாந்தன், நளினி, ரவிச்சந்திரன் உட்பட ஏழு இலங்கை தமிழர்கள் விடுவிக்கப்பட உள்ளதாக தமிழக அரசு தரப்பில் தகவல் கசி ந்திருப்பது இலங்கை வாழ் தமிழர் மட்டும ல்ல உலகில் வாழும் அனைத்து தமிழ் பேசும் மக்களுக்கும் மகிழ்ச்சி அளிக்கும் செய் தியாக இருந்த போதிலும் இது எந்தளவு தூ ரம் சாத்தியமாகும் என்ற சந்தேகம் எழுவதும் நியாயமானதே.

இதற்கு முன்னரும் கூட தமிழக முதல்வர் ஜெயலலிதா ஆட்சியின் போது இவ்வாறான முயற்சிகள் மேற்கொண்டபோதும் இந்திய மத்திய அரசின் முக்கிய புள்ளிகள் சிலரின் செயற்பாட்டால் இம் முயற்சி தடைப்பட்டதும் ஏற்கனவே தெரிந்ததே.

டகா அரசுகளிடையில் மேலும் விரிசல் ஏற்பட லாம் என அச்சம் தெரிவிக்கப்படுகின்றது.

காவிரிநீர் விநியோகம் சம்பந்தமாக இரு மாநிலங்களுக்கிடையில் நீண்ட காலமாக இழுபறிநிலை காணப்பட்டதையடுத்து இவ்வி வகாரம் இந்திய உச்ச நீதிமன்றிற்கு பாரப்படு த்தப்பட்டதையடுத்து உச்ச நீதிமன்ற தீர்ப்பின் பிரகாரம் வினாடிக்கு 15,000 கன அடி நீர் தொடர்ந்து 10 நாட்களுக்கு வழங்கப்பட வேண்டும் என்ற நீதிமன்ற தீர்ப்பையடுத்தே முதல்கட்டமாக தமிழகத்திற்கு காவிரி நீர் வழ ங்கப்பட்டது.

தமிழகத்தின் விவசாய மாவட்டங்களில் 40,000 ஏக்கரில் சம்பா பயிரிடப்பட்டதுடன் போதிய நீர் வசதி இன்மையால் தமிழக விவ சாயம் பாதிக்கப்பட்டதை அடுத்தே இவ்விவ காரம் இந்திய உச்ச நீதிமன்றம் வரை சென் றமை இங்கு குறிப்பிடத்தக்கது.

இதே வேளை காவிரி நீர் விநியோகம்




மரணம் அடைந்துள்ளதாக ஐ.நா சபை புள் ளிவிபரங்கள் தெரிவிக்கின்றன. தொடரும் யுத்தத்தினால் ஏமன் அரசின் தலைநகர் சனா தற்பொழுது கிளர்ச்சிக்குழுவின் கட்டுப்பாட்டில் உள்ளதாகவும் இரு தரப்பினரிடையேயும் உக்கிர மோதல்கள் இடம்பெற்று வருவதா கவும் ஏமன் அரசின் பாதுகாப்புத்துறை தெரிவித்துள்ளது.

அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளை பெரிதும் பாதிக்கும் என்றும் வருடத்திற்கு 323 மில்லியன் பவுண்ஸ்களை அபிவிரு த்தி அடைந்து வரும் நாடுகள் இழக்க வேண்டி ஏற்படும் என பிரிட்டன் பல்கலை க்கழகம் ஒன்று தனது ஆய்வில் தெரிவித்து ள்ளமையானது ஆசிய நாடுகள் பலவற்றை அச்சம் கொள்ள வைத்துள்ளது. பிரிட்டன்

# சூடுபிடிக்கும் ஈழத்தமிழர் விவகாரம்

## கேள்விக்குறியாகும் தமிழக மத்திய அரசின் போக்குகள்

1988 காலப்பகுதியில் தமிழகத்தின் ஸ்ரீபெரும்புத் தூரில் வைத்து இந்திய முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி தற்கொலைக் குண் டுதாரியின் தாக்குதலில் கொல்லப்பட்டதை அடுத்து முருகன், பேரறிவாளன் உட்பட சுமார் 07 பேர் வரையில் நீண்ட காலமாக சிறைத்தண்டனை அனுபவித்து வருவதும் ஏற்கனவே தெரிந்ததே.

எனினும் இப்படுகொலைச் சம்பவத்தில் பிர பல்யமிக்க பலமான அரசியல் சக்திகள் பின் னணியில் செயற்பட்டதாகவும் ஆனால் விடுத லைப்புலி உறுப்பினர்கள் இதற்கு துரும்பச் சீட்டாக பயன்படுத்தப்பட்டதும் யாவரும் அறிந் ததே.

இதே வேளையில் 1987 இல் இந்திய- இலங்கை ஒப்பந்தம் செய்வதற்காக இல ங்கை விஜயம் மேற்கொண்ட இந்திய முன் னாள் பிரதமர் ராஜீவ் காந்தி மீது கடற்படை ச்சிப்பாய் தாக்கியமையும் ஆனால் மயிரிழை யில் அவர் தப்பியமையும் அறிந்ததே.

ஆகவே ராஜீவ்காந்தி படுகொலை மிக துல் லியமாக மிக நீண்ட நாட்களாக தீட்டிய திட் டம் ஸ்ரீபெரும்புதூரில் கனகச்சிதமாக நிறை வேற்றப்பட்டதும் ஏற்கனவே தெரிந்ததே.

இதற்கிடையில் புதுக்கோட்டைக்கு அருகில் உள்ள தோப்புக்கொல்லி அகதி முகாமில் 500 க்கு மேற்பட்ட ஈழத்தமிழ் அகதிகள வசி க்கும் பகுதியில் "மர்ம" நபர்கள் சிலர் வாள் கள், கத்திகளுடன் தாக்குதலில் ஈடுபட்டு வரு வதாகவும் இதன் தொடர்ச்சியாக வேலூர் சிறைச்சாலையிலுள்ள ராஜீவ்காந்தி படுகொ லைச் சம்பவத்துடன் சம்பந்தப்பட்டதாகக் கரு தப்படும் பேரறிவாளன் மீது தலை மற்றும் உடல் பகுதிகள் மீது தாக்குதல் நடாத்தப்பட்ட தும் இச்செயலானது நன்கு திட்டமிடப்பட்ட தொடர் சம்பவமாகவே கருதப்படுகின்றது.

இதேவேளையில் கும்மிடிப்பூண்டி ஈழத் தமிழர் அகதிமுகாமில் வசிக்கும் யாழ்ப் பாணம் குருநகரைச் சேர்ந்த 27 வயது இளம் யுவதி மண்ணெண்ணெய் ஊற்றி தனக்குத்தானே தீமூட்டி தற்கொலை செய்து கொண்டதாக கூறப்படும் சம்பவமானது ஈழத் தமிழர் மத்தியில் பலத்த அதிர்வலைகளை ஏற்படுத்தியுள்ளன.

ஆக ஈழத்தமிழ் அகதிகள் மீது ராஜீவ்கா ந்தி கொலையுடன் சம்பந்தப்பட்டதாகக் கருத ப்படுவோர் மீதும் நடாத்தப்படும் தாக்குதலின் பின்னணியில் பலமான சக்திகள் திரைமறை வில் செயற்படுவதாக சந்தேகிக்க வேண்டியு ள்ளது. இதுவிடயம் தொடர்பாக தமிழக, மத் திய அரசின் செயற்பாடுகள் எவ்வாறு அமை யப்போகின்றது என்பதனை பொறுத்திருந்து தான் பார்க்க வேண்டும்.

இதற்கிடையில் தமிழகத்திற்கு காவிரி நீர் வழங்கப்பட்டமையைக் கண்டித்து கர்நாடகா முழுவதும் முழு நாள் கடை அடைப்பு போரா ட்டம் நடாத்தப்பட்டமையானது தமிழக- கர்நா

தொடர்பாக கர்நாடகத்தினருக்கும் தமிழ் நாட் டவருக்கும் இடையில் மோதல்கள் ஆங்கா ங்கு இடம்பெற்று வருவதாகவும் தமிழகத்தி ற்கு விஜயம் செய்யும் சுற்றுலாப் பயணிகள் தாக்கப்படுவதாகவும் தமிழ் பெயர்கள் பொறிக் கப்பட்ட பஸ்கள் கர்நாடகாவில் அடித்து நொறு க்கப்படுவதாகவும் வெளியிடப்படும் செய்திகள் தமிழக-கர்நாடக உறவில் விரிசலை அதிகரி க்கக்கூடும் எனவும் அச்சம் தெரிவிக்கப்படுகி ன்றது.


இதற்கிடையில் சிரியாவில் சிரிய இராணு வத்தினர் நடாத்திய குண்டுத் தாக்குதலில் சுமார் 100 பொதுமக்கள் வரையில் பலியா கிய சம்பவம் சிரியாவில் பெரும் அதிர்வலை களை தோற்றுவித்துள்ளது.

சிரிய அதிபர் அல்அஷாத்துக்கு எதிராக கட ந்த ஐந்து வருடங்களாக இடம்பெற்று வரும் உள்நாட்டு யுத்தத்தால் சுமார் இரண்டு லட்சத் திற்கு மேற்பட்ட பொதுமக்கள் பலியாகியுள்ள துடன் சுமார் ஐந்து லட்சத்திற்கு மேற்பட்டோர் அகதிகளாக இடம்பெயர்ந்துள்ளனர். சிரியா வின் சில பகுதிகளை தனது கட்டுப்பாட்டின் கீழ் வைத்திருக்கும் ஐ.எஸ்.ஐ.எஸ் தீவிரவாத அமைப்புக்கெதிராக சிரிய அரசுப்படைகள் ரஷ்ய துருப்புக்களுடன் இணைந்து தாக்கு தல் மேற்கொண்டு வருவது ஏற்கனவே தெரி ந்ததே.

இதற்கிடையில் சிரியாவில் தோன்றிய பத ற்ற நிலையை தணிக்கும் வகையில் இடைக் காலப் போர்நிறுத்தம் ஒன்றை ஏற்படுத்துவத ற்கான முயற்சியில் அமெரிக்க வெளியுறவுச் செயலர் ஜோன்ஹெரி மற்றும் ரஷ்ய வெளியு றவு அமைச்சர் செர்ஜிலாவ்ரான் ஆகியோர் ஈடுபட்டுக் கொண்டிருக்கும் இச்சந்தர்ப்பத்தில் சிரிய அரசுப்படையின் மேற்படி குண்டுத் தாக் குதலானது சிரிய அமைதி முயற்சிக்கு நிச்ச யம் தாக்கத்தை ஏற்படுத்தும் என அரசியல் அவதானிகள் கருத்து வெளியிட்டுள்ளனர். மேலும் சிரியாவின் பதற்ற நிலையானது மத் திய கிழக்கு பிராந்தியத்தின் அமைதியற்ற நிலைக்கே வழிவகுக்கும் எனவும் மேலும் கருத்துக்கள் தெரிவிக்கப்படுகின்றன.

இதே வேளையில் மத்திய கிழக்கு நாடுக ளில் ஒன்றான ஏமன் நாட்டில் கடந்த சில வருடங்களாக ஏமன் சவுதி அரேபியக் கூட்டுப் படைகளுக்கும் கிளர்ச்சிக் குழுக்களுக்கும் இடையில் தொடரும் யுத்தத்தினால் தொடர் பட்டினிச்சாவுகளும், கொடும்பஞ்சமும் ஏற்ப ட்டு மக்கள் உணவிற்காக அலையும் நிலை ஏற்பட்டமை மனித நேயம் படைத்த எவரை யும் வேதனை அடையச் செய்யும் என்பதில் எவ்வித ஐயமும் இல்லை.

இரு பகுதயினரிடையேயும் இடம்பெற்று வரும் யுத்தத்தினால் சுமார் 6600 பேர்



முருகன் பேரறிவாளன் சாந்தன்




நளினி ரவிச்சந்திரன் ராபர்ட் பயாஸ் ஜெயக்குமார்

மேற்படி யுத்தத்தால் ஏற்பட்ட பஞ்ச நிலையை அடுத்து ஏமன் நாட்டு குழந்தைகள் நோய் வாய்ப்பட்ட நிலையில் மருத்துவமனைக ளில் சேர்க்கப்பட்டு வருவதும் எலும்பும் தோலுமாக காணப்படும் படங்கள் காணொ ளியில் வெளியிடப்பட்டு வருகின்றமையும் மனித நெஞ்சங்களை அதிர வைக்கின்றது. இதற்கிடையில் இம் மோதலை தவிர்க்கும்

ஆசிய நாடுகளுடன் கல்வி மற்றும் பொரு ளாதார வர்த்தக ரீதியிலான ஒப்பந்தங்களை மேற்கொண்டுள்ளதாகவும் ஐரோப்பிய ஒன்றியத்திலிருந்து பிரிட்டன் வெளியேறி- னால் மேற்படி ஒப்பந்தங்கள் நிறைவேறுவதில் தடங்கல்கள் எற்படலாமெனவும் மேலும் தெரிவிக்கப்படுகின்றது.

இது விடயம் தொடர்பாக பிரிட்டனில்





வகையில் கடந்த ஏப்ரலில் ஐ.நா சபை முயற்சிகளை மேற்கொண்ட போதிலும் அம் முயற்சி வெற்றியளிக்கவில்லை. தற்போதும் கூட ஐ.நா சபை உள்ளிட்ட சர்வதேச மனித நேய அமைப்புக்கள் இரு தரப்பினரிடையே யும் சமரசம் செய்யும் முயற்சியில் ஈடுபட்டு வருகின்ற போதிலும் இம்முயற்சி வெற்றிய ளிக்குமா என்பதனை பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும்.

இதற்கிடையில் ஐரோப்பிய ஒன்றியத்திலி ருந்து பிரிட்டன் வெளியேறும் பட்சத்தில் அது

நடாத்தப்பட்ட கருத்துக் கணிப்பில் பெரும ளவு பொதுமக்கள் ஐரோப்பிய ஒன்றியத்தி லிருந்து பிரிட்டன் வெளியேற வேண்டும் என்பதற்கு ஆதரவாக வாக்களித்தமையும் இங்கு சுட்டிக்காட்டத்தக்கது.

க.கணேசராசா




# புகழ் போதை செய்த வேலை



மாணிக்கம், கேசவன் இருவரும் அடுத்தடுத்த வீட்டுக்காரர்கள். நல்ல வசதிபடைத்தவர்கள். இருவரும் நண்பர்கள். ஆனால், குணத்தில் இருவரும் நேர்மாறானவர்கள். கேசவன் யாருக்காவது ஒரு சிறு கஷ்டம் என்றாலும் உதவி செய்வதற்கு முன்னால் நிற்பான். ஊரில் அவனை அனைவரும் "கலியுக கர்ணன்" என்று புகழ்வர். மாணிக்கம் அவனுக்கு நேர் எதிராக இருந்தான். அவனை அனைவரும் "சுயநலக்காரன்" என்று ஏசினர். மாணிக்கம், கேசவன் அடுத்தடுத்த காட்டை விலைக்கு வாங்கினர். கேசவன் தன் காட்டை அழித்து, கனிமரங்களை உருவாக்கினான். கிணறு வெட்டி அவற்றிற்கு நீர் பாய்ச்சினான்.

சில ஆண்டுகளுக்குப்பின் அந்த மரங்கள் கனிகளை வாரி வழங்கின. மாணிக்கம் தன் நண்பனைப் போல் காட்டை அழிக்காமல், மரங்களை நடாமல், அப்படியே விட்டு விட்டான். அதனால், அவனுடைய காட்டில் முள் புதர்கள் சேர்ந்து விட்டன. கேசவன் தன்னுடைய பழத்தோட்டத்திற்கு போக வேண்டுமென்றால் மாணிக்கத்தின் காட்டு வழியாகத்தான் போக வேண்டும். ஒரு நாள், கேசவன் மாணிக்கத்தின் காட்டு வழியாகப் போய்க் கொண்டிருந்த போது அவன் காலில் நாலைந்து முட்கள், " நறுக் நறுக்" என்று குத்தி ரத்தம் கொட்டியது.

அதன் காரணமாக கோபம் கொண்ட கேசவன் மாணிக்கத்தைப் பார்த்து திட்டினான். அதனால், இருவருக்கும் சண்டை உண்டாகி நட்பு முறிந்தது. அதனால் அவர்கள் அன்று முதல் பேசிக் கொள்வதேயில்லை. நாட்கள் சென்றன ஒரு நாள் கேசவன் தன் தோட்டத்தில் விளைந்த பழங்களை எல்லாம் பறித்து ஊரிலுள்ள அனைவருக்கும் இலவசமாக வழங்கினான்.

மகிழ்ச்சி கொண்ட ஊர் மக்கள் அனைவரும் அவனை வாழ்த்தினர். இப்படியே ஊரிலுள்ளவர்கள் வாழ்த்த வாழ்த்த கேசவனுக்கு புகழ்வெறி பிடிக்கத் தொடங்கியது. கேசவன் ஊரையே அழைத்து ஆயிரக்கணக்கில் செலவு செய்தான். மக்களுக்கு தேவையானதை வாரி, வாரி இறைத்தான். மக்களும் அவன் வீட்டு வாசலில் குவிந்தனர்.

கேசவனும் புகழ் வெறியில், மக்களுக்கு தேவையானதை பூர்த்தி செய்து வந்தான். அந்த சமயத்தில் அங்கு வந்து சேர்ந்த மாணிக்கம் கூட்டத்தினரை நோக்கி "ஊர்மக்களே! நீங்கள் யாருடைய பணத்தில் ஆட்டம் போடுகிறீர்கள் தெரியுமா?" என்று கேட்டான். எல்லாரும் விழித்தனர். "இது என்னுடைய பணம் ". கேசவன் தந்தை தன்னுடைய நிலங்களை எல்லாம், என் தந்தையிடம் விற்று பணம் வாங்கியிருந்தார். ஆனால், நட்பு காரணத்தால், கேசவன் தந்தை யின் நிலத்தை சொந்தமாக்கிக் கொள்ளாமல் விட் டுவிட்டார்.

என் தந்தை இறந்து போனபிறகு இந்த விஷயம் இதுவரை எனக்கு தெரியவில்லை. இன்று நான் என் தந்தையின் பழைய பெட்டியை குடைந்தபோது அதில் கேசவன் தந்தை என் தந்தைக்கு எழுதிக் கொடுத்த கிரயப் பத்திரத்தைக் கண்டு எடுத்தேன். "அதனால், இன்றுமுதல் கேசவனுடைய சொத்துக் கெல்லாம் நானே சட்டப் பூர்வமான சொந்தக்காரன். இதுவரை அவன் ஊருக் கெல்லாம் வாரி வழங்கினான்.

இனிமேல் நான் அதற்கு சம்மதிக்க மாட்டேன் எல்லாரும் வீட்டிற்கு போங்கள் என்று சொன்னான். இதையெல்லாம் கேட்டுக் கொண்டிருந்த கேசவனுக்கு தலைசுற்றியது. மயக்கம் வருவது போலிருந்தது. குழம்பிப் போய் கொண்டிருந்த கூட்டத்தைப் பார்த்தான். மாணிக்கம் பேச்சைக் கேட்ட ஊர் மக்கள் அனைவரும் வெளியேறிக் கொண்டிருந்தனர். மக்களை நோக்கி "போகாதீர்கள் போகாதீர்கள் !" என்று கத்தினான் கேசவன். அதற்கு அவர்கள். "போய்யா! போ. இனியும் உன் பேச்சைக் கேட்பதற்கு நாங்கள் ஒன்றும் மடையர்கள் இல்லை. இனி நீயும் எங்களைப் போல் ஒரு ஏழைதான்" என்று கூறிவிட்டு " வாருங்கள் போகலாம்!" என்று ஒருவன் கையசைக்க, அனைவரும் அவனைத் தொடர்ந்து சென்றனர்.

அனைவரும் சென்றவுடன் தன்னிந்தனியாக கவலையோடு ஒன்றும் புரியாமல் நின்றிருந்த கேசவன் தோளில் தட்டிய மாணிக்கம், "வா உள்ளே போகலாம்" என்றான். கேசவன் எதிலும் விருப்பமின்றி வெறுப்புடன் அவனுடன் சென்றான். வீட்டிற்குள் நுழைந்ததும் மாணிக்கம் வயிறு வலிக்கச் சிரித்தான்.

ஒன்றும் புரியாதவனாய் கேசவன் விழிக்க மாணிக்கம் கேசவனை நோக்கி "அதிர்ந்து விட்டாயா? உன் தந்தை என் தந்தையிடம் நிலங்களை விற்வும் இல்லை. என் தந்தை வாங்கவும் இல்லை." பிறகு நான் ஏன் பொய் சொன்னேன் என்று பார்க்கிறாயா?

நீ இரக்கம் காரணமாக மக்களுக்கு கண்மூடித்தனமாக வாரி இரைத்தாய். உன்னைப் புகழின் உச்சியில் வைத்து மதுவை விட அதிகமான போதையை உண்டாக்கி உன்னால் லாபம் அடைந்து வந்தனர் மக்கள்."அவர்களை அடையாளம் காட்டவே, இனி உன் சொத்துக்கெல்லாம் நானே சொந்தக்காரன் என்று சொன்னேன். இதைக்கேட்டு நீ ஒன்றுமில்லாதவன் என்று தெரிந்த ஊர் மக்கள் நீர் இல்லாத குளத்தை விட்டு காக்கைகள் பறந்து செல்வதைப் போல், உன்னை விட்டு ஓடிவிட்டனர். இந்த நன்றி கெட்டவர்களிடம் இனி, நீ எப்படி நடக்க வேண்டாம்? " என்றான் மாணிக்கம்.

"நண்பா! என்னை வஞ்சித்து வாழ்ந்தவர்களை உன்னால் அடையாளம் கண்டு கொண்டேன். இனி ஆற்றில் போட்டாலும் அளந்துதான் போடுவேன். புகழ் போதையில் மூழ்க இருந்த என்னை கைகொடுத்து தக்க சமயத்தில் காப்பாற்றி விட்டாய் உனக்கு நான் எப்படி நன்றி சொல்வதென்றே தெரியவில்லை. "என்று நா தழுதழுக்க கூறினான் கேசவன்.

**நீதி: இரக்கம் காட்டலாம். ஆனால், ஏமாளியாகி விடக்கூடாது.**

## வாரமொரு குறள்



குறள் 47

இயல்பினான் இல்வாழ்க்கை வாழ்பவன் என்பான்
முயல்வாருள் எல்லாம் தலை

பொருள்

அறத்தின் இயல்பொடு இல்வாழ்கை வாழ்கிறவன் வாழ முயல்கிறவன் பல திறத்தாரிலும் மேம்பட்டு விளங்குகிறவன் ஆவான்

## தமிழ்ப்பக்கம் - மாயவர்

தமிழ்நாட்டின் கண்ணொப்பீர்
கனியி ருக்க

நிற்கின்ற நெடுமரத்தில்
காய்வர நினையாதீர்
மூதுணர்வால்

முற்கண்ட எவற்றினுக்கும்
முதலான நந்தமிழை
இகழ்த லின்றிக்

கற்கண்டாய் நினைத்தின்பம்
கைக்கொண்டு வாழ்ந்திடுவீர்
நன்றே என்றும்

ஆங்கிலத்தைக் கற்கையிலும்
அயல்மொழியைக் கற்கையிலும்
எந்த நாளும்

தீங்கனியைச் செந்தமிழைத்
தென்னாட்டின் பொன்னேட்டை
உயிராய்க் கொள்வீர்

ஏங்கவைக்கும் வடமொழியை,
இந்தியினை எதிர்த்திடுவீர்
அஞ்ச வேண்டாம்.

தீங்குடைய பார்ப்பனரின்
ஆயுதங்கள் "இந்தி" "வட
சொல்" இரண்டும்

பார்ப்பான் பால் படியாதீர்
சொற்குக்கீழ்ப் படியாதீர்
உம்மை ஏய்க்கப்

பார்ப்பான் தீ துறப்பார்ப்பான்
கெடுத்துவிடப் பார்ப்பான் எப்
போதும் பார்ப்பான்

ஆர்ப்பான் நம் நன்மையிலே
ஆர்வமிக உள்ளவன் போல்!
நம்பவேண்டாம்.

பார்ப்பானின் கையை எதிர்
பார்ப்பானையே பார்ப்பான்
தின்னப் பார்ப்பான்

தமிழின்பேர் சொல்லி மிகு
தமிழரிடைத் தமிழ் நாட்டில்
வாழ்ந்திட் டாலும்

தமிழழித்துத் தமிழர் தம்மை
தலை தூக்கா தழித்துவிட
நினைப்பான் பார்ப்பான்

அமுதாகப் பேசிடுவான்
அத்தனையும் நஞ்சென்க
நம்ப வேண்டாம்

தமிழர்கடன் பார்ப்பானைத்
தரைமட்டம் ஆக்குவதே
என்று ணர்வீர்.

தமிழரின்சீர் தனைக்குறைத்துத்
தனியொருசொல் சொன்னாலும்
பார்ப்பான் தன்னை

உமிழ்ந்திடுக மானத்தை
ஒரு சிறிதும் இழக்காதீர்
தமிழைக் காக்க

இமையளவும் சோம்பின்றி
எவனுக்கும் அஞ்சாது
தொண்டு செய்வீர்

சுமை உங்கள் தலைமீதில்
துயர்போக்கல் உங்கள் கடன்!
தாய்தின் வாழ்க!

## ஒபாமாவிற்கு எதிராக சிறுவர்கள் வழக்கு தொடந்துள்ளார்கள்



அமெரிக்க ஜனாதிபதி பராக்ஒபாமா அடுத்த தலைமுறையினருக்கு காலநிலை மாற்றத்தால் ஏற்படக்கூடிய பாதக விளைவுகளைத் தடுக்க போதுமான நடவடிக்கைகளை எடுக்கத் தவறியுள்ளதாக குற்றஞ்சாட்டி 21 சிறுவர்களை உள்ளடக்கிய குழுவொன்று அவருக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்துள்ளது.

அன்மையில் மேற்கொள்ளப்பட்ட இந்த வழக்குத்தாக்கல் குறித்து சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

அமெரிக்கா எங்குமுள்ள 8வயதுக்கும் 19 வயதுக்கும் இடைப்பட்ட வயதுடைய மேற்படி சிறுவர்களை உள்ளடக்கிய "எங்கள் சிறுவர்களது அறக்கட்டளை" என்றழைக்கப்படும் மேற்படி குழு அமெரிக்க அரசாங்கத்துக்கு எதிராக ஓரேகன் மாவட்ட நீதிமன்றதில் வழக்குத் தாக்கல் செய்துள்ளது.

அந்த சிறுவர்கள் சட்டத்தரணி ஜுலியா ஒல்ஸனுடன் இயுஜின் பிராந்தியத்திலுள்ள நீதிமன்றத்துக்குச் சென்று வழக்குத் தாக்கல் செய்துள்ளனர்.

பராக் ஒபாமாவின் அரசாங்கம் காலநிலை மாற்றம் தொடர்பில் உரிய நடவடிக்கைகளை எடுக்கத் தவறி இளம் தலைமுறையினரது உரிமைகளை மீறியுள்ளது என அந்த சிறுவர்களால் தாக்கல் செய்யப்பட்ட மனுவில் குறிப்பிடப்பட்டுள்ளது.

## பாலைவனத்தில் பூக்கள்



பாலைவனம் என்றாலே கண்ணுக்கு எட்டிய தூரம் எங்கும் வறண்ட நிலமும் மணலும் ஒரு சில அரிய மரங்களை மட்டும் தானே பார்த்திருப்போம்.

ஆனால் சிலி நாட்டில் உள்ள அடாகர்மா என்ற பாலைவனத்தில் வருடத்தில் செப்டமபர் முதல் நவம்பர் மாதம் மட்டும் 200க்கும் மேற்பட்ட வகையான வண்ண மலர்கள் அதிகளவில் பூத்து குலுங்குகின்றன.

வறண்ட நிலமான பாலைவனத்தில் காணும் திசையெங்கும் அழகழகான பூக்கள் பூத்துக் குலுங்குவதற்கு இயற்கையின் ரகசியம் மட்டுமே முக்கிய காரணம் ஆகும்.






# உங்கள் குழந்தை உங்களை நேசிக்க வேண்டுமா?

உங்கள் கைப்பிடித்து வளர்ந்த உங்களின் செல்லக்குட்டிகள் வேகமாக வளர்ந்து விடுகிறார்கள் அல்லவா! ஆனால் அது ஒரு கனவாக நமக்கு தெரியும்.

குழந்தைகள் வளர்ந்து எப்படி தங்களை மேம்படுத்திக் கொள்கிறார்களோ, அதற்கு ஏற்றார் போல பெற்றோர்களாகிய நாமும் நம்மை மேம்படுத்திக் கொள்ள வேண்டும்.

இன்றைய கால தலைமுறைகளை சமாளிக்க பெற்றோர்கள் குழந்தைகளிடம் நண்பர்களாக பழக வேண்டும்.

இதனால் குழந்தைகள் மற்றும் பெற்றோர்களுக்கு இடையே பிணைப்புகள் வலுவாகி பிரிவினை உண்டாகாமல் தடுக்கும்.

பெற்றோர்கள் தங்களின் இளம் குழந்தைகளின் தலைமுறைக்கு மாறுவது எப்படி என்று தெரிந்துக்கொள்ள இதோ உங்களுக்கான டிப்ஸ்!

குழந்தைகளின் இளம் பருவத்தினை திரும்பப்பெற இயலாது என்பதை நினை வில் கொண்டு, அவர்கள் சீக்கிரமாக பெரியவர்களாக வேண்டும் என்று தூண்டாமல், அவர்களின் குழந்தைத்தனங்களை ரசித்துப்பாருங்கள்.

ஒருசில குழந்தைகள் அவர்களின் கோரிக்கைகளை நிறைவேற்றினால் மட்டுமே அன்பு என்று தவறாக புரிந்து கொண்டிருக்கும் எண்ணங்களை புரியச் செய்து, அவர்கள் மீது உண்மையான அன்பினைக் காட்டுங்கள்.

குழந்தைகளுக்கு நம் மனதில் இருக்கும் குழந்தைத்தனத்தை வெளிகாட்டி, நம் வாழ்க்கையில் நடக்கும் விஷயங்களை அனுபவித்து ரசித்துக் கற்றுக் கொடுக்க வேண்டும்.

பெற்றோர்களின் ஆதரவினால் தான் குழந்தைகள் இந்த உலகிற்கு வந்தது என்பதை மனதில் கொண்டு, குழந்தைகள் செய்யும் அனைத்து செயல்களிலும் பெற்றோர்கள் துணைபுரிந்து, பெற்றோர்களின் ஆத ரவு எப்போதும் குழந்தைகளுக்கு உள்ளது என்பதை புரிய வையுங்கள்.

குழந்தைகளின் எதிர் காலங்கள் பற்றிய ஆசைகளை அவர்களிடம் கேட்டு தெரிந்து கொண்டு அவர்களின் ஆசைகளை பூர்த்தி செய்யுங்கள்.குழந்தைகள் முன்பு பெற்றோர்கள் சண்டை மற்றும் கெட்ட வார்த்தைகள் பேசுவதை தவிர்த்து, அவர்களுக்கு நல்ல செயல் பாடுகளை கற்றுக் கொடுங்கள்.



# ஆடை தைக்கும் ரோபோ


ரோபோக்கள் இல்லாத துறையேதும் கிடையாது என்றளவிற்கு மனித இயந்திரங்கள் வியாபித்துள்ளது.

ஆடை தைப்பதற்கு பயன்படுத்தப்படும் மெஷின்களை இயக்க ஆள் தேவை. எனினும், அமெரிக்காவைச்சேர்ந்த செவ்போ என்ற நிறுவனம் ஆளில்லாமல் ஆடைகளைத் தைக்கும் ரோபோவை தயாரித்துள்ளது.


ஆடை தைக்கும் மெஷின்களைப் பயன்படுத்துகையில் துணியை இலாகவமாக கையாள வேண்டும். அந்த ஆற்றல் செவ்போ ரோபோவிற்கு கிடையாது என்பதால் ரோபோவின் தயாரிப்பாளர்கள் புதிய உத்தியைக் கையாண்டுள்ளார்கள்.

இதன் பிரகாரம், மெல்லிய துணி பொலிமர் இரசாயனத்தின் மூலம் மிடுக்கானதாக மாற்றப்படும். அந்தத் துணியைக் கொண்டு ரோபோ தயாரிக்கும் ஆடை மீண்டும் கழுவப்படும். கழுவியவுடன் ஆடை தயாராக இருக்கும்.






# சொன்னார்கள் சொன்னார்கள்



வலி.வடக்கில் 700 ஏக்கர் காணி இம்மாத இறுதிக்குள் விடுவிக்கப்படவுள்ளதாக யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் நாகலிங்கம் வேதநாயகன் நேற்று திங்கட்கிழமை தெரிவித்தார். வலி.வடக்கில் காங்கேசன்துறை வடக்கு கிழக்கு தையிட்டி கிழக்குஉள்ளிட்ட பல பகுதிகள் விடுவிக்கப்படவுள்ளன



இறுதிக்கட்ட யுத்தத்தின்போது இலங்கை மீது அமெரிக்கப் படைகள் தாக்குதல் நடத்தக்கூடியசாத்தியம் இருந்தது. இது தொடர்பில் அப்போதைய பாதுகாப்புச் செயலாளர் கோட்டாபய ராஜபக்ஷவும் சீனாவின் இராணுவத் தளபதியும் எச்சரிக்கை விடுத்திருந்தனர் என்று இறுதியுத்தத்தின் போது புலிகள் இயக்கத்துடன் போரிட்ட 53ஆவது படைப்பிரிவின் கட்டளைத்தளபதியாகச் செயற்பட்ட மேஜர் ஜெனரல் கமல் குணரத்ன தெரிவித்தார்.



புதிய அரசியலமைப்பு வெளிவரும்முன் அதன் மூலம் நாட்டுக்குப் பாதகம் ஏற்படுவதாக சிலர் கூறிவருவதை ஏற்றுக்கொள்ள முடியாது என்று மல்வத்து பீடத்தின் மஹாநாயக்க தேரர் வண. திப்படுவாவே ஸ்ரீ சுமங்களதேரர் தெரிவித்தார். புதிய அரசியலமைப்பானது மக்களுக்கும் நாட்டுக்கும் விமல் வீரவன்ச உள்ளிட்ட அக்கட்சியின் குழுவினர் மஹா நாயக்க தேரரைச் சந்தித்து உரையாடச் சென்றபோதே மஹா நாயக்க தேரர் இவ்வாறு தெரிவித்தார்



நாட்டில் புகைத்தலை கட்டுப்படுத்துவதற்கான முக்கிய 10 யோசனைகளை அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் ஜனாதிபதிமைத்திரிபால சிறிசேனவிற்குச் சமர்ப்பித்துள்ளது. புகைத்தலைக்கட்டுப்படுத்த அரசாங்கமும் ஜனா திபதியும் மேற்கொண்டுவரும் நடவடிக்கைகளை வரவேற்றுள்ள மேற்படி சங்கத்தினர் அது தொடர்பான சட்டபூர்வ நடவடிக்கை களைப்பலப்படுத்துவது தொடர்பில் வலியுறுத்தியுள்ளது.



மேற்குலக நாடுகளின் அடிவருடியாக செயற்பட்டு வந்த ஐக்கிய தேசியக் கட்சி இறுதியில் வெளிநாட்டு சக்திகளுக்கு அடிபணிய மாட்டோம் என கொள்கைப்பிரகடனம் வெளியிடும் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளதாக கூட்டு எதிர்க்கட்சியின் முக்கியஸ்தரான ஜனநாயக இடதுசாரி முன்னணியின் தலைவர் வாசுதேவ நாணயக்கார தெரிவித்துள்ளார்.



எங்களுக்கு இழைக்கப்பட்ட அநீதிக்கு நீதி கிடைத்துள்ளது. எனினும் ஆட்சி மாறாமல் இருந்திருந்தால் தன்னுடைய தந்தையின் படுகொலை தொடர்பில் வழங்கப்பட்ட தீர்ப்பு அறிவிக்காமலே விடப்பட்டிருக்கலாம் என்று நாடாளுமன்ற உறுப்பினர் ஹிருணிகாபிரேமச்சந்திர தெரிவித்தார்.

# இவ் வாரபலன்

17.09.2016 - 23.09.2016



சோதிடர் :- ஏ.யு.சிவராசா, B.A.,B.Phil,Dip.in Edu.
சோதிடர் வித்யா ரத்னா (அரசு விருதுபெற்ற சோதிடர்)
சோமசிறீ தேசமானிய, பெயரியல் நிபுணர்.




(அஸ்வினி,பரணி,கார்த்திகை 1,வியாழன் 6ல்,சனீஸவரன் 8ல்,ராகு 5ல்,கேது 11 ல்)

புதிய இனைப்புகள் ஏற்படுத்தும் நடவடிக்கையில் ஈடுபடல். முன்னேற்றமடைய நாடிவரும் அதிஷ்டத்தைக் கைவிடாதீர்கள். பொறுப்பின்றி எவருக்கும் எதையும் கொடுத்து விடாதீர்கள். நோய் நீங்க தெய்வதலங்களுக்கு விஜயஞ் செய்தல். அயலவருடன் பட்டும் பாடாததுமாக "கூதல்" காய்ப்பவர் போல உறவாடுங்கள்.




(மிருகசீரிடம் 3,4,திருவாதிரை, புனர்பூசம் 1,2,3 ,வியாழன் 4 ல் ,சனீஸ்வரன் 6 ல் ராகு3 ல் கேது 9 ல்)

வாஸ்து சோதிட முறையில் புதிய வீடு அமைக்கும் முயற்ச்சியில் புதிய வீடு அமைக்கும் முயற்சியில் ஈடுபடல். கண்டும் காணாமல் செல்வதினால் பகையாளியின் தொல்லை மறைதல். சமயோசிதபுத்தியினால் நேரவிருந்த விபத்து விலகிவிடல். சொத்துரிமை சகோதரர் மத்தியில் முரண்பாட்டை ஏற்படுத்தல். போலியான ஆபரணங்கள்,கள்ள நோட்டுக்கள் வந்தடையலாம்.




(மகம்,பூரம்,உத்தரம் 1,2 , வியாழன் 2 ல்,சனீஸ்வரன் 4 ல்,ராகு 1 ல் கேது 7 ல்)

குடும்பத்தில் புதிய ஜீவன் எற்பட்ட அறிகுறி தென்படல். காலாவதியான பொருள் கைக்கெட்டியதால் கவலை ஏற்படல். அசாதாரண வேகம் விபத்தினைக் கொண்டு வரலாம். கொண்டாடடத்திற்கு நண்பர்கள் பண உதவி வழங்க முன்வரல். பொட்டிகளில் பரிசில் கௌரவப் பாராட்டுக்கிட்டுதல்.




(சித்திரை 3,4, சவாதி, விசாகம் 1,2,3, வியா ழன் 12 ல், சனீஸ்வ ரன் 2 ல் ராகு 11 ல் கேது 5 ல்)

திருமணம் முன்னிட்டு வெளியூர் மணமக்கள் தாயகம் வருதல். பிதாவின் நோய் நிலைப்பாடு குணமடைவதால் மகிழ்ச்சி நிலை ஏற்படல். தோல்வி ஏற்ப்பட்டதை சகித்துக் கொண்டு முன்னேற்றப்பாதையில் அடியெடுத்தல். உடையவன் பாரா விட்டால் ஒரு முழம் கட்டை என் பதனை தராகமநதிரமாகக் கொள்ளுதல். கால்நடைகளினால் பயிர்கள் சேதமடைதல்.




(மூலம், பூராடம் ,உத்தராடம் 1,வியாழன் 10 ல், சனீஸ்வ்ரன் 12 ல் ராகு 9 ல் கேது 3 ல்)

எதிர்பாராத குருட்டு அதிர்ஷ்டமொன்று ஏற்படலாம். பிரயாண முயற்சியில் மீண்டு ஈடுபடுவதை மனையாள் தடுத்து விடல். அரசியல் விமர்சனத்தால் நண்பரின் உறவு கெட்டுவிடல். பிதாவின் சமரச முயற்சியால் சொத்துப் பிரச்சனை சுமுகமடைதல். பகீரதப்பிரயத்னத்தின் பின்னர் தொலைத்த பொருள் சேருதல்.




(அவிட்டம் 3,4, சதயம், பூரட்டார்தி 1,2,3, வியாழன் 8 ல், சனீஸ்வரன் 10 ல்,ராகு 7ல் கேது 1 ல்)

புதிய முயற்சிகளை உடனடியாக ஒத்திவையுங்கள். இடமாற்றம் பற்றிய பீதி, பதகளிப்பு ஏற்படலபம். தொழில் பயணம் முன்னிட்டு சோகத்துடன் பிரிவினை தக்க வைக்கும். காணாமல் போனவர் உயிருடன் இருக்கின்றார் என்ற தகவல் கிட்டும். ஆவணங்கள் கைதவறிவிடும் அபாயம் ஏற்படலாம்.




(கார்த்திகை2,3,4, ரோகிணி ,மிருகசீரிடம் 1,2)

கைவிடப்பட்டிருந்த வெளியூர் பயணத்தை மீண்டும் தொடர விரும்புதல். வெளிநாட்டில் கல்விகற்க புலமைபரிசில் கிட்டலாம். மங்கல நிகழ்வுகள் ஏற்பட்டு மனை களைகட்டும். வெளியூரிலிருந்து இரத்த உறவுகள் விஜயஞ் செய்யலாம். பணக் கொடுக்கல் வாங்கலினால் பிரச்சினைகள் உருவாகி காவல் துறைவரை செல்லலாம்.




(புனர்பூசம் 4,பூசம், ஆயிலியம், வியாழன் 3ல், சனீஸ்வரன் 5 ல். ராகு 2ல், கேது 8 ல்)

சகோதரவழியில் தலையிடுவதை இயன்றவரை கைவிட்டால் விமோசனமுண்டு. இடைத்தங்கள் நாட்டைக்கைவிட்டுக் குறிக்கோளை அடைதல். வெளியீடுகளில் ஆர்வம் காட்ட நண்பர் குழாம் ஒத்துழைத்தல். பொருட் கொள்வனவை முன்னிட்டு பிரயானத்தில் ஈடுபடல். வழக்கின் முடிவு சாதகமாக வரலாம் என்ற நம்பிக்கை பிறத்தல்.




(உத்தரம் 3,4, அத்தம், சித்திரை 1,2, வியாழன் 1 ல்,சனீஸ்வரன் 3 ல், ராகு 12 ல், கேது 6 ல்)

நீண்ட காலத்தின் பின்னர் சொந்த நிலத்தில் கால் பதித்தில். பிள்ளைகளின் நடவடிக்கைகளை பவ்வியமான முறையில் கண்டிக்கப் பாருங்கள். துனைவியாரின் நோய் குணமடைவதினால் ஆனந்த ., மேற்படல். "ஈகோ" மனப்பாங்கினைக்கைவிட்டதால் பணி நிலை சுமுகமாதல். பரீட்சை சித்தியினால் உயர்ச்சியும், சம்பள அதிகரிப்பும் ஏற்படல்.




(விசாகம் 4,அனுசம், கேட்டை, வியாழன் 11 ல், சனீஸ்வரன் 1 ல், ராகு 10 ல்,கேது 4 ல்)

மூத்த சகோதரனின் கிருபையால் வசந்தகாலம் பிறத்தல். மருந்தீடு பேய் பிசாசு பில்லி சூனியம் செய்கை ஒன்றினால் அச்சமடையும் கற்பனை தக்க வைத்தல். புதியன கொள்வனவில் நம்பகத்தை கைவிடாதிருங்கள். மாமனுடன் ஏற்பட்ட மனத்தாங்கல் நீங்கி உறவுக்கு கைகொடுத்தல். துணை ன்றித்தனிவழி சென்று [illegible] சிக்குதல்.




(உத்தராடம்2,3,4,திருவோணம் அவிட்டம் 1.2 ,வியாழன் 9 ல்,சனீஸ்வரன் 11 ல் கேது 8 ல், ராகு 2 ல்)

ஒய்விற்குப் பின்னரும் மீள் நியமனம் பெறும் கைங்காரியத்தில் ஈடுபடல். கைப்பேசி மூலம் காதல் உறவுகள் மரணக்கயிறாகி விடலாம். வாகன யோகங்கிட்ட சகோதரர் உதவிடல். விஷக்கடி பற்றி எச்சரிக்கையாக இருக்கவும். குடியுரிமை பெறும் பொருட்டு காகித திருமணத்தை நாடுதல்.




(பூரட்டாதி 4,உத்த ரட்டாதி, ரேவதி , வியாழன் 7ல்,சனீஸ்வரன் 9 ல் ,ராகு 12 ல்,கேது 12 ல்)

பேதம் காரணமாக ஸ்தம்பித்த விவாகம் நிறைவேற பச்சைக்கொடிகாட்டல். பிதாவின் தேக நலம் எதிர்பாராது பாதிக்கப்படல். தொல்லை கொடுத்த எதிரியின் அடாவடித்தனம் அடங்குதல். எதிர்பாராது சுபகாரிய மொன்று நிகழ்ந்து விடல். பயணம் இடைத்தடங்கல் நாட்டில் சேர்த்து விடலாம்.

# குஷ்பு கவர்ச்சி நடிகையின் அரசியல் அடையாளம்



1990 களில் தமிழ் சினிமாவில் ஒரு கவர்ச்சிக் கன்னியாக உலா வந்த குஷ்புவுக்கு அரசியல் பிரவேசம் என்பது போர்க்களத்தை முதன் முதலில் காணும் அனுபவம் போன்றதாகவே இருந்திருக்க வேண்டும்.

திருமணத்திற்கு முந்தைய உடலுறவு குறித்து அவர் அளித்த பேட்டி அரசியல் கட்சிகள் மற்றும் பல்வேறு அமைப்புகள் மத்தியில் பெரும் எதிர்ப்பை கிளப்ப அதன் விளைவாக வெவ்வேறு நீதிமன்றங்களில் தொடரப்பட்ட 22 வழக்குகளை அவர் சந்திக்க நேர்ந்தது.

2010ல் திமுக-வில் தன்னை இனைத்துக் கொண்டார் நடிகை குஷ்பு. அவர் மீதான வழக்குகள் உச்ச நீதிமன்றத்தில் ஒன்றன்பின் ஒன்றாக தள்ளுபடி ஆகின. கட்சியில் ஒரு பிரதான முகமாக அடையாளம் காணப்பட்டார்.

கட்சியில் அவருக்கு இருந்த முக்கியத்துவம், தேர்தல் வரும் நேரத்தில் எல்லாம் தேர்தலில் போட்டியிட அவருக்கு வாய்ப்பளிக்கப்படும் என சலசலக்கப்பட்டபோது உணரப்பட்டது.

திராவிடர் கழகம் நிறுவனர் இ.வெ.ரா. வாழ்க்கை வரலாறு பற்றிய திரைப்படத்தில் மணியம்மை கதாபாத்திரத்தில் நடிக்க அவருக்கு வாய்ப்பு கிடைத்தது.

பொதுவாக அரசியலில் கால் பதிக்கும் கலைத்துறையினரின் பயணம் நீடித்து இருக்க, குஷ்புவின் அரசியல் பயணம் தடை பட்டுள்ளது.

திமுக-வில் குஷ்புவால் ஏன் தொடர முடியவில்லை என்பது குறித்து சினிமா பத்திரிகை காட்சிப்பிழை யின் ஆசிரியர் சுபகுணராஜன் கூறுகையில், "பல ஆண்டுகளாக கட்சிக்காக தன்னை முழுமையாக அர்ப்பணித்துக்கொண்டவர்கள் பலர் இருக்க பின்நாளில் வந்த ஒரு நடிகைக்கு குறிப்பிட்ட அளவுக்கு மேல் கட்சியில் முக்கியத்துவம் அளிக்கப்படும் போது அதிருப்தி அலைகள் எழுகின்றன".

இந்த நிலை குஷ்புவுக்கு மட்டும் ஏற்படவில்லை. இதற்கு முன்னர் திமுகவில் இருந்த டி.ராஜேந்தர், சரத்குமார், பாக்யராஜ் போன்ற நடிகர்களுக்கும் ஏற்பட்டிருக்கிறது. நடிகர் சரத் குமாரின் செல்வாக்கையும், ஜாதியையும் அரசியல் ஆதாயமாக்க நினைத்த திமுக-வால் ஒரு கட்டத்துக்கு மேல் கட்சியில் அவரது வளர்ச்சிக்கு உதவ முடியவில்லை. நடிகர்கள் பொதுவாக அரசியலில் ஈடுபடும் போது தங்கள் தகுதிக்கு மீறி வசப்படுத்த விரும்புகின்றனரோ என தோன்றுகிறது. சரத்குமார், தனிக்கட்சி ஆரம்பித்ததும் பின்னர் அதில் சோபிக்க முடியாமல் போனதும் ஒரு சான்றாக எடுத்துக் கொள்ளலாம்.

ஆனால், வாகை சந்திரசேகர், குமரிமுத்து போன்ற ஒரு சில நடிகர்கள் தாங்கள் சார்ந்துள்ள அரசியல் கட்சியிடம் இருந்து பெரிய அளவில் ஆதாயம் ஏதும் எதிர்பார்க்காததாலேயே கட்சியில் நிலைத்திருக்கின்றனர். கிடைத்ததை வைத்து தன்னிறைவோடு இருப்பவர்கள் மட்டுமே அரசியலில் நீடிக்க முடிகிறது" என்றார்.

டெல்லி டாக்டர் அம்பேத்கர் பல்கலைக்கழகத்தில் சினிமா துறை சார்ந்த படிப்புகள் பேராசிரியர் ராஜன்கிருஷ்ணன் கூறியதாவது. "முன்னாள் முதல்வர் எம்.ஜி.ஆர். பற்றி தமிழக அரசியலில் ஒரு சினிமாக் கலைஞனின் பங்களிப்பு குறித்து மதிப்பீடு செய்வது சற்று கடினமாகவே இருந்தது.தமிழக அரசியல் களத்தில் இருந்த சாமானயர்களில் யதார்த்தமான விருப்பங்களை பூர்த்தி செய்யும் ஒரு வரலாற்று நிகழ்வின் அடையாளமாக இருந்தார் எம்.ஜி.ஆர். என்றால் அது மிகையல்ல." எம்.ஜி.ஆரின் இடத்தை வேறு யாராலும் ஈடுசெய்ய முடியாது. வாக்குவங்கி அரசியலுக்கு, வாக்காளர்கள் கவனத்தை ஈர்க்க பரிச்சியமான முகம் தேவைப்படுகிறது. அந்த வகையில், திமுகவுக்கு குஷ்பு, பாஜகவுக்கு ஹேமமாலினியும், சமாஜ்வாதி கட்சிக்கு ஜெயப்பிரதாவும் பயன்பட்டதைப் போல் பயன்பட்டிருக்கிறார்.




பொலன்னறுவை மாவட்ட கிராமம் ஒன்றில்
அரியவகை மலர் ஒன்று பூத்துள்ளது.
குறித்த மலரினை பார்வையிடுவதற்கு ஏராளமான
பொது மக்கள் வந்து செல்வதாக
தெரிவிக்கப்படுகின்றது.
மேலும், மலர் நறுமணம் வீசுவதற்கு பதிலாக
துர்நாற்றம் வீசுவதாக தெரிவிக்கப்படுகின்றது.
இதேவேளை அதிகளவான ஈக்கள் குறித்த மலரில்
மொய்ப்பதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.
மேலும், குறித்த மலரில் உள்ள கிழங்கு வகை
உள்நாட்டு மருத்துவ் தேவைக்காக
பயன்படுத்தப்படுவதாக அப்பகுதி மக்கள்
தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## போட்டிச் சிறுகதை 19

பெயர் : பா. பாலச்சந்திரன்
முகவரி : மயிலணி சுன்னாகம்.
சிறுகதை : நீதி தாமதித்தாலும் ஒரு நாள் வெல்லும்




பிள்ளையார் கோவில் வெளிமண்டபத்தில் மாலைப்பூசை முடிய ஊரில் உள்ள பென்சனியர்க் சிலர் கூடி பொதுவிடயங்கள் பற்றி கதைப்பார்கள். வட்டாரக்கல்வி அதிகாரியாக இருந்த (சி.ஓ) வித்துவான் மயில்வாகனம். பி.ஏ எம்.ஏ தான் நடுநாயகமாக திகழ்வார். அவர் இல்லாவிடின் சப்பென்று இருக்கும். அவருக்கு பன்மொழித் திறமை உண்டு. உள்ளதை உள்ளபடி கூறுவார்.வயது எழுபது. இன்றும் நூல்களைத் தேடி வாசிப்பார்.

புதுமைக்கும் பழமைக்கும் அவரிடம் இடமுண்டு. சிந்தித்துக் கதைப்பார். இதனால் கற்றவர்களுக்கு அவரைப்பிடிக்கும். நடிப்பவர்கள் அவரைக் கண்டு ஒதுங்கிவிடுவார். பதவிப்பித்தர்கள் தலை அசைத்து விட்டுச் செல்பவர். நிர்வாக விடயங்களில் ஈடுபடமாட்டார்.

நற்பணி மன்றத்திற்கு மாத்திரம் போஷகராக உள்ளார். அவரின் அன்பிற்கு பாத்திரிமானவர்களாய் அவருடன் இருந்து கதைப்பவர்கள் ஆசிரியர் முத்துத்துத் தம்பி

மாணிக்கம் பிரசங்கியர் கணபதிப்பிள்ளை (தேசிகர்) கந்தசாமி கமக்காரன் ஆகியோரே. கமக்காரன் என்று கந்தசாமிக்கு பெயர் வரக் காரணம். 1983ல் கொழும்பு உத்தியோகத்தை உதறி எறிந்து விட்டு கமத்தை பெருமையாகச் செய்து வருவதேயாகும். மானிப்பாய் இந்துக்கல்லூரி காற்பந்து அணியின் தலைவன். பொது நலன் விரும்பியும் கூட.

"சி.ஓ ஐயா! இன்றைக்கு பத்திரிகையில் பார்த்தியளோ பழைய குற்றவாளிகள் சிலருக்கு அவை முந்திய ஜனாதிபதியின் தோளிலை இருந்து கொண்டு சனத்தை மதியாது அட்டசாசம் போட்டு மற்றவையை வருத்தி இன்பம் கண்டவர்கள். கொலைகள் புரிய காரணமாக இருந்தவர்கள். அவர்களுக்கு நீதி தேவதை விலங்கு மாட்ட ஆரம்பித்து விட்டாள்" என்றார் கந்தசாமி சந்தோஷமாக.

" கந்தசாமி "Mill of the god works slow" என்று சர்மா மாஸ்ரரிடம் படிக்கலையோ ?

தமிழிழிலை 'அரசன் அன்றறுப்பான் தெய்வம் நின்றறுக்கும்' என்று நீதி நூல் திடமாய் சொல்கிறதை நம்பவில்லையோ ? முன்னர் என்ன சாமானியஉகளோ ? எவ் அனுபவசாலிகள்? நீதிமான் விழுவான் மீண்டும் எழுவான். ஆனால் அநியாயக்காரன் விழுந்தால் எழும்பமாட்டான் " என்கிறது பைபிள் என்றார் மயில்வாகனம். பாம்பு சிவனுடைய கழுத்தில் இருந்து கொண்டு கருனைப்பார்த்து சௌக்கியமா என்று தான் கேட்கிறது. இவங்கள் சாத்தானுடன் சேர்ந்து கொண்டு ஆட்களையல்லவோ முடிவு கட்டினவங்கள். இவங்கள் சாத்தானின் சிங்கர்கள் உயிர்க்கொல்லிப் பிசாசுகள். ஏவல் பெல்லிகள். கொள்கை முரண்பாடு உள்ளவர்களை அழித்தார்கள். இவர்களை நீதிக் கடவுள் சும்மா விடுவாரோ" என்றார் ஆங்கில ஆசிரியர் முத்துத் தம்பி சற்று ஆவேசமாக.

"உலக வரலாற்றில் நான் அறிந்தவரை பல விடயங்களில் தவறு செய்த கூட்டமாக இருக்கலாம். தனிநபராக இருக்கலாம். இறுதியிலை படாத பாடுபட்டுத்தான் அழிவது இயற்கை.

இதைத்தான் ஷேக்ஸ்பியரின் நாடகங்கள் மக்பெத் யூலியசீசரில் புறுட்டஸ் போன்ற பாத்திரங்கள் சொல்கின்றன. யேசுவின் வரலாற்றில் யூதாசின் முடிவும் இதையே உறுதி செய்கின்றது. அண்மைக்காலத்தில் சில அரசியல்வாதிகளுக்கு குறிப்பாக பீப்பா உருட்டினவரின் கதியெல்லாம் அறிந்திருப்பீர்கள் என்றார் மாணிக்கம்.

நடைமுறையிலை உள்ளவற்றைத்தான் புராணங்களும் கதை வடிவில் உதாரணங்களுடன் எடுத்துக் கூறுகின்றன. இதிகாசம் என்றால் இப்படி நடந்தது என்பதே கருத்து. அவையும் அறம் பிழைத்தால் அதுவே தண்டிக்கும் என்பதை சுட்டிக்காட்டுகின்றன எனப் பெரியோர் கூறக் கேட்டுள்ளேன். உதாரணமாக அரிச் சந்திரா புராணம் கந்தபுராணம் பிரகலாதன் கதை கம்சன் கதை இராமாயணம் பாரதம் என்பனவற்றைச் சொல்லலாம் என்றார் தேசிகர் கணபதிப்பிள்ளை.

" ஐயா சொல்வது உண்மை. புராணங்கள் தான் பழைய சமுதாயத்தை கட்டிக்காத்தது. அரிச்சந்திர புராணம் காந்தியை சத்தியத்தில் பிடிப்பாய் இருக்க வழிகோலியது. கந்த புராணம் யாழ்ப்பாணக் கலாசாரத்திற்கு அடிபடையாக திகழ்ந்தது.

பைபிளில் யோபுவின் கதை என்று ஒன்று உண்டு. அவை தான் மனித இனத்திற்கு வழிகாட்டிகள். அவற்றை வாசிப்பது குறைந்ததனால் தான் இந்தப்பிரச்சினைகளுக்கு காரணம் என்றார் மயில்வாகனம்

" நீதி இல்லாதவர்க்கு தருமம் கூற்றாகும். என்பது உண்மை. அதை நீதி பிழைத் தோர்க்கு அறம் கூற்றாம். என்பதை உணர்த்தும் சிலப்பதிகார கதை மூலம் அறிவோம்.

மிருகங்களை வதைப்போர் அகால மரணம் அடைவதையும் நல்லவர் போல நடிக்கும் வெள்ளை வேட்டிகள் நஞ்சு குடித்து மடிவதையும் நான் கண்டிருக்கிறேன். எனது அறுபத்தெட்டு வயதிற்குள் நான்கு பேர் அதே மாதிரி மடிந்துள்ளனர். என்றார் மாணிக்கம்.

சி.ஓ ஐயா! நாங்கள் ஊரிலை நாட்டிலை உலகத்திலை நீதி வேண்டும் என்கின்றோம்

அநேக குடும்பங்களிலே மிக ஒர வஞ்சனைகள் நடைபெறுகின்றன. நீதியை வீட்டிலை நிலை நாட்டாமல் ஊரிலை சரிவரமாட்டாது. ஊரிலை நிலை நாட்டினால் தான் நாட்டிலும் சரிவரும்.சொத்து பங்கிடேக்க பாரபட்சம் காட்டுகினை.மனச் சாட்சியின் படி நடப்பது இல்லை. முருகேசர் மூத்தவன் கொள்ளி வைப்பான் என்று வீடு எழுதினார். கடைசியிலை மருமகள் அவரை வீட்டை விட்டுதுரத்திவிட இளயவள் தானே எல்லாம் செய்தவன். திக்கற்றவர்களுக்கு தெய்வம் துணையென்று இளையவனுக்கு நல்ல அதிஸ்ரம் நல்ல வருமானம் றோட்டுக்கரையிலை காணி வாங்கி வீடுகட்டி இருக்கிறான். என்றார் தேசிகர்.

" ஐயா நீங்கள் சொல்வது உண்மை சிலர் ஆண்வழி பார்த்து பொருள் கொடுப்பார்கள். பெண் பிள்ளைகளுக்கு துரோகம் செய்வார்கள். அப்படி செய்தவர்களின் வீடு சூனியம் வைத்த அதே வீடு மாதிரி அழியும் என்று நீதி சாஸ்திரம் சொல்கின்றது. இதை ஒரு பெருமை பிடித்த உயர் சாதி அதிபரின் வாழ்வில் கண்டனான். கடைசிக்காலம் கால் ஏலாது வீட்டு மறியல் வைத்தியச்செலவு பல லட்சம் ரூபாக்கள். அது தான் புத்தர் சொல்கிறார் வாழ்வில் கர்மவினை வண்டிலை சில்லு தொடர்வது போல் தொடரும் என்று. பின்பு எனக்கு இதைக் கூறி கவலைப் பட்டவர். என்றார் மயில்வாகனம்.

" எனக்கு ஆளை விளங்கி விட்டது அவர் ஒரு முட்டுக்காய்தான். தான் பிடித்த முயலுக்கு மூன்று கால் என்று சாதிப்பார். மூர்க்கனும் முதலையும் கொண்டது விடா என்பது உங்களுக்கு தெரிந்த விடயம் தானே என்றார் தேசிகர்.

" விசுவலிங்கம் ஓவசியர் அரசாங்கத்தை கொள்ளை அடித்து சொத்து சேர்த்தார். மகன் எல்லாம் வித்து கிட்டத் தட்ட இப்ப பூச்சியத்திற்கு வந்து விட்டார். காலம் விதி இரண்டும் ஆறுதலாய்த்தான் பழிவாங்கும் அப்பன் செய்தது பிள்ளைக்கு பிள்ளை செய்தது பிள்ளையின் பிள்ளைக்கு என்று பழமொழி இருக்கல்லோ " நான் மூன்று தலை முறைக்கு பழி வாங்குவேன்" என்று பைபிளும் கூறுவதை நாங்களும் சிந்திக்கவேண்டும்" என்றார் முத்துத் தம்பி.

"இன்னுமொரு விடயம் சிலர் யாருக்கும் தெரியாது என்று பூனை கண்ணை மூடிக் கொண்டு பால் குடிப்பது போல பல பெண்களைக் கெடுப்பினை பிறகு அவர்களின் பரம்பரைப் பெண்கள் அனுபவிக்கேக்க கவலைப் படுவினை. இதை திருவள்ளுவர்

" ஒழுக்கத்தின் எய்துவர் மேன்மை இழுக்கத்தின் எய்துவர் எய்தாய்ப் பழி" என்று மிக அழகாகச் சொல்லி இருக்கிறார். பின்பு அதற்காக கண்ணீர் வடிப்பார்கள். பெண் பாவம் பொல்லாதது. இந்தக் கலியில் பெரிய மனிதர் என்றால் இதை ஒரு தகுதி மாதிரி சில பாவிகள் கருதுகின்றனர் என்றார் ஆசிரியர் மாணிக்கம்.

" நானும் அவதானித்து இருக்கின்றேன். முந்தி ஒரு நாள் மயில்வாகனம் ஐயாவும் சொன்னவர் கலியாணத்திற்கு முன்பு சிசுக் கொலை கருவழிப்பு செய்தவை புத்திரப் பேறு இல்லாது வருந்துகிறார்கள். இதோடு பிதிர்சாபம் உள்ளவர்களுக்கும் புத்திரப் பேறு இல்லை" என்றார் கந்தசாமி.

இந்த கலியிலை சினிமா மோகம் ஆடம்பரம் போட்டி இவை தான் அநேக மனிதர்கள் கஷ்டப்படக்காரணம். இப்ப ரி.வியும் மனிதர்களுக்கு பல வித மோகம் ஏற்படுவதற்கு காரணமாக உள்ளது. அநியாயம் அக்கிரமம் தான் தற்போது சிந்தனையாக உள்ளது. வீடுகளிலை இருக்கிற பிரச்சினைகள் போதாதென்று அதைவேறை பார்த்து மனதைக் கெடுக்கிற வேலையொழிய ஒன்றுமில்லை. கடவுளை வழிபடுவது சும்மா உலக ஒப்பனைக்குத்தான். நெஞ்சு நிறைய பொறாமையும் தலைக்கனமும் தான் எல்லோருடனும் போட்டி. இல்லாதது பொல்லாதது எல்லாம் சொல்லி கடவுளை வா என்றால் தா என்றால் எல்லாம நடக்குமோ? எல்லாம் கலியின் கொடுமை சில மனிதர் கலியின் கிங்ரர் மாதிரி. அதற்கு காரியங்களை இலகு படுத்தி படுவிசுவாசமாக வாழ்கின்றனர். என்றார் பிரசங்கியர் கணபதிப்பிள்ளை.

" பவுல் சாமியார் சொன்னார் ' பெண்ணும் பணமும் தான் மனிதனை விழுத்திறவை' என்று அதே மாதிரி சில ஜனாதிபதிகள் மந்திரிமார் பாதிரிமார் பிரமுகர்கள் மானம் கெட்டு வெறும் மனிதராய் திரியினை தானே. அதெல்லாம் பழி பாவத்தாலை வந்த வினை தானே. படத்திற்கு முகத்தை மறைப்பதையும் கண்டிருப்பியள். ஏனென் றால் தாங்கள் மறைவிலை ஆடியது தெருவிற்கு வந்து விட்டதென்று" என்றார் தேசிகர்.

' கம்போடியா பொல் பொட் ஆட்சி படுகொலைகள் பற்றி சர்வதேச விசாரணை வேண்டுமென இடம்பெயர்ந்த அந்த நாட்டு மக்கள் ஆர்ப்பாட்டம் செய்தனர். 1.7 மில்லியன் மக்கள் கொலை செய்யப்பட்டனர். அதற்கான தண்டனை அவர்களுக்கு கிடைக்காமல் விடாது.

உலகப் போர் குற்றவாளிகளுக்கு தண்டனை கிடைத்தது. அது போல எமது நாட்டு குற்றவாளிகளுக்கும் நிட்சயம் தண்டனை கிடைக்கும். இல்லையேல் நீதி ஏதோ ஒரு விதமாக தண்டிக்கும்.அமெரிக்கா செவ்விந்திய பழங்குடிகளுக்கு செய்ததற்கு இப்போ பல விதமாக அனுபவிக்கின்றது. அப்படிப்பட்ட நாடு எமது பிரச்சினையில் குரங்கு அப்பம் பங்கிட்ட மாதிரி தான் இலாபம் அடையப் பார்க்கின்றது. இந்தியாவும் அப்படித்தான். தந்தை செல்வா சொன்னது போல கடவுள் தான் தமிழரைக்காப்பார். இதுவரை காத்த மாதிரி ஐக்கிய நாடுகள் சபையும் வீட்டோ அதிகார நாடுகளின் சர்வாதிகார அமைப்புத்

(தொடர்ச்சி அடுத்த வாரம்)

இச்சிறுகதை பரிசுக்குரியதென நீங்கள் சிபார்சு செய்ய விரும்பினால், இப்பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டிருக்கும் கூப்பனை நிரப்பி எமக்கு அனுப்பி வைக்கவும்.

## சிறுகதைப் போட்டிக்கான கூப்பன் - 19

தெரிவு செய்யப்படும் சிறுகதைத் தலைப்பு : ....................................................

சிறுகதையின் இலக்கம் : ....................................................

எழுதியவர் பெயர் : ....................................................

சிபார்சு செய்பவர் பெயர் : ....................................................

முகவரி : ....................................................

....................................................

தொலைபேசி இலக்கம் : ....................................................

.................................................... ஆகிய நான்


இச் சிறு கதையை வெற்றிக்கு சிபார்சு செய்கிறேன்.

....................................................

ஒப்பம்

கூப்பனை அனுப்ப வேண்டிய முகவரி

**தினச்செய்தி சிறுகதைப் போட்டி**
**தில்லைக்கட்டி வீதி,**
**சுன்னாகம்.**



## தரம் 11 மாணவர்களுக்கு இலத்திரனியல் புத்ததம்

அடுத்த ஆண்டு முதல் தரம் 11 இன் விஞ்ஞான பாடத்துக்கு அசையும் படங்களைக் கொண்ட மின் உரைப் புத்தகம் (E-Text book) வழங்க கல்வி வெளியீட்டுத் திணைக்களம் நடவடிக்கை எடுத்துள்ளது.

அச்சுப் புத்தகங்களுக்கு மேலதிகமாக சீ.டி. தட்டுடன் இந்த மின் உரைப் புத்தகமும் மாணவரின் கைக்கு வழங்கப்படவுள்ளது. இதற்காக வேண்டி 10 லட்சம் ரூபா செலவிடப்படவுள்ளது. இந்த மின் உரைப் புத்தகங்களை கொள்வனவு செய்வதற்கு 10 இற்கும் மேற்பட்ட நிறுவனங்களிடமிருந்து விண்ணப்பங்கள் கிடைக்கப் பெற்றுள்ளதாகவும் கூறப்படுகின்றது.

முதற்கட்டமாக தரம் 11 இல் அறிமுகம் செய்த பின்னர் ஏனைய வகுப்புக்களுக்கும் அறிமுகம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் கல்வி வெளியீட்டுத் திணைக்கள வட்டாரங்கள் குறிப்பிட்டுள்ளன.

## யாழில் நவீன வசதிகள் கொண்ட கலாச்சார மண்டபத்தின் நிர்மாணப் பணிகள் ஆரம்பம்



இந்திய நன்கொடை நிதித்திட்டத்தின் கீழ் யாழ் மாவட்டத்தில் நவீன வசதிகளுடன் கூடிய கலாச்சார மண்டபம் 1.7 பில்லியன் ரூபா செலவில் நிர்மாணிக்கப்படுகின்றது. இக் கலாச்சார மண்டபமானது யாழ் பொது நூலகம் மற்றும் புல்லுக்குளம் நீர்நிலையை அண்மித்ததாக அமைவதுடன் இந்தியாவின் (PNC) நிறுவனத்தினால் கட்டுமான வேலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இதற்கான ஒப்பந்தம் இந்திய உயர்ஸ்த்தானிகர் அலுவலகத்தின் இந்திய பிரதி உயர்ஸ்த்தானிகர் திரு. அரின்டம் பக்க்ஷி அவர்களும் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு, புனர்வாழ்வளிப்பு, மீள்குடியேற்றம் மற்றும் இந்து மத அலுவல்கள் அமைச்சின் செயலாளர் வே.சிவஞானசோதி அவர்களினதும் முன்னிலையில் 2016 செப்டம்பர் 15ம் திகதி கைச்சாத்திடப்பட்டது.

## சட்டவிரோதமான முறையில் மாணிக்ககல் அகழ்ந்த அறுவர் கைது

(க.கிஷாந்தன்)


பொகவந்தலாவ பொலிஸ் பிரிவிற்குட்பட்ட மாவெலி காட்டுப்பகுதியில் சட்டவிரோதமான முறையில் மாணிக்ககல் அகழ்ந்து கொண்டிருந்த 6 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கிடைத்த இரகசிய தகவலின்படி அன்று இரவு பொலிஸ் விசேட அதிரடி பிரிவினரால் 6 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். கைது செய்யப்பட்டவர்களிடமிருந்து மாணிக்ககல் அகழ்விற்கு பயன்படுத்திய பல உபகரணங்களும் கைப்பற்றப்பட்டுள்ளன.

பொகவந்தலாவ பொலிஸ் பகுதியில் பலர் சட்ட விரோதமான முறையில் இரத்தின கல் அகழ்வதில் ஈடுபட்டு வருகின்றனர் என்றும் பொலிசார் போதிய கவனம் செலுத்துவதில்லை என்றும் பரவலாக குற்றம் சுமத்தப்படுகின்றது. இருந்தபோதும் இச்சம்பவம் தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.



## ஒட்டுசுட்டானில் புதிய பொலிஸ் நிலையம்





(முல்லைத்தீவு)

ஒட்டுசுட்டான் புதிய பொலிஸ் நிலையம் சட்டமும், ஒழுங்கும் மற்றும் தெற்கு அபிவிருத்தி அமைச்சர் சாகல ரத்னாயக்க தலைமையில், விஷேட அதிதிகளான கைத்தொழில், வர்த்தக அமைச்சர் றிசாத் பதியுதீன் அவர்கள் மற்றும் இராஜங்க அமைச்சர் விஜயகலா மகேஸ்வரன் ஆகியோரின் பங்குபற்றுதலுடன் (18ஃ09ஃ2016) அன்று திறந்து வைக்கப்பட்டது.

இந்நிகழ்வில் அதிதிகளாக எம்.பிக்களான சுமந்திரன், சித்தார்த்தன், டாக்டர். சிவமோகன், மஸ்தான், டக்லஸ் தேவானந்தா, சார்ள்ஸ் நிர்மலநாதன் ஆகியோரும், பொலிஸ் மா அதிபர் பூஜித ஜயசுந்தர, வடமாகாண எதிர்க்கட்சித் தலைவர் தவராசா மற்றும் பொலிஸ், இராணுவ உயரதிகாரிகளும் பிரதேசவாசிகளும் பங்கேற்றனர்.





# செயற்கை மார்பக சிகிச்சை செய்துகொண்ட இந்திய நடிகைகள்!

அமெரிக்கா, ஐரோப்பிய பகுதிகளில் பெண்கள் செயற்கை சிலிக்கான் இம்பிளான்ட் முறையில் உடல் பாகங்களை வடிவாக மாற்றிக் கொள்வது இயல்பாகி வருகிறது. இது போன்ற செயற்கை சிலிக்கான் இம்பிளான்ட் செய்து அபாயகரமான விளைவுகளை எதிர் கொண்டவர்களும் இருக்கின்றனர். உலகம் முழுதும் பரவி வரும் இந்த சிலிகான் இம்பிளான்ட் முறையை பயன்படுத்தி இந்திய நடிகைகளும் சிலர் தங்கள் உடல் பாகங்களை அழகாக்கி கொண்டுள்ளனர் என்பது குறிப்பிடத் தக்கது.



ஸ்ரீதேவி

அன்று முதல் இன்று வரை சிக்கென்ற அழகுடன் திகழ்ந்து வரும் மயிலும் செயற்கை மார்பக சிகிச்சை எடுத்துக் கொண்டவர் என கூறப்படுகிறது.



ஷில்பா ஷெட்டி

உடலை வடிவமாக வைத்துக் கொள்ள மார்பகம், புட்டம் மற்றும் மூக்கு போன்ற பகுதிகளில் செயற்கை உடல் வடிவ மாற்ற சிகிச்சை செய்து கொண்டவர்.



கங்கனா ரனாவத்

கங்கனா ரனாவத் சிலிகான் இம்பிளான்ட் செய்து கொண்டுள்ளார்.



மல்லிகா ஷெராவத்

இந்தியாவின் ஹொட் நடிகை மல்லிகா ஷெராவத் ஜாக்கியுடன் கைக்கோர்த்து ஹாலிவுட் வரை கலக்கியவர். இவரும் செயற்கை மார்பக சிகிச்சை செய்து கொண்டார்.



பிபாஷா பாசு

பாலிவுட்டின் செக்ஸி நடிகை என பெயர்பெற்ற பிபாஷாபாசுவும் செயற்கை மார்பக சிகிச்சை எடுத்துக் கொண்டவர் தான்.



ஆயிஷா

முதலில் ஆயிஷா ஒல்லியான உடல்வாகு தான் கொண்டிருந்தார். இவர் கடுமையான செயற்கை மார்பக சிகிச்சை எடுத்துக் கொண்டார். இதனால் பெரியளவில் ஆரோக்கிய பிரச்சினை களை சந்தித்தார்.



பூனம் பாண்டே

சுசர்ச்சைகளுக்கு புகழ் போன நடிகை பூனம் பாண்டே மார்பகங்களுக்கு சிலிக்கான் இம்பிளான்ட் செய்து கொண்டவர்.



ராக்கி சாவந்த்

ஐட்டம் கேர்ளாக திரையில் அறிமுகமான ராக்கி இம்பிளான்ட் செய்து தான் தனது மார்பகங்களை கவர்ச்சியாக மாற்றிக் கொண்டுள்ளார். இதனால் இவர் சில ஆரோக்கிய பிரச்சினைகளையும் சந்தித்தார்.




சுஷ்மிதா சென்

சுஷ்மிதாசென் தான் இந்திய நடிகைகள் மத்தியில் இந்த டிரெண்டை கொண்டு வந்தார். மிஸ் யூனிவர்ஸ் பட்டம் வென்ற இவர் தான் முதலில் செயற்கை மார்பக சிகிச்சை செய்து கொண்டார்.

# ஆன்மீகம்



"ஓம் நமோ பகவதே தக்ஷ்ணாமூர்த்தயே மஹ்யம் மேதாம் ப்ரஞ்ஞாம் ப்ரயச்ச ஸ்வாஹா"



வாருங்கள்.

குரு பெயர்ச்சியானது 2. 8. 2016 தொடக்கம் 2. 09. 2017 வரை பன்னிரு ராசிகளுக்கும் மாற்றலான பலாபலன்களை செய்து கொண்டு வருகிற வேளை முக்கியமாக மேட ராசிக்கு 5 இலும் மிதுனத்திற்கு 4 இலும் கற்கடகத்திற்கு 3 இலும் கன்னிக்கு ஜென்மத்திலும் துலாத்திற்கு 12 இலும் தனுவிற்கு 10 இலும் கும்பத்திற்கு அட்டமத்திலும் சஞ்சரித்துக் கொண்டிருக்கும் நிலைப்பாட்டில் இந்த ராசிக்காரர்கள் விசேடமாக ஸ்ரீ தெட்சணா மூர்த்தி சுலோகத்தினை தவறாது உச்சரிப்பது மிக அவசியமாகும்.

கொடிய வினைகள் மாறும் வண்ணம் கைகண்ட மருந்தாக வல்வினையை வேரறுத்து பேரானந்த பெருவாழ் வினை எட்டுவதற்கு குருவின் அருளே

## குரு பலன் பெற்றிட ஸ்ரீ தெட்ஷணாமூர்த்தி ஸ்லோகத்தை பாராயணம் செய்யுங்கள்


ஸ்ரீ தெட்சணாமூர்த்தியின் அருளைப் பெற்று வியாழ பகவானின் கொடிய பலாபலன்களின்றும் விடுபடவும் ஊழிற் பெரு வலியினின்றும்தப்பிப்பிழைக்கவும்தினமும் காலை வேளையில் ஸ்ரீ தெட்சணாமூர்த்தி சுலோகம் 108 ஐயும் பாராயணம் செய்து கடைத்தேற்றி விடும். அந்த வகையில் ஸ்ரீ தெட்சணாமூர்த்தி குருபகவானின் நாயகனாகி பன்னிரு ராசிக்காரர்களும் நற்பலன்களை இன்னார் இனியார் எனப் பாராது திருவருளைப் பொழிந்தே கை தூக்கி விடுவார்.

## ஸ்ரீ தெட்ஷணாமூர்த்தி 108 ஸ்லோகம்

ஓம் அறிவுருவே போற்றி
ஓம் அழிவிலானே போற்றி
ஓம் அடைக்கலமே போற்றி
ஓம் அருளாளனே போற்றி
ஓம் அல்ல அறுப்பவனே போற்றி
ஓம் அடியாரன்பனே போற்றி
ஓம் அகத்துறைபவனே போற்றி
ஓம் அகந்தையழிப்பவனே போற்றி
ஓம் அற்புதனே போற்றி
ஓம் அபயகரத்தவனே போற்றி
ஓம் ஆல் கீழமர்ந்தவனே போற்றி
ஓம் ஆன்மீகநாதனே போற்றி
ஓம் ஆச்சாரியனே போற்றி
ஓம் ஆசரக் காவலே போற்றி
ஓம் ஆக்கயவனே போற்றி
ஓம் ஆதரிப்பவனே போற்றி
ஓம் ஆதிபகவனே போற்றி
ஓம் ஆதாரமே போற்றி
ஓம் ஆழ்நிலையானே போற்றி
ஓம் ஆனந்த உருவே போற்றி
ஓம் இருள் கெடுப்பவனே போற்றி
ஓம் இருமை நீக்குபவனே போற்றி
ஓம் இசையில் நினைப்பவனே போற்றி
ஓம் ஈடேற்றுபவனே போற்றி
ஓம் உய்யவழியே போற்றி
ஓம் ஊழிக் காப்பே போற்றி
ஓம் எந்தையே போற்றி
ஓம் எளியோர்க்காவலே போற்றி
ஓம் ஏகாந்தனே போற்றி
ஓம் ஏடேந்தியவனே போற்றி
ஓம் ஒளிப்பிழம்பே போற்றி
ஓம் ஓங்காரநாதமே போற்றி
ஓம் கயிலைநாதனே போற்றி
ஓம் கங்காதரனே போற்றி
ஓம் கலையரசே போற்றி
ஓம் கருணைக்கடலே போற்றி
ஓம் குணநிதியே போற்றி
ஓம் குருபரனே போற்றி
ஓம் சதாசிவனே போற்றி
ஓம் சச்சிதானந்தமே போற்றி
ஓம் சந்தரூபனே போற்றி
ஓம் சாமப்பிரியனே போற்றி
ஓம் சித்தர் குருவே போற்றி
ஓம் சித்தியளிப்பவனே போற்றி
ஓம் சுயம்புவே போற்றி
ஓம் சொற்பதற்கடந்தவனே போற்றி
ஓம் ஞானமே போற்றி
ஓம் ஞானியே போற்றி
ஓம் ஞானநாயகனே போற்றி
ஓம் ஞானோபதேசிகனே போற்றி
ஓம் தவசீலனே போற்றி
ஓம் தனிப்பொருளே போற்றி
ஓம் திருவுருமே போற்றி
ஓம் தியானோஸ்வரனே போற்றி
ஓம் தீரனே போற்றி
ஓம் தீதழிப்பவனேபோற்றி
ஓம் துணையே போற்றி
ஓம் தூயவனே போற்றி
ஓம் தேவாதிதேவனேபோற்றி
ஓம் தேவருமறியா சிவனே போற்றி
ஓம் நன்னெறிக்காவலே போற்றி
ஓம் நல்யாக இலக்கேபோற்றி
ஓம் நாகப்புரியோனே போற்றி
ஓம் நான்மறைப்பொருளேபோற்றி
ஓம் நிமலனேபோற்றி
ஓம் நிலவணியானேபோற்றி
ஓம் நிறைந்தவனே போற்றி
ஓம் நீறணிந்தவனே போற்றி
ஓம் நெற்றிக் கண்ணனேபோற்றி
ஓம் நோய் தீர்ப்பவனே போற்றி
ஓம் பசுபதியே போற்றி
ஓம் பரப்பிரம்மனே போற்றி
ஓம் பிரம்மச்சாரியே போற்றி
ஓம் பிறப்பறுப்போனேபோற்றி
ஓம் பேறளிப்பவனே போற்றி
ஓம் பேசாமற்றெவிவிப்பவனே போற்றி
ஓம் பொன்னம்பலனேபோற்றி
ஓம் போற்றப்படுபவனே போற்றி
ஓம் பெரும் பேறே போற்றி
ஓம் மறைகநட்தவனே போற்றி
ஓம் மறையாப்பொருளே போற்றி
ஓம் மஹேசுவரனே போற்றி
ஓம் மங்கலமளிப்பவனே போற்றி

(தொடர்ச்சி...22 இல்)

# அமாவாசை தினத்தில் நல்ல காரியங்களை தொடங்கலாமா?



புதிய காரியங்களை வளர்பிறையின் துவக்க நாளிலிருந்து ஆரம்பிப்பது நலமென்று நிறையப்பேர் நம்புகிறார்கள். அமாவாசைக்கு பிறகு வரும் நாட்களை வளர்பிறை நாட்கள் என்று அழைக்கிறோம். எனவே புதிய காரியங்களை வளர்பிறையின் துவக்க நாளிலிருந்து ஆரம்பிப்பது நலமென்று நிறையப்பேர் நம்புகிறார்கள். சிலர் அமாவாசை என்பது சந்திரன் இல்லாத நாள் அதாவது பூமிக்கு சந்திரன் தெரியாது அன்று இருட்டாக இருக்கும். எனவே இருட்டு பொழுதில் நற்காரியங்களை செய்ய கூடாது என்றும் சொல்கிறார்கள். இதில் எது சரி எது தவறு என்று முடிவெடுப்பது மகா சிரமமான காரியம். அவரவர் நம்பிக்கை அவரவர்க்கு என்று பொத்தாம் பொதுவாக சொல்லிவிட்டு போகலாம். ஆனால் அது சரியல்ல.

இதை ஜோதிட சாஸ்திரம் மற்றும் வானியல் சாஸ்திரத்தின் அடிப்படையில் பார்க்க வேண்டும். அமாவசை தினத்தில் சூரியனும் சந்திரனும் ஒரே நேர்கோட்டில் சந்திக்கின்றன அன்று இவ்விரு கிரகங்களும் ஒரே ராசியில் இருக்கும் அந்த நேரத்தில் இரண்டு கிரகங்களில் ஆகர்ஷன சக்தியும் மிக அதிகமாக இருக்கும்.

இதனால் மனித மூளையில் துரிதமான மாற்றங்கள் நிகழும் வாய்ப்பு நிறைய உண்டு அதாவது மனம் கொந்தளிப்பான நிலையிலேயே இருக்கும். ஏறக்குறைய கடலை போல எனவே அந்த நாட்களில் சுப காரியங்கள் செய்வது கூட தவறு அல்ல ஆனால் புதிய காரியங்களை துவங்குவது தவறு என்பதே சரியான கருத்தாகும்.

# புத்திரன் என்பவன்...

மனித வாழ்க்கை சில நற்காரியங்களுக்காக ஏற்பட்டது. அவரவர்களுக்கு விதிக்கப்பட்ட நியம, அனுஷ்டானங்களை சரிவர செய்ய வேண்டியது கடமை.

கணவனும், மனைவியும் குடும்பம் நடத்தி, சமைத்து, சாப்பிட்டு, ஏதோ மனம் போன படி குதூகலமாக வாழ்க்கை நடத்திக் கொண்டிருந்தால் அது இல்லறம் அல்ல. குடும்ப வாழ்க்கையில் பல தேவ பூஜை, அதிதி பூஜை, பந்துக்களுக்கு உதவுவது, நல்ல காரியங்களுக்கு உதவி செய்வது என பல விஷயங்கள், "தர்மம்' என்று சொல்லப்பட்டுள்ளது.

இதில், "சந்ததி விருத்தி' என்பதும் முக்கியமானதாகச் சொல்லப்பட்டுள்ளது. கணவன் - மனைவி என்றால், அவர்களுக்குக் குழந்தை பிறக்க வேண்டும். அதிலும், ஒருபுத்திரன்உண்டாகவேண்டும். "புத்திர பாக்கியம்' என்று உயர்வாகச் சொல்வர். அப்படிப் பிறக்கும் புத்திரனால் பித்ருக்கள், பித்ருலோகம் போவதாக நம்பிக்கை. வாழையடி, வாழையாக வம்சம் விருத்தியாகிக் கொண்டே போனால் தான் பித்ருக்களுக்குப் புண்ணியலோகம் கிடைக்கும்.

அதனால், புத்திரனில்லாதவர்கள், புண்ணிய தீர்த்தங்களில் நீராடுவதும், பிர சித்தி பெற்ற ஆலயங்களுக்கு சென்று வருவதும், விரதங்கள் அனுஷ்டிப்பதும் வழக்கம். எவ்வளவு செல்வமிருந்தாலும், எவ்வளவு போகமிருந்தாலும் ஒரு மழலைச் செல்வத்துக்காக ஏங்கு பவர்கள், கடவுள் அருளால் ஒரு குழந்தை பிறந்து விட்டால் மகிழ்ச்சிக் கடலில் மூழ்குவர். இதில், மற்றொரு விஷயமும் உள்ளது. அப்படி பிறக்கும் புத்திரன், "சத்புத்திர'னாக இருக்க வேண்டும். இது ரொம்பவும் முக்கியம். அதற்கும் புண்ணியம் செய்திருக்க வேண்டும். பஞ்ச பாண்டவர்களைப் போன்ற சத்புத்திரர்களும் உண்டு துரியோதனன் போன்ற துஷ்ட பிள்ளைகளும் உண்டு. சத்புத்திரர்களை அடைந்தால் அதுவே பெரும்பாக்கியம்.

புத்திரனை வேண்டி பரமேஸ்வரனைக் குறித்து தவம் செய்தார் மிருகண்டு முனிவர். அவர் முன் தோன்றி, "பதினாறு வயதுடைய சத்புத்திரன் வேண்டுமா, நூறு வயதுடைய துஷ்ட புத்திரன் வேண்டுமா?' என்று கேட்டார் பரமேஸ்வரன். முனிவர், "நூறு வயதுடைய துஷ்ட புத்திரன் வேண்டாம் பதினாறு வயதுள்ள சத்புத்திரனை அனுக்கிரகம் செய்யுங்கள்' என்று வேண்டினார். அதன்படி மார்க்கண்டேயன் என்ற சத்புத்திரன் உண்டானான்.

அவன், பதினாறு வயது வந்ததும், தன் பெற்றோர் கவலையுடன் இருப்பதைப் பார்த்து, கவலைக்கான காரணத்தை அறிந்து, பரமேஸ்வரனை ஆராதித்து, காலனை வென்று, என்றும் பதினாறு வயதுடையவனாக விளங்கும்படி வரம் பெற்றான். பிறகு, மார்க்கண்டேய மகரிஷி என்று பிரகாசித்தான்.

புத்திரன் என்றால், சத்புத் திரனாக இருக்க வேண்டும். இப்படிப்பட்டவர்களால் தனக்கும், பெற்றோருக்கும், குடும்பத்துக்கும், கீர்த்தியும், கவுரவமும் ஏற்படும். குடிகாரப் பிள்ளையையும், திருட்டுப் பிள்ளையையும் பெற்று வாழ்நாள் முழுவதும் வேதனைப்படும் பெற்றோருக்கு அவனால் என்ன பயன்? தாயாரின் மண்டையை உடைக்கிறவனையும், தந்தைமீது வழக்கு போடுகிறவனையும் நாம் பார்க்கிறோமல்லவா! இவர்களெல்லாம் பிள்ளையாகப் பிறந்த கடன்காரர்கள். கடனை வசூல் செய்து கொண்டு போக வந்தவர்கள் என்று தான் விவரித்துள்ளனர் பெரியோர்.


இல்லறம்நடத்தவேண்டும். நற்பண்புகள் வாய்ந்த மனைவி கிடைக்க வேண்டும். சத்புத்திரன் உண்டாக வேண்டும். இது தான் ஒருவனுக்கு கிடைக்க வேண்டிய பெரிய பாக்கியம். இப்படி கிடைத்தவன் புண்ணியவான்!



# சந்தர்ப்பவாதிகள்

## அத்தியாயம் 20

ஏ.ஜே.ஞானேந்திரன்



பெரிய எதிர்பார்ப்புகளுடன் ஒன்றைத் திட்டமிட்டு விட்டு, முற்றிலும் நினைத்திராத ஓர் இடையூறு குறுக்கிடும்போது மனிதன் நிலைகுலைந்து விடுகின்றான். சங்கிலித் தொடராக வரவிருக்கும் நிகழ்வுகள் இனி தன் வாழ்வை எந்த வழியில் பாதிக்கப் போகின்றது என்று கவலைப்படத் தொடங்கி விடுகின்றான்.

திடட்டமிட்டபடி,
இலங்கைப் பயணம்,
பெண் பார்க்கும் படலம் ,
இரண்டு குடும்பங்களும் மன
தால் இணந்தது, இப்போதைக்கு எழுத்தை

முடித்து விட்டு, கல்யாணத்திற்கு நாள் பார்ப்பது என்று எல்லா விடயங்களிலும் இரு குடும்பங்களும் பிணக்கில்லாமல் ஒற்றுமையாகப் பேசிக் கொண்டது என்று எல்லாமே சுமுகமாக முடிந்தபோது அளவுக்கு அதிகமாக ஆனந்த வயப்பட்டது சத்யன்தான்.

ஆனால் அதே சத்யன், தன் அப்பா குளிக்கும்போது பாத்ரூமில் நெஞ்சை அமுத்திக் கொண்டு விழுந்தபோது அதிர்ந்து போனான். அப்பாவை நேரத்தோடு ஒரு தனியார் மருத்துவமனையில் சேஉத்துவிட்டாலும், அவன் மனம் கலங்கியபடிதான் இருந்தது.

அப்பாவுக்கு பைபாஸ் ஆபரேஷன் செய்ய வேண்டிய நிர்ப்பந்தம் இருக்கின்றது என்று டாக்டர் அவனிடம் தெரிவித்தபோது, உலகமே சட்டென இருண்டு விட்டது போன்ற உணர்வுக்கு ஆளாகி விட்டான்.

சத்யன் வீட்டுக்குச் சற்றுத் தள்ளியிருந்த ஒரு வயல் வெளிப் பக்கமாக சத்யனும் நிவேதாவும் நடந்து கொண்டிருந்தார்கள். ஆனி மாத சோழகக் காற்று ஆளைப் புரட்டியெடுக்குமாற்போல் வீசிக் கொண்டிருந்தது.

" அப்பாவுக்கு ஒப்பிரேஷன் டேற் பிக்ஸ் பண்ணியாச்சோ சத்யன்? "

" யேஸ் நிவேதா.. இன்னும் ஐந்து நாளில் அவருக்கு ஒப்பிரேஷனாம்.. "

" கனக்க யோசிக்க வேண்டாம் சத்யன். இதில பயப்பிடறதுக்கு ஒண்டுமில்லை. "

"இல்லை நிவேதா அப்பா ஒரு டயபிற்றிக் பேஷன்ட்.. "

" ஸோ வாட்? இந்தக் காலத்தில இதெல்லாம் பெரிய விஷயமில்லை.. ஒப்பிரேஷனுக்கு காசு கட்டவேணுமே. சத்யன் எவ்வளவு தொகையெண்டாலும் யோசிக்க வேணாம். ஜஸ்ட் ரெல் மீ.. "

நன்றியுணர்வோடு அவளைப் பார்த்தான் சத்யன். பல இலட்சங்களை இந்த ஒப்பிரேஷன் விழுங்கப் போவது அவனுக்குத் தெரியும். தான் கேட்காமல், தானாகவே பணஉதவி செய்யவரும் நிவேதாவின் பெருந்தன்மையான குணம் அவனுக்கு மிகவும் பிடித்திருந்தது.

" தாங்ஸ் எ லொட் நிவேதா" என்றான் கண்ணில் நீர் வராத குறையாக உணர்ச்சிப் பெருக்கோடு.

திடீரெனப் பலமாக அடித்த காற்று, நிவேதாவின் கையிலிருந்த கச்சான் பாக்கட் சுருளை அள்ளிக் கொண்டு போயிற்று. கச்சான் காற்றில் சிதறியது.

" அப்பப்பா என்ன பலமான காற்று" என்று தலைமுடியைக் கைகளால் கோதிக் கொண்டாள்.

இப்பொழுது அவர்கள் வயல் வெளியைக் கடந்து ஆள் நடமாட்டமுள்ள ஓர் ஒழுங்கைக்கு வந்திருந்தார்கள்.

" அப்பாவை கிளினிக்கில போய்ப் பார்ப்பமே." சத்யன்தான் நிவேதாவைக் கேட்டான்.

" ஒகே லெட்ஸ் கோ" என்றாள் நிவேதா.

அந்தப் பாதையில் வந்த ஓர் ஓட்டோவைக் கைகாட்டி நிறுத்தி இருவரும் ஏறிக் கொண்டார்கள். ஓட்டோ மருத்துவமனையை நோக்கி விரைந்தது.

கார்த்தி தன் அறையில் வழக்கம்போல கையில் பியர் டின்னுடன் ரீவிக்கு முன்பாக உட்கார்ந்திருந்தார். அமெரிக்க மல்யுத்த ரசிகர் அவர். வன்முறைகளுக்குப் பஞ்சமில்லாத மல்யுத்தம் இது. இரத்தக் களரியில் முடியும் இந்த மல்யுத்தம் முழுக்க முழுக்க வித்தியாசமானது. சட்டத்தைக் கையில் எடுத்துக் கொண்டு ஏமாற்று வேலைகள் செய்வது, கையில் அகப்பட்டதையெல்லாம் எடுத்து இரத்தம் ஓட ஓடத் தாக்குவது, அடைக்கப்பட்ட இரும்புக் கூண்டுக்குள் இரண்டு மிருகங்கள் போல, இரத்தம் வழிய வழிய அடிபடுவது, நடுவரை அடித்து நொருக்குவது என்று இந்த அமெரிக்க குத்துச் சண்டையில் அநியாயங்கள் அனேகம் அனேகம்.

ஆனால் அதை விரும்பிப் பார்ப்பவர்கள் ஏராளம். அதில் கார்த்தியும் ஒருவர். இணைய உலா வசதி இருந்தால் போதும். யூரியூப் தேடித் தேடி புதுப் புது மோதல்களை பார்ப்பவருக்கு அள்ளி வழங்கும்.

அப்படி ஒரு மோதலைத்தான் அன்று கார்த்தி பார்த்து ரசித்துக் கொண்டிருந்தார். நேற்று கொஞ்சம் அதிகமாகவே சமைத்திருந்ததால், அவருக்கு இன்று சமையல் வேலை இல்லை. மாலை நேரம் இந்த மோதல்களைப் பார்க்க வசதியையும் ஏற்படு த்திக் கொடுத்தது..

முதல் இரண்டு ரின்கள் எப்படிக் காலியாகியது என்று அவருக்கே தெரியவில்லை. அந்த அளவுக்கு விறுவிறுப்பான மோதல்களை அன்று அவரால் பார்க்க முடிந்தது. இந்த யுரியூப்பின் வசதி இருக்கிறதே அசத்தலான வசதி ஒரு பெயரைக் கொடுத்தால் போதும். சங்கிலித் தொடராக பல வீடியோக்கள் வந்து சிக்கும். அவருக்கு விருப்பமான முரட்டுத்தனமான கட்டுமஸ்தான உடல்வாகு கொண்ட ஜோண் சீனா என்ற அமெரிக்கரின் பல்வேறு மாட்சுகளை அவர் வரிசையாகப் பார்த்து ரசித்துக் கொண்டிருந்தார்.

இவர்கள் உடம்பில் சதையா அல்லது இரும்பா இருக்கின்றது என்று அவருக்குள் அடிக்கடி சந்தேகம் எழுவதுண்டு. உலோக நாற்காலிகளால் அடிஅடியெண்டு துவைத்து எடுப்பார்கள். மேடையிலுள்ள இரும்புத் தூண்களில் தலையைத் தூக்கி அடிப்பார்கள். எதற்கும் அசையாது இவர்கள் இரும்பு உடம்பு.

மூன்றாவது டின் பியர் வயிற்றுக்குள் இறங்கியது. வாய்க்கு டேஸ்டாக வறுத்த முட்டை பிளேட்டில் இருந்தது. அதில் கொஞ்சம் கிள்ளி வாய்க்குள் போட்டுக் கொண்டார்.

ஒரு கணம் அவருக்கு எல்லாமே இன்பமயமாக இருப்பது போல் இருந்தது.

கண்கள் குத்துச் சண்டைகளைப் பார்த்து ரசிக்க, பியரைச் சுவைத்துக் கொண்டு, வறுத்த முட்டையைச் சுவை பார்ப்பது நன்றாகத்தான் இருக்கின்றது என்று அவர் அந்தக் கணம் நினைத்துக் கொண்டார். இந்தக் கூத்துக்கள் தன் உடல் நிலையை எந்த அளவுக்குத் தாக்குகின்றது என்பதை அப்பொழுது அவர் நினைத்துப் பார்க்கத் தயாராக இல்லை

காலிங் பெல்லை யாரோ அழுத்தினார்கள்.

மெல்ல எழுந்து ஹலோ என்றார் கார்த்தி

அண்ணை நான் சுந்தரம்.

மறுமுனையில் பழகிய குரல். கார்த்தி பட்டனை அழுத்தி விட்டு அறைக் கதவைத் தறநதவர, மறுபடியும குததுச சணடையை ரசிக்க ஆரம்பித்து விட்டார்.

"அண்ணை றெஸ்லிங் பார்க்கிறியள் போல கிடக்கு" என்று அறைக்குள் நுழைந்த சுந்தரம் கார்த்தி நீட்டிய பியர் ரின்னை நன்றி யோடு வாங்கிக் கொண்டான்.

சுந்தரமும் ஒழுங்காக ரெஸ்லிங் மாட்ச்சுகள் பார்த்து ரசிப்பவன்.

"நான் இண்டைக்குச் சமைக்கேல்லை. நேற்றேச் சாப்பாடுதான் இருக்கு. பரவாயில்லைத்தானே சுந்தரம். "

"என்ன அண்ணை இப்பிடிச் சொல்லுறியள். இருக்கிறதை இரண்டு பேரும் சாப்பிடுவம். இதிலென்ன இருக்கு? "

எப்பொழுதுமே குடிப்பவர்கள் கொஞ்சம் அதிகமாகக்குடித்துவிட்டால், அளவுக்கு மீறிய உற்சாகம் பிறப்பதுண்டு. அந்த உற்சாகத்தில் கருமித்தனம் பறந்துபோய் பெரிய வள்ளல்களாகி விடுவதுமுண்டு.

பொதுவாகவே கையிறுக்கம் கார்த்திக்கிடம் அதிகம். இன்று வயிறுக்குள் பேயாட்டம் போட்ட பியர் அவரை ஒரு பாரி யாக்கியது. மெல்ல எழுந்தார். தன் குட்டி அலுமாரியைத் திறந்து, விஸ்கி போத்தலை எடுத்து வந்தார். திறந்து கிளாஸில் ஊற்றி சுந்தரத்திடம் நீட்ட

"என்னண்ணை இண்டைக்கு உங்கிட பேர்த்டேயோ"

என்றான் நமட்டுச் சிரிப்போடு.

"என்ன விசர்க்தை கதைக்கிறா சுந்தரம். பேர்த்டே வந்தாத்தான் விஸ்கி குடிக்கோணுமோ? "


"சும்மா ஒரு கதைக்குச் சொனன்னான் அண்ணை."

ஒரு பெரிய நாற்காலியால் மூர்க்கத்தனமாக ஒருவன் அடிக்க நெற்றிப்பொட்டிலிருந்து இரத்தம் வழிய ஆரம்பித்தது. அடித்தவன் நிறுத்தவில்லை. மீண்டும் இன்னொரு பலமான அடி. வேதனையில் துடித்துக் கொண்டிருந்தான் கீழே கிடந்தவன்.

"நல்லா வாங்கிக் கட்டிறான் போல கிடக்கு" என்ற சுந்தரம் கார்த்தி பக்கம் திரும்பிய போது கார்த்தி தட்டுத் தடுமாறி பிரிட்ஜிலிருந்து எதையோ எடுக்க முயல்வது தெரிந்தது. அடுத்த வினாடி கார்த்தி அடிபட்ட மரம் போல கீழே விழ கையிலிருந்த பியர் ரின்னை அப்படியே போட்டு விட்டு நண்பன் தரையில் கிடந்த பக்கம் ஓடினான் சுந்தரம்.

(தொடரும்...)

# புரட்டாசி முதல் சனி



புரட்டாசி முதல் சனிக்கிழமையை முன்னிட்டு கோவை - ஈச்சனாரி ஸ்ரீதேவி பூதேவி சமேத சுந்தரராஜ பெருமாள் கோயிலில் சுவாமிக்கு பழங்களால் அலங்காரம் செய்யப்பட்டது.

# விளையாட்டு

## சம்பியன் கிண்ணம் வென்றது யாழ் பல்கலை அணி




நாட்டிலுள்ள அனைத்து பல்கலைக்கழகங்களுக்கிடையிலான உதைபந்தாட்டப் போட்டியில் யாழ் பல்கலைக்கழக அணி சம்பியன் பட்டத்தை சுவீகரித்தது. இலங்கை பல்கலைக்கழகங்களுக்கிடையிலான 12 ஆவது கால்பந்தாட்ட தொடர் வயம்ப பல்கலைக்கழக மைதானத்தில் இம் மாதம் முதலாம் திகதி தொடக்கம் 12 ஆம் திகதி வரை இடம் பெற்றது.

இத் தொடரின் இறுதிப்போட்டி வயம்ப பல்கலைக்கழக மைதானத்தில் இடம் பெற்றது. இறுதிப் போட்டியில் யாழ்ப்பாண பல்கலைக்கழக அணி, ஸ்ரீ ஜெயவர்தனபுர பல்கலைக்கழக அணியை எதிர்த்தாடியது.

மிகவும் விறுவிறுப்பாக இடம்பெற்ற இப் போட்டியில் இரு அணிகளும் ஒன்றையொன்று விட்டுக்கொடுக்காத வகையில் பந்துப்பரிமாற்றங்களை மேற்கொண்டன. இறுதியில் யாழ் பல்கலைக்கழக அணி ஒரு கோலைப் போட்டு 1-0 என போட்டியில் வெற்றிபெற்று சம்பியன் பட்டத்தை சுவீகரித்தது.




## பராலிம்பிக்கில் இலங்கைக்கு வெண்கலப்பதக்கம்

ரியோ பராலிம்பிக் போட்டிகளில் இலங்கைக்கு கிடைத்த முதலாவது பதக்கம் இதுவாகும். கோப்பாகெபானா கோட்டைப் பிரதேசத்தில் அமைந்தள்ள எஞ்சென்ஹாலு ஒலிம்பிக் விளையாட்டரங்கில் இலங்கை நேரப்படி புதன் அதிகாலை 2.33 மணியளவில் ஆரம்பமான இவ். 46 பிரிவு ஆண்களுக்கான ஈட்டி எறிதல் போட்டியில் தினேஷ் பிரியந்த ஹேரத் வெண்கலப் பதக்கம் வென்றார்.

இவர் ஈட்டியை 59.23 மீற்றர் தூரம் எறிந்ததுடன் இது அவரது தனிப்பட்ட சிறந்த தூரப் பெறுதியாகும்.

இப் போட்டியில் இந்தியாவின் தேவேந்த்ரா 63.97 மீற்றர் தூரம் ஈட்டியை எறிந்து உலக சாதனையுடன் தங்கப் பதக்கத்தை சுவீகரித்தார். சீனாவின் சுன்லியாங் குவோ (59.93 மீற்றர்) வெள்ளிப் பதக்கத்தை வென்றார்.

பராலிம்பிக் வரலாற்றில் பிரதீப் சஞ்சயவுக்கு அடுத்ததாக பதக்கம் ஒன்றை வென்றெடுத்த இரண்டாவது இலங்கையர் தினேஷ் பிரியந்த ஹேரத் ஆவார்.

## கோலூன்றிப் பாய்தலில் புதிய தேசிய சாதனை.






தெல்லிப்பழை மகாஜனா கல்லூரி மாணவி ஜெகதீஸ்வரன் அனித்தா, கோலூன்றிப்பாய்தலில் புதிய இலங்கை சாதனையை நிலைநாட்டியுள்ளார்.

தியகம மஹிந்த ராஜபக்ஷ விளையாட்டரங்கில் இவ் வாரம் நிறைவு பெற்ற 86 ஆவது சேர் ஜோன் டாபட் சிரேஷ்ட மெய்வல்லுநர் போட்டிகளிலேயே 20 வயதுக் குட்பட்ட பெண்களுக்கான கோலூன்றிப் பாய்தலில் 3.35 மீற்றர் தாவியதன் மூலம் அவர் புதிய இலங்கை சாதனைக்கு சொந்தக்காரரானார்.

இதன் மூலம் இவ் வருடம் நடைபெற்ற கனிஷ்ட தேசிய மெய்வல்லுநர் போட்டிகளில் வலல்ல ஏ.ரட்நாயக்க மத்திய கல்லூரியைச் சேர்ந்த ஹர்ஷனி தர்மரட்னவினால் நிலைநாட்டப்பட்டிருந்த 3.34 மீற்றர் என்ற இலங்கை சாதனையை அனித்தா முறியடித்தார்.

“இலங்கை சாதனையை முறியடித்ததையிட்டு நான் பேரானந்தமும் பெருமையும் அடைகின்றேன். நாட்டின் வேறு பகுதிகளில் வசதி படைத்த பாடசாலைகளுடன் போட்டியிட்டு சாதனை புரிவது என்பது இலகுவான காரியமல்ல. யாழ். மண்ணில் போதிய வளங்கள், வசதிகள் இல்லாத நிலையிலும் சாதனை நிலைநாட்ட முடிந்ததையிட்டு எனது பயிற்றுநர் சின்னையா சுபாஷ்கரன், கல்லூரி அதிபர், முன்னாள் அதிபர்கள், முன்னைய பயிற்றுநர்கள், ஆசிரியர்கள் அனைவருக்கும் எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவிக்கின்றேன்".

மேலும்,“2014இல் நடைபெற்ற அகில இலங்கை பாடசாலைகள் விளையாட்டு விழாவில் 19 வயதுக்குட்பட்ட பிரிவில் போட்டியிட்டு அப்போது அனோமா கருணாவன்ஷவுக்கு சொந்தமாக இருந்த 3.32 மீற்றர் இலங்கை சாதனையை சமப்படுத்தியபோது என்னில் ஓர் உத்வேகம் பிறந்தது. என்னால் இலங்கை சாதனை ஒன்றை நிலைநாட்ட முடியும் என என்னை அப்போது உற்சாகப்படுத்திய அனைவருக்கும் குறிப்பாக எனது தந்தை மற்றும் சகோதரர்களுக்கும் இன்று இந்தப் புதிய சாதனையை சமர்ப்பணம் செய்கின்றேன்,” என அனித்தா கூறினார்.

இப்போட்டியில் சாதனையை நிலைநாட்டிய பெருமை அனித்தாவையே சாரும்.

## மாரியப்பனுக்கு புதிய கார்




பாரா ஒலிம்பிக்கில் தங்கம் வென்ற மாரியப்பன் தங்கவேலுவுக்கு பிரபல கார் நிறுவனம் ஜீப் மற்றும் பரிசுத்தொகையை வழங்கவிருப்பதாக அதிரடியாக அறிவித்துள்ளது.


பிரேசிலில் நடைபெற்ற ஊனமுற்றோருக்கான ஒலிம்பிக் போட்டியில் உயரம் தாண்டுதலில் இந்தியாவின் தமிழகத்தைச் சேர்ந்த மாரியப்பன் தங்கவேலு தங்கம் வென்று சாதனை படைத்தார்.

இவருக்கு மத்திய அரசும், மாநில அரசும் பரிசுத்தொகை அறிவித்துள்ளது. இந்நிலையில் பிரேசிலில் நடைபெற்ற ரியோ ஒலிம்பிக்கில் வெள்ளி மற்றும் வெண்கலப்பதக்கம் வென்ற சிந்து, சாக்க்ஷி மாலிக், மற்றும் தீபா கர்மாகர் ஆகியோருக்கு சொகுசு கார் வழங்கப்பட்டது.

தற்போது பாரா ஒலிம்பிக்கில் தங்கம் வென்ற மாரியப்பன் தங்கவேலுவுக்கு எதுவும் கிடையாதா என பலரும் சமூகவலைத்தளங்களில் கேள்வி எழுப்பினர். அதன் பயனாக பாரா ஒலிம்பிக்கில் தங்கம் வென்ற மாரியப்பன் தங்கவேலுவுக்கு மஹேந்திரா கார் நிறுவனம் ஜீப் மற்றும் பரிசுத்தொகையாக 10 லட்சம் ரூபாயும் வழங்கப்போவதாக தெரிவித்துள்ளது. இதே போன்று சாக்க்ஷிமாலிக்கிக்கும், சிந்துவுக்கும் மஹேந்திரா நிறுவனம் கார் ஒன்றை பரிசாக அளித்துள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கது.

தினச்செய்தி
என்றும் உங்களுடன்





# மாடுகள் இறைச்சிக்கு

## வெட்டப்படுவதை உடன் தடுத்து நிறுத்தவும்

வடபகுதியில் உள்ள உணவகங்களில் மாட்டிறைச்சிக்கறி, கொத்துரொட்டிகள், மாட்டிறைச்சி சார்ந்த உணவுகள் விற்பனை செய்யப்படுவது உடனடியாக நிறுத்தப்பட வேண்டும் என்ற கோரிக்கைகள் வலுத்து வருகின்றன.

வடபகுதியில் பெரும்பான்மையாக வசிக்கும் தமிழர்கள் அநேகமாக இந்து சமயத்தைச் சேர்ந்தவர்கள். இந்து சமயத்தின் முதன்மைக் கடவுள் சிவபெருமான். சிவனின் வாகனம் இடபம். எனவே பசு மாடுகளைக் கொன்றுஇ கறி சமைத்து உண்பது இலங்கை வாழ் சைவ மக்கள் மத்தியில் மிகவும் வெறுக்கத்தக்க விடயமாக உள்ளது.

பசுமாடுகளை கறிசமைத்து உண்பது சைவ மக்களின் மனங்களை பண்படுத்துவதுடன் மக்களினால் விரும்பத்தகாத ஒன்றாகவும் உள்ளதாக பல சைவ மக்கள் தினச்செய்திக்கு கருத்துத் தெரிவித்தனர்.

இது சம்பந்தமாக, திருக்கேதீஸ்வரம் ஆலயத்தின் முன்னாள் பிரதம குருவும் தற்போதும் குருக்களாக கடமையாற்றும் திரு பி. பாலசுப்பிரமணியக்குருக்களை தொடர்பு கொண்டு கேட்ட போது, பசுவதைக்கும் மாட்டு இறைச்சிக்கும் எதிராக குரல் கொடுத்தார்.

திருக்கேதீஸ்வரம் புனித பூமியாக அரசாங்கத்தினால் பிரகடனப்படுத்தப்பட்டு விட்டது. இதன் பிரகாரம் சிவனின் இடப வாகனமும் புனிதப் பிரகடனத்திற்குள் உள்ளடங்குகின்றது. எனவே மாட்டினைக் குறிக்கும் இடபமும் புனித மிருகமாகவே அரசினால் ஏற்கனவே பிரகடனப்படுத்தப்பட்டு விட்டது.

எனவே புனிதமான மிருகமாக கருதப்படும் மாடுகளை கொன்று இறைச்சிக்காக உண்பது அருவருக்கத்தக்க,வெறுக்கத்தக்க,விரும்பத்தகாத ஒரு விடயம் என பாலசுப்பிரமணியக் குருக்கள் கூறினார்.

வடக்கில் உள்ள உணவகங்களில் அண்மைக்காலமாக மாட்டிறைச்சிக்கறி சார்ந்த உணவுகள் விற்பனை செய்யப்பட்டு வருதாக அறியப்படுகின்றது.இவ்வாறு உணவகங்களில் மாட்டிறைச்சி விற்பனை செய்யப்படுவது விரும்பத்தகாத செயலாகும்.

இந்தியாவில் மாடுகள் கொல்லப்படுவதை தடுப்பதற்கு அந்த நாட்டின் அரசியல் சட்டத்தில் இடம் கொடுக்கப்பட்டிருக்கின்றது. சென்ற 2005 ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் 26 ஆம் திகதி இந்திய உச்ச நீதிமன்றம் வரலாற்றுச் சிறப்பு மிக்க தீர்ப்பினை அளித்தது.



இதன் படி இந்திய அரசியல் சாசனத்தில் குறிப்பிட்டவாறு 'மாடுகளை இறைச்சிக்காக வெட்டுவதும்இ விற்பனை செய்வதும் தடைசெய்யப்பட்டுள்ளதாக' தனது தீர்ப்பில் உச்ச நீதிமன்றம் உறுதிப்படுத்தியது. இந்தியாவின் 29 மாநிலங்களில் 24 மாநிலங்களில் மாடுகளை இறைச்சிக்காக வெட்டுவது,விற்பனை செய்வதை சட்டபூர்வமாக தடை செய்துள்ளார்கள். அதே போல் பௌத்த சமயத்திற்கும் இந்து சமயத்திற்கும் முக்கியத்துவம் கொடுக்கும் இலங்கையில் மாடுகளை இறைச்சிக்காக வெட்டப்படுவதை தடைசெய்ய வேண்டும் என்ற கோரிக்கை நாளுக்கு நாள் வலுத்து வருகின்றது. சென்ற 2013 ஆம் ஆண்டு மே மாதம் 24 ஆம் திகதி , கண்டி தலதா மாளிகைக்கு முன்னால் மாடுகள் இறைச்சிக்காக வெட்டப்படுவதை தடை செய்ய வேண்டும் என்று கோரி பௌத்த பிக்குவான ' ஸ்ரீ பொகவந்த இந்திர ரட்ண தேரோ' தீக்குளித்து மரணமடைந்தார்.எனவே மாடுகளை இறைச்சிக்காக அடிக்கும் பழக்கம் உடனடியாக இலங்கையில் தடை செய்யப்படவேண்டும். மேலும் வடபகுதியில் உள்ள உணவகங்களில் மாட்டிறைச்சி சார்ந்த அனைத்து உணவுகளும்விற்பனை செய்வது முற்றாக நிறுத்தப்பட வேண்டும்.





மேலும், வடபகுதியிலுள்ள பிரதேச சபைகள் மாட்டை வெட்டி இறைச்சியாக்கி விற்பனை செய்ய வழங்கிய அனுமதிகளை உடனடியாக இரத்துச் செய்ய வேண்டும் என்ற கோரிக்கையும் வலுவடைந்து வருகின்றது.

வடபகுதி மட்டுமல்லாமல் தமிழ்மக்கள் வாழும் அனைத்துப்பிரதேசங்களிலும் இறைச்சிக்காக மாடுகள் வெட்டப்படுவதையும் விற்பனை செய்யப்படுவதும் முற்றாக தடைசெய்யப்பட வேண்டும் என்பதே அனைவரினதும் எதிர்பார்ப்பாகும்.

இப் பத்திரிகை சுன்னாகத்திலுள்ள தினச்செய்தி நிறுவனத்தினால் கோப்பாயிலுள்ள நாவலர் அச்சகத்தில் அச்சிடப்பட்டு செப்ரம்பர் 17, 2016 அன்று வெளியிடப்பட்டது.